www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

16-31 மார்ச் '89

4-9

விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

தி.மு.க. எம்.பி. வை.கோபால்சாமியின் 'மர்மமான' ஈழப்பய ணம் குறித்து அவரும் அவருடைய 'தந்தையும் தாயுமானவர்' கருணாநிதியும் கூறும் காரணகாரிய விளக்கங்கள் கழக உடன்பிறப்புக்களே நம்பும்படியாக இல்லை.

''வை.கோபால்சாமிக்கு தமிழீழ மக்கள் மீதான பற்று, விடுதலைப்புலிகள் மீதான பாசம் காரணமாக உணர்ச்சிவசப்பட்டு ஈழத்துக்கு சாகசப்பயணம் போய் வந்தார். அது அவருடைய சொந்த முடிவு அடிப்படையிலானது. கட்சிக்கோ கருணாநிதிக்கோ அதிலே சம்பந்தமும் விருப்பமும் இல்லை; அதற்கு அனுமதியும் அவசியமும் இல்லை'' என்று அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஆனால் மத்திய உளவு நிறுவனமான ''ரா''வின் தயாரிப்பில் கருணாநிதி கதைவசனம் எழுதி இயக்கி கோபால்சாமி கதாநாயகனாக நடித்த அரசியல் நாடகம்தான், ''வை.கோ.வின் ஈழப்பயணம்'' என்று நம்புவதற்கான அடிப்படைகள் நிறையவே உண்டு.

''பிரபாகரனின் மெய்க்காப்பாளர்கள் 12 பேர் என்னை அழைத்துப் போனார்கள். ஈழத்துக்குப்போய் இறங்கிய பிறகு பிரபாகரனைச் சந்திக்க விரும்புவதாகச் செய்தி அனுப்பினேன். தமிழக முதல்வர் சார்பாக வந்தேனா என்று அறிய விரும்பினார் பிரபாகரன். கலைஞருக்குத்

வை.கோபாலசாமி



# வை.கோ.வின் ஈழப் பயணம் மீண்டும்''ரா''வின் கைவரிசை!

தெரியாமல் என் சொந்த முடிவுப்படி வந்தேன் என்று சொன்னேன்'' என்று கூறுகிறார் வை.கோ. எந்த அடிப்படையில் வருகிறார் என்பதை அறியாமலா புலிகள் இவரை அழைத்துப்போனார்கள்?

''ஐரோப்பாவுக்குப் போவதாக உறவினரிடம் கூறிவிட்டுப் போனேன்'' என்கிறார் வை.கோ. ஆனால் அவர் குவைத் போயிருப்பதாகவே அவர்கள் சொன்னார்கள். அவரைக் காணவில்லை என்றதும் எந்த நாட்டிற்கு விசா பெற்றுள்ளார் என்பதைக் கண்டறிவது அரசுக்கு ஒன்றும் சிரமமில்லை. இருப்பினும் அது எந்த விசாரணையும் நடவடிக்கையும் எடுக்கவில்லை. போய் வந்த பிறகும் எதுவும் செய்வதாகத் தெரியவில்லை. ஈழத்தில் வை.கோ. தங்கியிருந்த முகாமை இந்திய இராணுவம் தாக்கியது என்கிறார். ஆனால் அவர் திரும்பும்போது கடற்படை முற்றுகையிட்டுத் தடுத்துப் பிடிக்காமல், தப்பித்துவர அனுமதித்தது இயலாமையினாலா?

ஈழத்துக்குப் புறப்படும்முன்பு பிப்ரவரி 5ந் தேதி வை.கோ. எழுதிய கடிதம் பிப்ரவரி 24ந் தேதிதான் தனக்குக் கிடைத்தது என்று கூறுகிறார் கருணாநிதி. ஆனால் வை.கோ. திரும்பி வந்து பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டியளித்ததற்கு ஒருநாள் முன்புதான், அதாவது மார்ச் 3ந் தேதிதான் வெளியிட்டார். வை.கோ. சென்னை திரும்பிய பிறகு அவரைத் தலைமறைவாக வைத்துக்கொண்டு கருணாநிதிக்கு முகத்துதிபாடும் அக்கடிதம் வெளியிடப்பட்டது என்று நம்புவதற்கே இடமுள்ளது!

கருணாநிதி ஈழப்பிரச்னையில் இன்னொரு எம்.ஜி.ஆராக மாறிவருகிறார். ஆளும் கட்சிக்குரிய பொறுப்போடு செயல்பட வேண்டியுள்ளது என்று அவருடைய கட்சிக்காரர்கள் சப்பைக்கட்டுப் போடுகிறார்கள். அரசுத் தலைவருக்குரிய நிதானத்தோடு அணுகுகிறார் என்று ஈழ எதிர்ப்பு ஏடுகள் பாராட்டுகின்றன. அதேசமயம் இதுவரை ஈழத்தமிழருக்காக ஆவேசக்குரல் கொடுத்த வை.கோ. ''எல்லாவற்றையும் என் தலைவரிடம் கூறிவிட்டேன். அவர் நல்லதைச் செய்வார். ஈழப்பிரச்னையைப் பிரதமரிடம் பேசித் தீர்ப்பார். ஈழத்தமிழர் நலன்கள் அவரது கரங்களில் பாதுகாப்பாக உள்ளது. இனி நான் செய்வதற்கு எதுவுமில்லை'' என்று நழுவிக்கொள்கிறார்.

மீண்டும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தை - சமரச முயற்சி என்கிற நாடகமாடி புலிகள் எதற்கும் சம்மதிக்காமல் அடாவடித்தனமாக, வறட்டுத்தனமாக இருக்கிறார்கள் என்று காட்டி இதுவரை தி.மு.க. பேசிவந்த புலிகள் ஆதரவு நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதற்கான ஓர் உத்திதான் ராஜீவ் - கருணாநிதி மேற்கொண்டுள்ளது. ஏனெனில் புலிகளுடன் சமரசம் பேசி அவர்களுக்கு விட்டுக்கொடுப்பதற்கான சலுகைகள் எதுவும் இந்திய - இலங்கை அரசிடம் இப்போது இல்லை!

100 அல்லது 150 கோடி என்று ''புலிகள் நிவாரண நிதி'' தருவதாக மட்டுமே பேரம் பேசமுடியும். ஈழ மாகாண அதிகாரத்தை மற்ற குழுக்களுடன் பகிர்ந்துகொள்ள புலிகள் சம்மதிக்க முடியாது. முழுமையான அதிகாரத்தைத்தரவும் மற்ற குழுக்களும் இந்திய -இலங்கை அரசும் முன்வரமுடியாது. அந்தக் குழுக்களைப் பலியிட இவை தயங்காது என்பதல்ல. எந்தத் தீர்வும் புலிகள் மற்றும் இந்திய -இலங்கை அரசுகள் அம்பலப்பட்டுப் போவதாகவே இருக்கும். ஏனென்றால் இம்மாதிரியான தீர்வுகள் எதுவும் மீண்டும் இந்தியாவின் ஈழப்போருக்கு முக்கிய நிலைமைக்குத் திரும்பிப் போவதாகும். இதற்காகவா 3000 பேர் பலியிடப்பட்டனர்? 1500 கோடி ரூபாய்க்கு மேலே வீணடித்தனர்? என்கிற கேள்விக்கு என்ன பதில் கூறமுடியும்? மேலும் ஆட்சிச் சலுகைகள், இந்திய இராணுவ பாதுகாப்பின்றி போட்டிக்குழுக்கள் ஒருநாள்கூட ஈழத்தில் உயிரோடிருக்க முடியாது - புலிகள் அவர்களை விட்டுவைக்க மாட்டார்கள்!

இதையெல்லாம் அறிந்துதான் மீண்டும் ஒரு சுற்று பேச்சுவார்த்தை நாடகமாடுகிறார்கள் ராஜீவும், கருணாநிதியும். இதன் ஒரு பகுதியாக இந்திய இராணுவ விமானம் மூலம் வை.கோ. யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டார். ''ரா'' மூலம் நடக்கும் இந்த முயற்சிகளுக்கு இராணுவத்துக்கு முரண்பாடு ஏற்பட்டது. ஈழத்திலுள்ள இராணுவத் தளபதி கல்கத் சென்னை வந்து கருணாநிதியைச் சந்தித்து விளக்கம் பெற்ற பின் வை.கோ. பிரபாகரனைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டார். பிரபாகரனுடன் கருணாநிதி - ராஜீவின் பேரங்களைச் சொல்லி பதில் வாங்கிக்கொண்டு வை.கோ. திரும்பினார்.

அதற்குள்ளாகவே வை.கோ.வின் ஈழப்பயணம் பத்திரிக்கைகள் மூலமாக அம்பலப்பட்டுப் போனது. அதற்குக் காரணம் அரசியலுக்குள் அரசியல் செய்து தனது சொந்த பிரபலம் -ஆதாயத்தையும் தேடிக்கொள்ள வை.கோ. பத்திரிகைகளுக்குத் தகவல் கொடுத்ததுதான். வெறும் பகடைக்காயாக இருந்து பலியாவதற்கு அரசியல்வாதிகள், குறிப்பாக கழக உடன்பிறப்புகள் ஒன்றும் இளிச்சவாயர்கள் அல்ல! ''வை.கோ. செய்தது பொறுப்பற்ற செயல்'' என்று கருணாநிதி சாடினாலும், விதிமுறைகளை மீறி வை.கோ. ஈழம் போய் வந்தார் என்பது ராஜீவுக்குத் தெரிந்தாலும் இவர்கள் அனைவரும் எழுதப்படாத ஒப்பந்தத்தில் கட்டுண்டு இருக்கிறார்கள்.

வை.கோவின் ஈழப்பயணம் இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக இன்னொரு பாடத்தை ஈழத்தமிழர்களுக்கு நினைவுறுத்துகிறது. பாசிச ராஜீவ் கும்பலுடன் தமது பேரங்களைத் தொடங்குவதற்குப் புலிகள் எப்போதும் தயாராக உள்ளனர். எதிரியுடன் போரிடுவதும், பேச்சுவார்த்தை என்ற அரசியல் தந்திரத்தை மேற்கொள்வதும் தவிர்க்க முடியாத இரு உத்திகள் என்று புலிகள் வாதிடலாம். ஆனால் ஆயுதமேந்திய அமைப்பு என்கிற பலத்தைக்கொண்டு ஈழ மக்களின் விருப்பத்தை அறியாத, ஈழ மக்களுக்கு இரகசியமான எந்தவொரு ஒப்பந்தத்தையும் போட்டுக்கொண்டு அவர்கள் மீது திணிப்பது ஏற்கக் கூடியதில்லை. எனவே பகிரங்கமான நியாயமான தீர்வுக்கு முயல்வதே சரியானது. பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை தவிர வேறெதும் ஈழ மக்களுக்கு விடுதலையையும் சுதந்திரத்தையும் தராது!

படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

நான்காமாண்டு

9

16-31 மார்ச் '89

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50

ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள் (வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா : U S $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்

ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'

21, பாலாஜிசிங் தெரு...


## ★ விசுவாசிகள் நியமனம் ★ கவர்ச்சி பட்ஜெட். ★ பஞ்சாப்: பாசாங்கு செய்யும் தீர்வுகள்

கடந்த சில வாரங்களாக பாசிச ராஜீவ் கும்பல் மேற்கொண்டு வரும் அரசியல், பொருளாதார நடவடிக்கைகள் அடுத்து வரவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களைக் குறிவைத்துள்ளன; அவற்றிலே வெற்றிபெற்று மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கான முயற்சிதான் இவை என்பதை ஒளிவு மறைவின்றிக் காட்டுகின்றன. குறிப்பாக மத்தியிலும் மாநிலங்களிலும் கட்சி மற்றும் ஆட்சி நிர்வாக மாறுதல்கள் தேர்தல் கால பட்ஜெட்டுகள், பஞ்சாப் பிரச்சினையின் மீது காட்டும் அக்கறை ஆகியன. தேர்தல் நெருங்கும்போது ஆளும்கட்சிகள் இப்படி ஏதாவது தனக்குச் சாதகமான நடவடிக்கைகளில் ஈடுபடுவது புதிதல்ல; வழக்கமானவைதான். இருந்தபோதும் இப்போது மேற்கொள்ளப்படுபவை எதிர்விளைவுகளைத் தோற்றுவிக்கும்; தேசத்துக்கும் மக்களுக்கும் நெருக்கடிகளைக் கொண்டுவரக் கூடியவை என்று எச்சரிக்க வேண்டியுள்ளது.

தேர்தல் காலங்களில் சாத்தியமான தில்லுமுல்லுகள் செய்து தனது வெற்றிக்குப் பாடுபடும் வகையிலான முதல்வர்களையும், மாநிலக் கட்சித் தலைவர்களையும், கவர்னர்களையும் நியமிக்கிறது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் அரசியல் சிக்கல் -நெருக்கடிகளைத் தோற்றுவித்து அவற்றை முடக்கும் வகையிலான கவர்னர்களை நியமிக்கிறது. மத்திய உளவுத்துறை இயக்குநர்களை, எச்.ஏ.முராரி மற்றும் டி.வி.ராஜேஸ்வர் ஆகியோரை முறையே அரியானா, மேற்குவங்க கவர்னர்களாக நியமித்துள்ளது. ஏற்கனவே காங்கிரசு விசுவாசிகளான குமுத்பென் ஜோஷி ஆந்திராவிலும், ராம்துலாரி சின்கா கேரளாவிலும், அலெக்சாண்டர் தமிழ்நாட்டிலும் கவர்னர்களாக உள்ளனர். ராஜீவின் ஆயுதபேர ஊழல்களில் முக்கியப் பங்காற்றிய இராணுவ அமைச்சகச் செயலாளர் எஸ்.கே.பாட்நகர், பிரதமரின் பிரதான செயலாளராக இருந்த சரளா கேர்வால், காங்கிரசின் பொதுச் செயலாளராக இருந்த ஜெகந்நாத் பகாடியா ஆகியோர் புதிய கவர்னர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். "நேருவுக்கும் இந்திராவுக்கும் விசுவாசமாக இருந்ததைப் போலவே உங்களிடமும் இருப்பேன் என்று உறுதியளிக்கிறேன்" என ராஜீவைப் பார்த்து பாராட்டு விழாவிலேயே பகாடியாக கூறினார். காங்கிரசு கட்சி பிரமுகர்கள் மட்டுமல்ல, ஐ.ஏ.எஸ் அதிகாரிகள், உளவுத்துறையினர் முன்னாள் இயக்குநர்கள் மற்றும் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதிகள் ஆகியோர் தான் மாநில ஆளுநர்களாக உள்ளனர்.

பாசிச ராஜீவ் கும்பலின் ஆட்சி மற்றும் கட்சித் தில்லுமுல்லுகள் அனைத்திற்கும், பொய்ப் பிரச்சாரங்களுக்கும் ஆலோசனை கூறிவந்த கோபி அரோரா நிதித்துறை செயலாளராகவும்; இன்னொரு விசுவாசியான பி.முராரி செய்தி ஒலிபரப்புச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். கவர்ச்சித் திட்டங்களை வகுத்துப் பிரச்சாரம் செய்வதற்கு இந்த ஏற்பாடு. ராஜீவின் சொந்தப் பாதுகாப்புப் பணியாற்றி பிறகு இராணுவச் செயலாளராக இருந்த டி.என்.சேஷன் அமைச்சரவைச் சிறப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்து அமைச்சரவைச் செயலாளராக இவரும், ரிசர்வ் வங்கிக் கவர்னராக வெங்கிடராமனும் பதவி உயர்வு பெறுவார்கள். ஃபார்பாக்ஸ் முதலிய விவகாரங்களில் ராஜீவ் கும்பலுக்கு உடந்தையாக இருந்த நிதித்துறை செயலாளர் தான் இந்த வெங்கிடராமன்.

ஆட்சியில் செய்துவரும் இந்த மாற்றத்துக்குப் பொருத்தமாக கட்சியில் பழைய பெருச்சாளிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதிகாரத் தரகர்கள் என்று குற்றஞ்சாட்டி ஒதுக்கப்பட்ட நீக்கப்பட்ட நபர்களுக்கு மீண்டும் பதவியளிக்கப்படுகிறது. இந்திராவின் அந்தரங்கச் செயலாளராக இருந்த ஆர்.கே.தவான்; பீகாரிலே போட்டி -அதிருப்திக் குழப்பம் விளைவித்துவந்த ஜகன்னாத மிஸ்ரா, கட்சியைவிட்டே ஓடிய -துரத்தப்பட்ட பிரணவ முகர்ஜி, நந்தினி சத்பதி, ஊழல்புலி அந்துலே போன்றவர்கள் இப்போது ராஜீவின் முக்கிய ஆலோசகர்களாகி உள்ளனர். இவர்களைக் கொண்டு ஏதாவது தில்லுமுல்லுகள் செய்துதான் ஆட்சியை மீண்டும் பிடிக்க முடியும் என்று ராஜீவ் கும்பல் முடிவு செய்துள்ளது.

கடந்த நான்கு பட்ஜெட்டுகளிலும் மக்கள் மீது கடும் வரிச்சுமை யேற்றியும், தரகு முதலாளிகள் - நிலப்புரபுக்களுக்குப் பல சலுகைகள் அளித்தும் வந்த பாசிச ராஜீவ் கும்பல் இப்போது முற்போக்கு முலாம் பூசிய பட்ஜெட்டைப் படைத்துள்ளது. "ஏழை எளியவர்கள் மீது வரி கிடையாது; பணக்காரர்கள் - ஆடம்பரப் பொருட்கள் மீதுதான் வரிவிதிப்பு; கூடவே பல வறுமை ஒழிப்பு - வீடு - வேலைவாய்ப்புத் திட்டங்கள்" என்று இதன் பெருமையைப் பீற்றிக் கொள்ளுகிறது. பொருளாதார ரீதியில் முன்னேற்றகரமானது; முற்போக்கானது என்பது வெறும் பித்தலாட்டம் தான்.

பண வீக்கம் - விலையேற்றம் இருக்காது என்று காட்டுவதற்காக பற்றாக்குறை - துண்டு விழுவது 9312 கோடியிலிருந்து 7012 கோடி ரூபாயாக குறைந்துவிட்டது என்கிறார்கள். உண்மையில் 2300 கோடி ரூபாய் எண்ணெய் வர்த்தகத்தில் ஏற்கனவே விலையேற்றி ஈட்டியதாகும். ஏழைகள் மீது வரிவிதிப்பு கிடையாது என்றாலும் 1,287 கோடி ரூபாயாக புதிய, மறைமுக வரி குறிப்பாக ஆயத்தீர்வைகள் விதிக்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் தேசிய வருவாயில் வரிவிதிப்புத் தொகை குறைந்து வருகையில் இப்படி வரி போட்டுள்ளது இறுதியாக ஏழைகள் தலையிலேயே விடியும்! 6000 கோடி ரூபாய்க்கு வருவாய் உயர்ந்திருப்பினும் 908 தான் வளர்ச்சித் திட்டங்களுக்கானது. 3000 கோடி ரூபாய் அந்நியக் கடன் வட்டிக்கு போய் விடுகிறது. சென்ற ஆண்டு வருவாயில் 35 சதவிகிதமாக இருந்து இது 50 சதவிகிதமாகியுள்ளது; கடன் சுமையிலே நாடே மூழ்கிப் போவதைக் குறிக்கும் அபாய எச்சரிக்கை இதுவாகும். எனவே புதிய வரிவிதிப்பு இல்லாமல் திட்ட முதலீடுகள் சாத்தியமே இல்லை; அடுத்த ஆண்டு குறைந்தது 3000 கோடி ரூபாய்க்கு பெரும் வரிச்சுமை ஏற்படும்

படிப்பகம்

www.padippakam.com

ஒதுக்கப்பட்டுள்ளது. வளர்ச்சிக்கோ, முற்போக்குக்கோ இடமில்லாத இந்த பட்ஜெட் வந்தவுடனே பங்குச் சந்தையில் 4 சதவிகித அளவு பங்கு மதிப்புகள் வீழ்ச்சி அடைந்துவிட்டன. அரசு நிதிநிறுவனங்கள் மூலம் பணத்தைக்கொட்டி பங்குச் சந்தை வீழ்ச்சியை நிமிர்த்தினார்கள்.

காலிஸ்தான பிரிவினை உட்பட பஞ்சாப் பயங்கரவாதிகளை எதிர்க்கட்சிகள் ஆதரிப்பதாக கொஞ்சமும் கூச்சமின்றிப் புளுகிய ராஜீவ். இப்போது பஞ்சாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சில முன்முயற்சிகளை மேற்கொள்வதாக நாடகமாடுகிறார். ஐந்தாண்டுகளாக ஜோத்பூரில் சிறைபட்டுக் கிடக்கும் தடுப்புக்காவல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கடுமையான பிரிவுகள் ரத்தாகும். பயங்கரவாத நடவடிக்கைகளால் மிகவும் பாதிக்கப்படும் பகுதிகளில் மட்டும் கலவரப்பகுதிகள் சட்டம் அமுலில் இருக்கும். ''விசேஷக் கோர்ட்டுகள்'' சட்டம் தளர்த்தப்படும்; பயங்கரவாதத் தடைச் சட்டம் மிகமிக அவசியப்படும் போது மட்டுமே பிரயோகிக்கப்படும். இவை தவிர பல பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று அரசு அறிவித்துள்ளது உண்மையில் இதுவும் கூட பித்தலாட்டம்தான். 184 ஜோத்பூர் கைதிகளில் 78 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டுவிட்டனர். மற்ற நடவடிக்கைகள் பெயரளவிலான மாற்றத்தையே கொண்டுவரும். ஏனெனில் அரசு பயங்கரவாதத்தைத் தீவிரமாக்குவதற்கான நடவடிக்கைகள் மற்றொருபுறம் மேற்கொள்ளப்படுகின்றன.

சீக்கிய பயங்கரவாதிகளில் இரு பிரிவையும், அகாலிகளில் ஒரு பிரிவைபும் வைத்துக்கொண்டு அவர்களைக் பிளவுபடுத்தி ஆதாயம் தேடும் ராஜீவின் பழைய யுக்தியின் தொடர்ச்சிதான் இது.

அதுமட்டுமல்ல பஞ்சாபில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அரசு பயங்கரவாதம் நிலவுகிறது என்று சர்வதேச அளவில் கடும் கண்டனத்துக்கு ஆளாகியுள்ளது. இதைக் காரணம் காட்டி இந்தியாவுக்கான வர்த்தக சலுகைகளை ரத்துசெய்யும் சட்டம் கொண்டுவர அமெரிக்காவில் ஒரு முயற்சி நடந்தது. அதை அமெரிக்க அரசு நிராகரித்துவிட்டபோதும், பஞ்சாப் விவகாரத்தில் ஏதாவது முன்முயற்சி எடுக்கும்படி அமெரிக்கா நிர்பந்திக்கிறது. மேலும் பஞ்சாப் பிரச்சினை நீடிப்பதும், அதைக் கிளிறிக் கொண்டே இருப்பதும் இந்து மதவெறியைத் தூண்டி தேர்தல் ஆதாயம் அடைய உதவும் என்றும் ராஜீவ் கும்பல் நம்புகிறது.

இப்படி எதிர்வரும் தேர்தலைக் குறிவைத்து பாசிச ராஜீவ் கும்பல் செயல்படுவதன் விளைவாக மாநிலங்களில் அரசியல் நெருக்கடிகள் முற்றும்; பொருளாதாரச் சுமைகள் இப்போது மறைமுகமாகவும், எதிர்காலத்தில் நேரடியாகவும், பெருமளவு மக்கள் மீது ஏற்றப்படும்; மதவெறி -பயங்கரவாதம் தொடருவதோடு அதைக்காட்டி கடும் அடக்குமுறைகள் ஏவப்படும். எனவே பாசிச ராஜீவ் கும்பலின் எத்தணிப்புகளைக் கண்டு ஏமாந்துவிடாமல் முறியடிக்க வேண்டும். ■

# செகந்திராபாத் சதி வழக்கு: புரட்சியாளர்கள் விடுதலை புதிய அடக்குமுறை தொடர்கிறது...



ஆந்திராவில் கம்யூனிசப் புரட்சியாளர்கள் மீதும், புரட்சிகர எழுத்தாளர்கள் மீதும் 1974, ஆகஸ்ட் 19ல் சோடிக்கப்பட்ட செகந்திராபாத் சதி வழக்கு, 14 1/2 ஆண்டு விசாரணைக்குப் பிறகு இப்போது தீர்ப்பு வெளியாகியுள்ளது. ''கொலை, கொள்ளை, சூறையாடல், போலீசாரைக் கொன்றொழிப்பது முதலான நடவடிக்கைகளில் ஈடுபட்டு அரசைக் கவிழ்க்கும் சதியில் இறங்கினர்; அதற்காக ரகசிய சதியாலோசனைக் கூட்டங்கள் நடத்தினர்; மக்களை புரட்சியில் இறங்குமாறு தூண்டினர்'' என்று புரட்சியாளர்கள் மீது பொய் வழக்கு சோடிக்கப்பட்டது. தோழர்கள் கொண்டபள்ளி சீதாராமையா (இன்றைய மா-லெ கட்சி மக்கள் யுத்தக் குழுவின் தலைவர்), சத்தியமூர்த்தி, முக்கு சுப்பா ரெட்டி, மல்லிகார்ஜுன சர்மா (அந்நாளில் முற்போக்கு இளைஞரணியின் தலைவர்) ஆகியோர் மீதும், ஆந்திர புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த தோழர்கள் கே.வி.ரமணாரெட்டி (இன்றைய அகில இந்திய புரட்சிப் பண்பாட்டு மையத்தின் பொதுச் செயலாளர்), வரவரராவ் எம்.டி.கான், புரட்சிக்கவிஞர் செரபண்ட ராஜு ஆகியோர் மீது செகந்திராபாத் சதிவழக்கு தொடரப்பட்டு சிறையிடப்பட்டனர். இதேபோல 20க்கும் மேற்பட்ட சதி வழக்குகள் 1969லிருந்து 1972க்குள் கம்யூனிசப் புரட்சியாளர்கள் மீது ஏவப்பட்டன.

ஆந்திராவின் பாசிச கொலைவெறி பிடித்த முதல்வர் அஞ்சையா காலத்தில் இவ்வழக்கு தொடரப்பட்டது. அதன்பிறகு 3 பொதுத் தேர்தல் நடந்து முடிந்தன. 5 முதல்வர் மாறிமாறி ஆட்சி செய்தனர். ஆனால் இச் சதிவழக்கின் விசாரணை நத்தை வேகத்தில்தான் நகர்ந்தது.

இதற்கிடையே சிறையில் கொடூர சித்திரவதைக்கு ஆளான புரட்சிக்கவிஞர் தோழர் செரபண்ட ராஜு பிணையில் வெளிவந்த சிறிது காலத்தில் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தார். பிணையில் வெளிவந்த சில தோழர்கள் தலைமறைவாகி புரட்சிகர நடவடிக்கையைத் தொடர்ந்தனர். அவர்களில் இருவரை நர வேட்டையாடிவிட்டு ''போலீசுடனான மோதலில்'' அவர்கள் மாண்டு போனதாக அரசும் போலீசும் கதை கட்டியது. மற்றவர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கும் வேதனைக்கும் நடுவே வழக்கை நடத்திக் கொண்டிருந்தனர்.

இச்சதி வழக்கை விசாரிக்க சிறப்பு கோர்ட், மூன்று அரசுத்துறை வழக்கறிஞர்கள், புரட்சியாளர்களுக்காக தனி கொட்டடி என்று ஆந்திர அரசு ரூ.40 லட்சத்துக்கும் மேலாகச் செலவிட்டுள்ளது. இதிலிருந்தே அரசின் அரக்கத்தனத்தை உணர முடியும்.

இச்சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தோழர்களையும் அவர்தம் குடும்பத்தாரையும் ஓயாமல் தொல்லைப்படுத்திவிட்டு, பதினாலரை ஆண்டுக்குப்பின் இவர்கள் எந்த குற்றமும் செய்யவில்லை என்று கடந்த பிப்ரவரி 27 அன்று இறுதித் தீர்ப்பு வெளியாகியுள்ளது. இவ்வழக்கின் இறுதித் தீர்ப்பை வாசித்த நீதிபதி ராமசர்மா, ''இவர்கள் அரசுக்கு எதிராக யுத்தம் தொடுக்க சதி செய்யவில்லை, அரசு வழக்கறிஞர்கள் இதற்கு ஆதாரமாக அவர்கள் ஆயுதங்கள் வாங்கினார்கள் என்று குறிப்பிடும் வாதம் ஏற்புடையதாக இல்லை. பேசுவது, எழுதுவதன் மூலம் மக்களை புரட்சியில் பங்கேற்க அறைகூவல் விடுப்பது தேசத் துரோகமாகிவிடாது; அரசுக்கு எதிரான சதியாகிவிடாது. உண்மையில் புரட்சி என்பது முற்போக்கானது. நமது சட்டத்தின் வழிகாட்டும் நெறிமுறைகள் சோசலிசத்தை அடைவதே லட்சியமாக குறிப்பிடுகின்றன'' என்று கூறி தோழர்களை விடுதலை செய்வதாக அறிவித்தார்.

இவ்வழக்கில் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்யப்பட்டிருப்பினும்கூட தோழர்கள் இன்னமும் அடக்குமுறையின் நிழலிலேயே உள்ளனர். இதுபோன்ற இன்னும் பல பொய் வழக்குகள் தோழர்கள் மீது சோடிக்கப்பட்டிருப்பதை வைத்து, அவர்களைச் சிறையிடத் துடிக்கிறது அரசு. நாடுதழுவிய அளவில் தோழர் வரவராவை நிபந்தனையின்றி விடுதலை செய்யக்கோரும் இயக்கம் காரணமாகவும், பாசிச என்.டி.ஆரின் அடக்குமுறையும் மனித உரிமை மீறலும் அம்பலப்பட்டதன் காரணமாகவும், இந்த வழக்கில் ஒருபுறம் சாதகமான தீர்ப்பு வழங்கிவிட்டு, மறுபுறம் கம்யூனிசப் புரட்சியாளர்களை நர வேட்டையாடுவதற்காக சிறப்பு போலீசுப் படையையும், 4 மாநிலங்களில் கூட்டாக வேட்டையாக சிறப்பு போலீசு மையத்தையும் மத்திய அரசின் உதவியுடன் நிறுவியுள்ளது பாசிச சன்னியாசியின் அரசு. இந்த பித்தலாட்டத்தை பரந்துபட்ட மக்களிடம் அம்பலபடுத்தி வரும் புரட்சியாளர்கள், தங்கள் போராட்ட ஆயுதத்தை மேலும் கூர்மைப்படுத்தி முன்னிலும் தீவிரமாக புரட்சிப் பாதையில் முன்னேறி வருகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

## வரதட்சிணைப் படுகொலைக்கு எதிராக....



திருச்சியில் 2.2.89 அன்று செந்தணீர்புரம் பகுதியில் நடந்த பானுமதியின் மரணம் தற்கொலையல்ல கொலைதான் என்பதை விளக்கியும், கணவன் வீட்டாருக்கு சாதகமாக ஓட்டுக்கட்சிகளும் போலீசும் செயல்படுவதைக் கண்டித்தும், அம்பலப்படுத்தியும் 28.2.89 அன்று மாலை அப்பகுதியில் மக்கள் கலைஇலக்கிய கழகத்தின் திருச்சிக்கிளை பொதுக்கூட்டம் நடத்தியது. இதில் தோழர் முத்துவும், தோழர் தமிழ்மணியும் சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்திற்கு பகுதி மக்கள் 1000க்கும் மேற்பட்டவர்கள் திரண்டு வந்து ஆதரவளித்தனர். இதில் பெரும்பான்மையாக பெண்கள் வந்து அமர்ந்து தொடக்கம் முதல் இறுதிவரை இருந்ததைக்கண்டு பொறுக்காத ஓட்டுக்கட்சிகள் "எந்தக் கட்சிக்கும் கூடாத கூட்டம் இவர்களுக்கு எப்படி கூடியது?" என்று எங்கள் காதுபடவே புலம்பித் திரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்தோழர் ஒருவர் வரதட்சிணை கொடுமைக்கான (இச்சம்பவத்தை ஒட்டி எழுதப்பட்ட பாடல்) சோகமான பாடலை பாடியபொழுது பகுதிமக்களில் பலர் அழுதுவிட்டதும், அதனால் பாடிய தோழரும் அழுதுகொண்டே பாடியதும் நெஞ்சை நெகிழ்த்திய நிகழ்ச்சியாகும்.

இச்சம்பவத்தையொட்டி போலீசு துறையினரின் மெத்தனமான ஒரு தலைப்பட்சமான அணுகுமுறையை தோலுரித்து அம்பலப்படுத்தியும் DSPயின் ரௌடித்தனமான அணுகுமுறையை விளக்கியும் பேசியபொழுது பகுதிமக்கள் உற்சாகமாக கைதட்டி ஆதரித்ததைக்கண்டு பொறுக்காத காவல்நாய்கள் கூட்டத்தை விரைவில் முடிக்கச் சொல்லி தொந்தரவுகொடுக்க ஆரம்பிக்கவே மேலும் அவர்களது பொய்வேடம் பகுதிமக்களிடம் திரைகிழிந்து தொங்கியது. பானுமதியைக் கொலைசெய்த கொலையாளிகளுக்கு தண்டனை கிடைக்கும்வரை தொடர்ந்து ம.க.இ.க. போராடும் என்று தோழர் அறிவித்தபோது, பெண்களில் ஒருவர் "அந்த குடும்பத்தையே கண்டதுண்டமாக வெட்டிப் பொதைக்க வேண்டும்" என்று உரக்கப் பேசி தமது உணர்ச்சியை வெளிப்படுத்தி ஆதரவளித்தவிதம் தோழர்களை மேலும் உற்சாகத்தில் ஆழ்த்தியது.

— ம.க.இ.க.திருச்சி —

## மதவெறிக்கு எதிராக...



அகில இந்திய புரட்சிப்பண்பாட்டு மையத்தில் (AILRC) ஒரு உறுப்பாக இயங்கிவரும் மக்கள் கலைஇலக்கியக் கழகம் தமிழ்நாடெங்கும் மதவெறி எதிர்ப்பு இயக்கத்தை நடத்தி வருகிறது. அதன் தொடர்பாக ம.க.இ.க. திருச்சிகிளை கடந்த மார்ச் 6ம் தேதியன்று மதவெறி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை அண்ணாசிலை முதல் பிரபாத் வரை நடத்தியது.

திருச்சி கிளைச்செயலர் தோழர் முத்து தலைமையேற்று நடத்திய இந்த ஊர்வலம் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் மதவெறி எதிர்ப்பு இயக்கத்தைப் பிரச்சாரப்படுத்தியது. ஆர்.எஸ்.எஸ்., ஜமாத்-இ-இஸ்லாமி முதலான மதவெறி அமைப்புகளைத் தடைசெய்யக் கோரியும், சால்மன் ரஷ்டியின் நூல் மீதான தடையை நீக்கக்கோரியும், ஈரானிய மதவெறியன் கொமெய்னியை பகிரங்கமாக கண்டிக்கக்கோரியும் தோழர்கள் ஊர்வலத்தில் முழக்கமிட்டனர். பாசிச ராஜீவின் அரசு பயங்கரவாதத்தையும், பஞ்சாப் சீக்கிய மதவெறி பயங்கரவாதத்தையும் அம்பலப்படுத்தி தோழர் முத்து இறுதியில் சிறப்புரையாற்றினார்.

இதற்கு முதல் நாள் ஆர்.எஸ்.எஸ்.-ன் நிறுவனர் ஹெட்கேவாரின் நூற்றாண்டுவிழாவை திருச்சியில் கொண்டாடி மதவெறியைப் பரப்பியது ஆர்.எஸ்.எஸ். அடுத்த நாளே இப்படி ஒரு மதவெறி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ம.க.இ.க. நடத்தியதைக் கண்டு திருச்சி நகர மக்கள் பெரிதும் வரவேற்று ஆதரவளித்தனர்.

## கோரிக்கைகளை விளக்கி பிரச்சாரப் பேரணி



கூலி - ஏழை - நடுத்தர விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான விவசாயிகள் விடுதலை முன்னணியின் உடனடி 14 அம்சக் கோரிக்கைகளை விளக்கியும், இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அரசிடம் போராடவும், புரட்சிகர அமைப்பான வி.வி.மு.வில் அணி திரளுங்கள் என்று மக்களுக்கு அறைகூவல் விடுத்து, கடந்த பிப்ரவரி 28 அன்று எழுச்சிமிகு சைக்கிள் பிரச்சாரப் பேரணி உசிலை வட்டத்தில் நடத்தப்பட்டது.

ஒரு சைக்கிளில் ஒலிபெருக்கியைக் கட்டிக்கொண்டு 23 சைக்கிளில் பேரணியாகப் புறப்பட்ட தோழர்கள், 14 அம்சக் கோரிக்கைகளை முழக்கமாக வடித்து எங்கும் எதிரொலிக்க 15 கிராமங்களில் பிரச்சாரம் செய்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் மையமான இடத்தில் புரட்சிகர பாடல்களைப் பாடிய பின்னர், 14 அம்சக் கோரிக்கைகளை விளக்கியும், இந்தக் கோரிக்கைகள் நிறைவேற ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து, வி.வி.மு.வில் அணி திரளுமாறும் பேரணிக்குத் தலைமையேற்றுச் சென்ற தோழர் கே.பி.இராமசாமி உரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கும் பிரசுரம் மக்களிடம் வினியோகிக்கப்பட்டது. அந்த கிராமங்களில் சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்யப்பட்டது. அனைத்து கிராமங்களிலும் உழைக்கும் மக்கள் அணிதிரண்டு நமது புரட்சிகர அரசியலையும், வி.வி.மு.வின் கோரிக்கைகளையும் வெகுவாக ஆதரித்து ஊக்குவித்தனர்.

**தகவல்: விவசாயிகள் விடுதலை முன்னணி, உசிலை வட்டம்.**



படிப்பகம்

www.padippakam.com

# "அமைதிப் படை"யின் அக்கிரமங்கள் ....

யாழ்பல்கலைக் கழகம் யாழ்ப்பாணம்,
பிப்ரவரி 06, 1989.

அன்புள்ள ஆசிரியருக்கு,

பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் ஒருங்கிணைப்புக் கமிட்டி சார்பாக இத்துடன் ஓர் அறிக்கை இணைத்து அனுப்புகிறோம். அன்பு கூர்ந்து இதை உங்கள் பத்திரிகையின் மூலம் வெளியிடுங்கள்.

உங்கள் உண்மையுள்ள,

.................... Student
.................... Teacher
.................... Executive Officer
.................... Employee

## மாணவர்களின் மரணம்

மாசிமாதம் 2ம் திகதி காலை 11.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் அமைதிப் போராட்டத்திற்கு இந்திய அமைதிப்படையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது தனபாலசிங்கம் சத்தியேந்திரா (1ம் வருடம் மருத்துவபீடம்) சதாசிவம் - ஜெகநாதன் (1ம் வருடம் விஞ்ஞான பீடம்) ஆகிய இரு மாணவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இச்சோகச் சம்பவமானது பாலஸ்தீனியா மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடும் இஸ்ரேல், கறுப்புஇன மக்களை ஒடுக்குகின்ற தென்னாபிரிக்கா போன்ற மூர்க்கத்தனமான அரசுகளின் செயற்பாடுகளை நினைவிற் கொண்டு வருகின்றது. மேற்கூறிய அரசுகளின் செயல்களை மிக வன்மையாகக் கண்டித்து தன்னை உலகின் மிகப்பெரிய ஜனநாயகநாடு என மார்தட்டிக்கொள்ளும் இந்தியாவின் அமைதிப்படையின் இச்செயற்பாடு மிகவும் விசனத்துக்குரியது. மேற்கூறிய சம்பவம் பல்கலைக்கழகத்திலிருந்து கூப்பிடு தூரத்திலேயே நடைபெற்றது. ஒரு குறுகிய நேர வழிமறிப்புப் போராட்டத்தை மாணவர்கள் பரமேஸ்வராச் சந்தியில் செய்ய முற்பட்ட போது மாணவிகள் உட்பட பலரும் அமைதிப்படையினரால் அடித்துத் துன்புறுத்தப் பட்டனர். பல மாணவ மாணவியர் ஜவான்களினால் கத்தியால் காயப்படுத்தப்பட்டனர். பின்வாங்கி ஓடிய மாணவர்களை நோக்கி அமைதிப்படையினர் கற்களை எறிந்தனர். இதன் காரணமாக ஆத்திரமடைந்த சில மாணவர்கள் திருப்பித் தாமும் கற்களால் எறிந்தனர். உடனே இராணுவத்தினர் கண்மூடித்தனமாகச் சுடத்தொடங்கினார்கள்.

1ம் திகதி மாலை நடந்த சம்பவத்தின் தொடர்பாகவே, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே மேற்கூறிய வழிமறிப்புப் போராட்டம் தொடங்கப்பட்டது. முன்னைய நாள் பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலிற்கு அண்மையில் வந்துகொண்டிருந்த அமைதிப்படையினர் திடீரென நுழைவாயிலை நோக்கிச் சுட்டனர்.

இச்சூட்டுச் சம்பவத்தின்போது பல மாணவர்கள் மயிரிழையிலேயே உயிர் தப்பினார்கள். ஒரு மாணவர் காலில் காயமடைந்தார். பல்கலைக்கழகத்தினுள் இருந்து எந்தவித மான துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெறவில்லை. இதனைத் தொடர்ந்து ஒரு இளைஞனைத் துரத்தியபடி அமைதிப்படையும் துப்பாக்கி ஏந்திய இளைஞர் ஒருவரும் சுட்டுக்கொண்டு சென்றனர். பல்கலைக்கழகத்திலுள்ள சில பகுதிகளைத் தேடுதல் பண்ணியும், மாணவர்களை பரிசோதித்த பின்னரும் அவர்கள் வெளியேறினர். இதே வேளையில் பல்கலைக்கழக நுழைவாயிலில் நின்ற படையினர் சிலர் மாணவர்களை நிலத்தில் படுக்கச்செய்து கால்களால் உதைத்துத் துன்புறுத்தினர். மாணவர் பலர் குழுமியிருந்த ஒரு பகுதிக்குள் எதுவித முன்னறிவித்தலுமின்றி சுட்டுக்கொண்டு புகுந்த இச்செயல்களைக் கண்டிக்கும் முகமாகவே மேற்கூறிய வழிமறிப்புப் போராட்டம் நடைபெற்றது.

மாணவர்கள் முன்பு நடத்திய ஊர்வலங்கள் பலவும் ஒருவித இடையூறுமின்றி மிகவும் அமைதியாகவே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. ஆனால் இம்முறை எதுவித முன்னறிவித்தல் வேட்டுக்களும் தீர்க்கப்படாமல் 'கொல்வதற்கென்றே சுடும்' **(SHOOT TO KILL)** பாணியிலேயே வேட்டுக்களைத் தீர்த்துள்ளார்கள். இப்படியான சம்பவங்களின் பின்பு அமைதிப்படையினர் வந்து பொதுமக்கள் தாங்களே தங்களின் விதியைத் தீர்மானிக்கின்றார்கள் என்று சந்தர்ப்பத்திற்கேற்ப இராணுவயுக்திக் காரணங்களைக் காட்டி தமது செயல்களை நியாயப்படுத்துவது ஒரு சாதாரண நிகழ்வாகி விட்டது இம்முறையும் இராணுவ முகாமுக்கு அண்மையில் நின்று அதைச் சுற்றிவளைக்க முற்பட்டார்கள் என்று போலிக் காரணங்களை முன்வைக்கின்றார்கள். இப்படியான சோககரமான சம்பவங்களின்போது நாம் இராணுவ முறைகளையும், காரணிகளையும் பற்றிய வீணான விவாதங்களை நடத்த விரும்பவில்லை. ஆனால் நாம் பின்வரும் மூன்று விடயங்களையும் கவனத்திலெடுக்க வேண்டும்.

இச்சம்பவங்கள் அமைதிப்படையினரும், அவர்களுடன் தொடர்பானவர்களும் நிராயுதபாணிகளான பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் தொடர்ச்சியான ஒடுக்குமுறையின் ஒரு பகுதியே. தனிநபர் கொலைகள், கூட்டாகநடைபெறும் மூர்க்கத்தனமான தாக்குதல்கள், மேலும் அண்மையில் சென்.பற்றிக்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற 'யூட்' என்ற இளைஞனின் கொலையும், யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற சூட்டுச் சம்பவத்தின்போது கொல்லப்பட்ட ஆசிரியர், மற்றும் சூட்டுக் காயங்களுக்கும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கும் உள்ளான மாணவ, ஆசிரியர்களின் சம்பவங்கள் போன்ற பலவற்றினையும் உள்ளடக்குகின்றது. எந்த விதமான தூண்டுதல்கள் இருந்தாலும்கூட நிராயுதபாணிகளுக்கெதிரான ஆயுதப் பிரயோகமும், பாதுகாப்பற்ற பொதுமக்கள் மீது ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட இராணுவ பலத்தின் பின்னணியில் தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிடுவது மிகவும் கோழைத்தனமானதும், மனிதாபிமான மற்றதுமான ஒரு செயலாகும்.

இந்திய அமைதிப்படையினருக்கு பல முறை பின்வரும் விடயங்கள் பலத்த எதிர்ப்புக்களின் மத்தியிலும் பல்கலைக்கழக வட்டாரங்களால் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லப்பட்டன என்பதை இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

அவையாவன:

(1) பொதுமக்களுக்கு எதிராக அநீதியான முறையில் எதுவித கட்டுப்பாடுமின்றி எதேச்சையான ஆயுதப்பிரயோகத்தில் ஈடுபடல்.

(2) ஏதாவதொரு சம்பவம் நடைபெற்ற இடத்தினைச் சுற்றியுள்ள பொதுமக்கள் வயது, பால் வேறுபாடுகளின்றித் தாக்கப்படல்.

(3) தடுப்புக் காவலில் உள்ளவர்கள் மீதான கொடூரமான, குரூரமான சித்திரவதைகளும், இவ்வாறான நிகழ்வுகளால் பலர் ''காணாமற் போனவர்கள்'' பட்டியலில் வருவதும்.

(4) இச்சம்பவங்களைத் தொடர்ந்து பொதுமக்களின் சொத்துக்கள் வேண்டுமென்றே அழிக்கப்படுதல்.

மீண்டும் அண்மைக் காலங்களில் பொதுமக்கள் அடர்த்தியாகவுள்ள பிரதேசங்களில் 'ஷெல்' தாக்குதல்களும் நடைபெறத் தொடங்கியுள்ளன.

இவற்றின் அடிப்படையில் மக்களுக்கு எதிரான பலாத்கார சம்பவங்களை ஆராய்வதற்கு பாரபட்சமற்ற நீதி விசாரணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டுமென்று நாம் கோருகின்றோம்.

மேலும், இந்திய அமைதிப்படையினரிடமும், இந்திய அதிகாரிகளிடமும் பின்வரும் விடயங்களுக்கு விளக்கம் தருமாறும் கேட்கின்றோம்.

(1) ஜனநாயகப் போக்கினை உறுதிப்படுத்தல் என்பது மீண்டும் சாதாரண பொது



படிப்பகம்

www.padippakam.com

# குமுறுகிறது யாழ் பல்கலைக்கழகம்!



'உலகத் தமிழினத் தலைவர்' கருணாநிதி, ஈழத்துக் கொலைகாரன் - இந்தியத் தலைமைத் தளபதி கல்கத்துடன் தனது இல்லத்தில் உரையாடுகிறார்.

மக்களின் கௌரவத்தினை நிலைநிறுத்துவது என்பதிலேயே தங்கியுள்ளது. எனவே, மேற்கூறிய செயற்பாடுகள் எவ்வகையில் ஜனநாயகபோக்கை உருவாக்கி வலுப்படுத்த அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட இக்கால கட்டத்தில் உதவப்போகின்றது?

(2) இவ்வாறான முன்னரே குறிப்பிடக்கூடிய சில தன்மைகளைக்கொண்ட இந்திய அமைதிப்படையானது தொடர்ந்தும் அன்றாட வாழ்க்கையில் ஈடுபடும் மக்கள் மீது எதிர்பாராதவிதமான ஏதாவது சம்பவத்தையொட்டி துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும், கீழ்த்தரமாக நடாத்துவதும்தான் தொடரப்போகின்றதா?

(3) பொதுமக்கள் அனைவரும் பாரிய எதிரிப்படையாகவே ஐ.பி.கே.எஃப். (I.P.K.F) ஆல் பலவேளைகளிலும் கருதப்படுகின்றார்கள்.

(4) ஏதோ சாதாரண மக்கள் இராணுவ அக்கடமியில் பயிற்சி பெற்றவர்கள் என்ற நினைப்பில் குறிப்பிட்ட சம்பவங்களில் அவர்கள் குறிப்பிட்டவகையில் செயற்பட்டிருக்க வேண்டும், குறிப்பிட்ட நபர்களைத் தொடர்பு கொண்டிருக்கவேண்டும் என்று பல்வேறு சாக்குப் போக்குகளைச்சொல்லி தம்மால் துன்பத்திற்குட்படுத்தப்பட்ட மக்கள் மீதே குற்றத்தைச் சுமத்துகின்றார்கள். ஆனால், ஐ.பி.கே.எஃப். ஆனது தனது ஜவான்களை சாதாரண இராணுவ விதிகளுக்கு உட்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(5) சர்வதேசக் கண்ணோட்டத்தில் ஐ.பி.கே.எஃப்.இன் இருப்பு அமைதியை நிலைநாட்டும் படையாகச் செயற்படுவதும், அதனூடாக ஜனநாயகப் போக்கினை மீண்டும் நிலைநிறுத்துவதுமாகும். இவர்கள் தம்மைத் தமிழ்மக்களின் நண்பர்கள் என்றும் மேலும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் கடந்த ஒன்றரை வருடங்களின் பின்னரும், தமிழ்மக்களின் நிலைமையைப் புரிந்துகொள்வதற்கோ அல்லது அரசியல்ரீதியாக எழும் ஊர்வலங்கள் போன்ற மிகவும் உணர்ச்சிகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை மனிதாபிமான முறையில் கையாள்வதற்கோ என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? (இதற்கு அண்மையில் இடம்பெற்ற மாணவர் சாத்வீக எதிர்ப்புப் போராட்டம் ஓர் உதாரணமாகும்.)

(6) சாதாரண சிவில் சட்டங்களைத் திரும்பவும் நடைமுறைப்படுத்த இவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் என்ன? முக்கியமாக ஐ.பி.கே.எஃப்.உம், அதனோடு தொடர்புகொண்டவர்களும் அவற்றிற்கு கட்டுப்படுவதற்கான வழியில் தமது செயற்பாடுகளில் காட்டும் தன்மைகள்தான் என்ன?

மேற்கூறிய கேள்விகளுக்கான பதில்களைக் கொடுக்கின்ற போது ஐ.கே.பி.எஃப். ஆனது தமிழ்மக்களின் நண்பர்களாகவா, அல்லது வேறுநலன்களின் அடிப்படையிலேயா இங்கு இருக்கிறார்கள் என்பது தெட்டத்தெளிவாகும். மேலும் இது அமைதிப்படை என்ற அடிப்படையில் இந்தியா இங்கு இருப்பதின் பின்னணிக்கான தெளிவான காரணத்தை முன்கொணரும்.

தமிழ் இனத்தின் தலைமையைப் பெறவிரும்பும் ஒவ்வொருவரிடமும் பின்வரும் கேள்விகளைக் கேட்கின்றோம்.

(1) ஒரு சிலர் எங்களின் வாக்குகளைக் கேட்டு அழகான பத்திரிகை விளம்பரங்களுடன் எங்களிடம் வருகின்றீர்கள். உண்மையிலேயே எங்களின் உள்ளக்கிடக்கையையும், அபிலாசையினையும் கருத்திற்கொண்டு நம்மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க முடியாவிட்டால், உங்களால் எம்மை மேலும் அடிமைநிலைக்கே கொண்டுசெல்ல முடியும் என நேர்மையாக மக்கள் முன் சொல்லுங்கள்.

(2) எங்களுடைய பெயரால் எங்களில் சிலர் ஆயுதம் ஏந்தி தங்களின் நலனுக்காகச் செயற்படுவதாகக் கூறுகிறீர்கள். நாம் கற்பனை பண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு தமது சமூகம் மேலும் மேலும் பலவீனப்பட்டு பல்வேறு மறைமுகமான பிடிகளுக்குள் சிக்கிக்கொண்டு செல்கின்றது என்பதை உங்களால் பார்க்க முடியவில்லையா? முன்பு எமது பிரதேசத்தை இழக்க இருந்தோம். இன்று எமது சுதந்திர உணர்வுகளையே இழந்துவிடும் நம்பிக்கையிழந்துவரும் நிலையில் இருக்கிறோம். நாங்கள் உங்கள் தியாகச் செயல்களுக்கு மிகவும் மதிப்புக் கொடுக்கிறோம். அது வீணாகப்போவதையும் நாம் விரும்பவில்லை. உங்களின் விருப்புகளுக்கு மக்களை அடிபணியச்செய்ய பலாத்காரத்தினை உபயோகிக்காதீர். அது அந்நியரின் பலாத்காரத்தைப் பார்க்கிலும்கூடிய அளவில் எம்மைப் பலவீனப்படுத்தும். மக்களை அரசியல் நோக்கத்திற்காக பகடைக்காய்களாக உபயோகிக்க வேண்டாம். உங்கள் மீதான வரலாற்றுத் தீர்ப்பு உங்கள் வீரத்தைக்கொண்டு அல்ல, நீங்கள் இறுதியாய்வில் சுதந்திரத்தை நோக்கியா அல்லது அடிமைத்தனத்தினை நோக்கியா மக்களை இட்டுச்சென்றீர்கள் என்பதிலிருந்தே வழங்கப்படும்.

மிகவும் சிக்கலான இக்காலகட்டத்தில் பல்கலைக் கழகத்தின் தொடர்ச்சியான செயற்பாடானது எமது மாணவர்களின் நலனில் மட்டுமல்ல, எமது சமுதாயத்தின் நலனுக்கே மிகவும் இன்றியமையாததாகும். இதுவே இன்று நாம் மக்கள்நலன் சார்பாக குரல்கொடுப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இந்நிலையில் இப்பல்கலைக்கழகத்தை குறுகிய அரசியற் காரணங்களுக்காகவோ, அல்லது வேறு காரணங்களுக்காகவோ உபயோகப்படுத்த முனைய வேண்டாம் என்று தமிழ்மக்களின் நலனில் அக்கறை கொண்ட சக்திகள் அனைத்தையும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்விரு மாணவர்களினதும் அநியாய இழப்பு, பல்கலைக் கழகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தி புதியதசாப்தத்திற்கு அத்திவாரமிடப் பண்ணுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் உண்மை அஞ்சலியாகும்.

பல்கலைக் கழக விரிவுரையாளர்,
ஊழியர், மாணவர்
ஒருங்கிணைப்புக்குழு 04-02-1989.



படிப்பகம்

www.padippakam.com

# ''சாத்தானின் கவிதைகள்''

# தடையும் தண்டனையும்



சாலமன் ருஷ்டி, பம்பாயிலே பிறந்த காஷ்மீரி முஸ்லீம். இங்கிலாந்திலே கல்வி கற்று அங்கேயே குடியமர்ந்து, ஓர் ஆங்கிலேயப் பெண்ணை மணந்து கொண்ட ஆங்கிலக் கதாசிரியர். முதல் மனைவியை விவாகரத்த செய்துவிட்டு ஓர் அமெரிக்க நாவலாசிரியை மணந்து கொண்டு வாழ்பவர். மேற்கத்தியக் கலாச்சாரத்துக்கு மாறிவிட்ட முதலாளித்துவ அறிவு ஜீவி. இருப்பினும் அவரையும் பாதிக்கும் வெள்ளை நிற இன நிற வெறிக்கு எதிரானவர். மாயா உலகக் கற்பனைக் கதைகள் எழுதுவதைத் தனது பாணியாகக் கொண்ட ருஷ்டி இதற்கு முன்பு ''நள்ளிரவின் குழந்தைகள்'' என்ற நாவலை எழுதி பெரும்பொருள் சேர்த்தார். அதிலே இந்திராவின் அவசர நிலை ஆட்சியைக் கேலிசெய்யும் சிலவரிகளைக் கூட இந்திரா கும்பலின் எதிர்ப்பு காரணமாக விலக்கிக் கொண்டார்.

கடந்த ஆண்டு செப்டம்பரில் சாலமன் ருஷ்டி ''சாத்தானின் கவிதைகள்'' என்கிற புதிய நாவல் ஒன்றை ''வைகிங் பென்குவின்'' என்ற பன்னாட்டு வெளியீட்டு நிறுவனம் மூலம் வெளியிட்டார். ஐந்தரைக் கோடி ரூபாய் அதன் மூலம் ருஷ்டிக்கு வருமானமாகக் கிட்டும். கதைப்படி சீக்கியத் தீவிரவாதிகள் விமானம் ஒன்றை வெடிவைத்துத் தகர்க்கிறார்கள். அதில் இருந்த ஒரு பிரபல பம்பாய் நடிகனும் அவனுடைய தொழில் ரீதியிலான தரகனும் காயமின்றி இங்கிலாந்து நாட்டிலே குதிக்கிறார்கள். இந்த விபத்து காரணமாக அந்த நடிகன் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமது மூதாதையர் வாழும் அரபு தேசத்திற்கு போய்விட்டதாகக் கற்பனைக்கதை பின்னப்படுகிறது. அதனால் எற்படும் விசித்திரமான கற்பனைக் காட்சிகள் சித்திரிக்கப்படுகின்றன. அவற்றில் முஸ்லீம் மதத்தை நிறுவிய முகமது நபியின் வாழ்க்கை பற்றிய சம்பவங்களை, பாத்திரங்களை, முரண்பாடான மூடக் கருத்துக்களை உருவகப்படுத்தி கேலி செய்கிறார், சாலமன் ருஷ்டி.

கதையில் வரும் வியாபாரியாக இருந்து மத தீர்க்கதரிசியாக மாறும் மகவுந்து என்ற பாத்திரம் முகமது நபியைக் குறிக்கிறது. அவர் மனிதனா அல்லது வால்முளைத்த பிராணியா என்று கேலி செய்யப்படுகிறார். அவருடைய மூதாதையரான இப்ராகீம் வேசிமகன் என்று ஏசப்படுகிறார். மகவுந்துவுடைய புதிய மதத்தைப் பின்பற்றிய மக்கள் பல ஆண்டுகள் நிலமற்ற ஏழைகளாகக் கொள்ளையடித்து வாழ்ந்து வந்தார்கள். தேவைகளை அடைவதற்கான வழிமுறைகளைப் பற்றி மகந்து அக்கறைப்படவில்லை. மனச்சாட்சிப்படி நடப்பதற்கான நேரம் அவருக்கு வாய்க்கவில்லையாம்.

அந்தக்காலத்தில் மதவிசுவாசிகள் ஒழுங்கு நெறிமுறைகளின்றி அராஜகமாக வாழ்ந்தார்கள். எனவே எப்படி உட்காருவது, படுப்பது, மலங்கழித்துவிட்டு எந்தக்கையால் எப்படிக் கழுவது, எப்படி உண்பது, உறங்குவது, எந்தமுறையில் உடலுறவு கொள்வது தெய்வீகமாக அனுமதிக்கப்பட்டது போன்ற அற்பமான, அந்தரங்கமான நெறிமுறைகள் கூட அலுப்பூட்டுமளவு போதிக்கப்பட்டன. மகவுந்தினுடைய மனைவி இறந்த பிறகு தேவத் தன்மையை இழந்தார். ''ஆயிஷா'' என்ற சிறுமி முதல் பருத்த - முதிய ''சாவுதா'' வரை பலவிபச்சாரிகளுடன் உல்லாசமாக மகவுந்து வாழ்ந்தார். முகமது நபியுடைய மனைவிமார் பெயர்களை கதையிலுள்ள விபச்சாரிகளுக்கு வைத்திருப்பதோடு வயதான சாவுதாவையும், குழந்தையான ஆயிஷாவையும் ஒரேநாளில் மகவுந்து மணப்பதாயும், அது முரண்பாடாக உள்ளது என்றும் பழைய மதவரலாற்றின் மீது ருஷ்டி கேள்வி எழுப்புகிறார்.

''சாத்தானின் கவிதைகள்'' என்ற நூல் வெளியான பத்தாம்நாள் இந்திய அரசும் அடுத்த வாரம் பாகிஸ்தான் அரசும் தடை விதித்தன. புத்தகத்தைத் தடைச்செய்யவும், ருஷ்டியிடம் மன்னிப்பும் நட்டஈடும்கோரி இங்கிலாந்து முஸ்லீம் மதவெறியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி புத்தகத்தைக் கொளுத்தினர். பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்க மையத்தின் முன்பு முஸ்லீம் மதவெறியர்கள் கலவரத்தில் ஈடுபட்டு போலீசு துப்பாக்கி சூட்டிலே ஆறு பேர் மாண்டுபோனார்கள். அதன் பிறகு அதாவது புத்தகம் வெளியான ஐந்து மாதங்களுக்குப் பிறகு ஈரானின் சர்வாதிகாரியும் மதத்தலைவருமான அயதுல்லா கொமெனி ஒரு மதக்கட்டளை பிறப்பித்தார். மதநிந்தனைக் குற்றத்துக்காக சாலமன் ருஷ்டி மற்றும் நூல் வெளியிட்டிலே சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் மரணதண்டனை விதிப்பதாக கொமெனி அறிவித்தார். ருஷ்டியைக் கொலை செய்பவருக்கு 4 கோடி ரூபாயும், அந்த முயற்சியில் மாண்டுபோனால் மதத்தியாகியாக மதிப்பதாகவும் ஈரான் அறிவித்தது. ருஷ்டி மன்னிப்புக்கோரினால் தண்டனையை ரத்து செய்

சாலமன் ருஷ்டியின் ''சாத்தானின் கவிதைகள்'' நூலுக்கு எதிராக பம்பாயில் நடந்த ஆர்ப்பாட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

வதாகவும் அறிவித்தது. ''முஸ்லீம்களின் மனதைப் புண்படுத்துமானால் வருந்துகிறேன்'' என்று ருஷ்டி சொன்னதை நிராகரித்துவிட்டது.

ஈரானின் நடவடிக்கைகள் தனது நாட்டு குடிமகனுக்கும், சட்டங்களுக்கும் எதிரான பயங்கரவாதமாகும் என்று எதிர்த்த இங்கிலாந்து ஈரானுடனான உறவுகளைத் துண்டித்துக் கொண்டது. பெரும்பான்மையான மேற்கத்திய நாடுகளும் அதற்கு ஆதரவாக பல்வேறு அளவுகளில் ஈரானுடனான அரசுதந்திர உறவுகளை முறித்துக் கொண்டுள்ளன. தனிமனித சுதந்திரத்தைக் தடுக்கும் மதவெறியென்று ஈரானை அவை கண்டிக்கின்றன. கிழக்கித்திய மூன்றாம் உலக நாடுகள் மீதான ஏகாதிபத்தியத் தாக்குதல்தான் இவை என்று ஈரான் எதிர்த்துச் சாடியுள்ளது.

ஈரான் - ஈராக் போரில் ஈரானின் தோல்வி, ஈரானின் பெட்ரோலிய வருமானம் வீழ்ச்சியினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, ஈரானின் கொமெனியின் அரசியல் வாரிசுகளே மேற்கு நாடுகளின் பக்கம் சாய்வது ஆகிய காரணங்களினால் செல்வாக்கிழந்துவிட்ட கோமெனி மீண்டும் ஆதிக்கம் பெறுவதற்காக எடுத்த நடவடிக்கைதான் ருஷ்டிக்கு எதிரான தண்டனை என்று காரணங்கள் கூறப்படுகின்றன. இவையெல்லாம் கொமெனியின் முடிவுக்கான காரணங்களில் சிலவாக இருக்கலாம். ஆனால் கொமெனியின் மதக் கட்டளையை ஆதரிக்குமளவு மதவெறி பலநாடுகளில் தலைவிரித்தாடுவதைப் பார்க்கிறோம். பாகிஸ்தானைத் தொடர்ந்து, ஸ்ரீநகரிலும், பம்பாயிலும் அவர்கள் வன்முறை மதவெறிக் கலவரங்களில் ஈடுபட்டு மொத்தம் 20 பேர் பலியாகி உள்ளனர்.

மதஉணர்வுகளைப் புண்படுத்தக்கூடாது, மதநிந்தனை தவறானது. தண்டனைக்குரியது; மதச்சுதந்திரத்தை மதிக்க வேண்டும் என்று முஸ்லீம் மதவெறியர்களோடு சேர்ந்தது இப்போது சில இந்துமத, கிறிஸ்துவ மதவெறியர்கள் கூச்சலிடுகிறார்கள். ஆனால் எதிரெதிரான மதத்தினர் பகைமையாக சாடிக்கொல்வதை வரலாறு நெடுகப் பார்க்கிறோம். ஒரேமதத்தின் வெவ்வேறு பிரிவினர் ஒருவருக்கொருவர் வெறிகொண்டு மோதிச் சாவதைப் பார்க்கிறோம். இதே முஸ்லீம் மதத்திலே ஷியா - சுன்னி பிரிவுக் கலவரங்கள் பாகிஸ்தானிலும் காஷ்மீரிலும் தொடர்கின்றன

உலகின் பெரும்பான்மையான நாடுகளில் நிலப்பிரபுத்துவ சமூகப் பொருளாதார அடிப்படைகள் நீடிப்பதுதான் இந்த் மதவெறிக்கு காரணமாக இருக்கிறது. மேற்கத்திய நாடுகளில் நிலப்பிரபுத்துவம் தகர்ந்துபோனாலும் ஏகபோக -பாசிச சக்திகளின் நிற - இனவெறி தொடர்வதால் மதவெறியும் உயிர்ப்பிக்கப்படுகிறது. கருத்துச்சுதந்திரம் குறித்து இவ்வளவுதூரம் கூச்சல்போடும் மேற்கத்திய நாடுகளிலும் கிறித்துவ மதத்தை விமர்சிக்கும் -கேலிசெய்யும் நூல்களோடு, கம்யூனிச நூல்களும் தடை செய்யப்பட்டுள்ளன. ஏகாதிபத்தியவாதிகள் நிலப்பிரபுத்துவத்தை பாதுகாக்கின்றன. அவையே இஸ்ரேலிய யூதமதவெறி, தென் ஆஃபிரிக்காவில் நிற - இன வெறி மற்றும் அரேபிய - நிலபிரபுத்துவ பிற்போக்கு அரசுகளை ஆதரிக்கின்றன. கருத்துச்சுதந்திரத்திற்கு எதிராக மதவெறி பயங்கரவாதம் என்று இப்போது அவை கூச்சல் போடுவதற்கு உரிமையே கிடையாது.

மதவெறியர்களுக்கு எதிரான மிதவாதிகள் நடத்தும் போராட்டமாக ருஷ்டி - விவகாரம்



குறித்து முதலாளித்துவ அறிவுஜீவிகள் ஒரு வியாக்கியானம் செய்கிறார்கள். கொமெனி மரணதண்டனை விதிப்பதற்கு முன்பு மதசீர்திருத்தத்துக்கான முயற்சி என்று பீற்றிக்கொண்ட ருஷ்டியே, தனது நூல் வெறும் கற்பனைக்கதை, இஸ்லாத்துக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை என்று ''பல்டி'' அடித்துவிட்டார். முதலாளித்துவ நாத்திகவாதத்தைப்போலவே ருஷ்டியின் இலக்கிய ரீதியிலான மதச் சீர்திருத்தமும் கொச்சையாக உள்ளது என்பதுதான் உண்மை. ஆனால் மதத்தைப் பிரச்சாரம் செய்வதற்குள்ள உரிமையைப் போலவே மதஎதிர்ப்பு பிரச்சாரத்துக்கும் உரிமை வேண்டும் என்கிற முறையில் ருஷ்டியின் நூலுக்கான தடை மற்றும் மரணதண்டனை இரண்டையுமே நாம் எதிர்க்கிறோம்.

குறிப்பான இந்த விவகாரத்தை விட்டு தாமே முன்வந்து சில போலிப்புரட்சி இலக்கியவாதிகள் தாம் எப்போதும் எதற்கும் தடைவிதிப்பதையும் கருத்துச்சுதந்திரத்தை மறுப்பதையும் எதிர்ப்பதாக மார்தட்டுகிறார்கள். லெனின், ஸ்டாலின், மாவோவின் கீழ் புத்தகங்களைத் தடைசெய்தது உட்பட எல்லாத்தடைகளுக்கும் எதிராக நிற்பதாக முதலாளித்துவ அறிவுஜீவிகள் இப்போது பாசாங்கு செய்கிறார்கள். ஜனநாயகம் பேசிக்கொணடே சர்வாதிகார ஆட்சி நடத்தும் முதலாளித்துவ அரசியல் போன்றதுதான் இதுவும். இந்தச் சமயத்தில் உழைக்கும் மக்களுக்கான கருத்துச் சுதந்திரமே சரியானது, நியாயமானது என்று வர்க்கரீதியிலின்றி பொதுவாக கருத்துச்சுதந்திரம் குறித்து கூச்சல்போடுவது இந்தப் போலிகளைக் காட்டிக் கொடுத்துவிட்டது. பொதுவான குடியுரிமை, ஜனநாயக உரிமை பற்றிப் பேசமுடியாது. அப்படியானால் ''மதவெறி அமைப்புகளைத் தடை செய்!'' என்ற முழக்கமும் தவறானதாகிவிடும். எனவே வர்க்கச் சார்புடைய அடிப்படையிலேயே எழுத்துரிமை, கருத்துச்சுதந்திரத்திற்கான நமது கோரிக்கையும், ஆதரவும் அமையவேண்டும். ❑

மணி

சாத்தானின் கவிதைகள் நூலில் என்ன எழுதப்பபட்டுள்ளது என்பதைக்கூட அறியாதவர்கள் மதவெறி தூண்டப்பட்டு ருஷ்டியைக் கொல்லத் தயார் என்று முதுகில் எழுதிக் கொண்டு திரிகிறார்கள். கலவரங்கள் செய்து குண்டடிபட்டுச் சாகிறார்கள்.








படிப்பகம்

www.padippakam.com



தப்பியோட முயற்சிக்கும் கவர்னருக்கு வழிவிடாமல மறியல் செய்யும் காங்கிரசார்.

## சட்டசபைக்குள் கட்டிப்புரண்டு சண்டை! கவர்னர் கெரோ செய்யப்பட்டார்!

# மே.வங்க சட்டமன்ற ரௌடித்தனங்கள்!

கடந்த ஆண்டு ஜனவரி 28ந் தேதி தமிழக சட்ட மன்றத்தில் நடந்த ரௌடித்தனங்களைப் பார்த்து கைகொட்டிச் சிரித்த போலிக் கம்யூனிஸ்டுகள் இப்போது மே.வங்கத்தில் காங்கிரசாரோடு சேர்ந்து அதே ரௌடித்தனத்தை அரங்கேற்றியுள்ளனர். பிப்ரவரி 27ந் தேதியன்று மே.வங்க சட்டசபை ''வரலாறுகாணாத'' ரௌடித்தனங்களுடன் தனது பட்ஜெட் கூட்டத்தொடரைத் துவக்கி, நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயகத்தின் யோக்கியதையை மீண்டுமொரு முறை நிரூபித்துக் காட்டிவிட்டது.

பட்ஜெட் கூட்டம் தொடங்கிய பிப்ரவரி 27ம் நாள். வழக்கமாக சட்டசபைக்கு மட்டம் போட்டுவிட்டு ஊரைச் சுற்றும் காங்கிரசுப் பெருச்சாளிகள் ஆபாசக் கூத்தை அரங்கேற்றுவதற்காக திட்டமிட்டபடி முன்னதாகவே சட்டசபைக்கு வந்துவிட்டனர். ''ஜோதிபாசு அரசு உடனே பதவி விலக வேண்டும்; வங்காள மின் விளக்கு ஊழல், கல்கத்தா ட்ராம் வண்டி நட்ட ஈடு ஊழல் விவகாரங்களையும், டார்ஜிலிங்கில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட மார்க்சிஸ்டு எம்.பி.குருங்கின் மரணம் பற்றியும் கவர்னர் தனது உரையில் குறிப்பிட வேண்டும்'' என்று சுவரொட்டிகளையும், முழக்க அட்டைகளையும் ஏந்தியபடி கும்பல் கும்பலாக வந்தனர்.

சிறிது நேரத்தில் அவைக்கு வந்த கவர்னர் நூருல் ஹசன், மேடை மீதேறி தனது உரையைப் படிக்கத் தொடங்கினார் சுப்ராத்தோ முகர்ஜி, சுல்தான் அகமது உள்ளிட்ட காங்கிரசு எம்.எல்.ஏக்கள் கும்பலாக ஒரு பல்பைக் கொண்டு வந்து கவர்னரின் மேசைமீது வைத்து ''இந்த மின்விளக்கு ஊழலைப் பற்றி உங்கள் உரையில் ஏன் குறிப்பிடவில்லை?'' என்று கேட்டு அவர் உரை நிகழ்த்த முடியாமல் சூழ்ந்து கொண்டு 'கெரோ' செய்தனர். ஒரு காங்கிரசு எம்.எல்.ஏ. கவர்னரின் கனத்த தொந்தியில் ஒரு குத்துவிட்டார். இன்னொருவர் அவரது 'கோட்'டைப் பிடித்து இழுத்தார். மற்றவர்கள் முழக்க அட்டைகளை அவர்மீது வீசி கோஷமிட்டனர்.

காங்கிரசாரின் அடாவடித்தனத்தை எதிர்த்து சபாநாயகரும் 'மார்க்சிஸ்டு' மந்திரிகளும் கூச்சலிட்டனர். இந்தக் கூத்து ஒரு புறம் நடந்து கொண்டிருக்கும்போதே சட்டசபை காங்கிரசுக் கட்சித் தலைவரான அப்துஸ் சதார் கவர்னர் உரையை விமர்சித்து தனியே மறுபுறம் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். ஆளுக்கு ஆள் நாட்டாண்மை செய்து கொண்டு கூச்சலும் குழப்பமும் எங்கும் எதிரொலித்த போது காங்கிரசு எம்.எல். ஏக்கள் கவர்னர் உரையைப் புறக்கணிப்பதாகக் கூறி கோஷமிட்டுக் கொண்டே வெளிநடப்பு செய்தனர்

இன்னொரு பக்கம் கவர்னரைச் சூழ்ந்து கொண்டு 'கெரோ' செய்த காங்கிரசு எம்.எல்.ஏக்களை சட்டசபைக் காவலர்கள் வெளியேற்ற முயன்றும் முடியவில்லை. கவர்னரது உரையைக் கொண்ட காகிதங்களை அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டு ஓட முயற்சித்தார் ஒரு காங்கிரசு எம்.எல்.ஏ. சபையில் காங்கிரசார் பெரும்பான்மையாக வெளிநடப்பு செய்துவிட்ட தைரியத்தில், 'மார்க்சிஸ்டு' மந்திரி கிரண்மாய் நந்தாவும், எம்.எல்.ஏ. மாலின்கோஷும் உடனே பாய்ந்து வந்து பளாரென்று அவர் கன்னத்தில் அறைந்தனர். இதைப் பார்த்த குஷியில் 'மார்க்சிஸ்டு' எம்.எல்.ஏக்கள் கும்பலாக ஓடி வந்து கோதாவில் இறங்கினர். சபைக்குள்ளேயே காங்கிரசு எம்.எல்.ஏக்கள் சுப்ராத்தோ முகர்ஜியையும், சுல்தான் அகமதையும் புரட்டி எடுத்து சட்டையைக் கிழித்து பல்லை உடைத்தனர். தப்பியோடிய காங்கிரசு எம்.எல்.ஏக்கள் 'மார்க்சிஸ்ட்' கட்சி பெண் எம்.எல்.ஏக்களின் சேலையை கிழித்தெறிந்தனர். பின்னர் 'மார்க்சிஸ்டு' போக்குவரத்து மந்திரி ஷியாமல் சக்ரவர்த்தி ஓடி வந்து தமது சகாக்களைத் தடுத்து அடிப்பட்டுக் கிடந்த சுப்ராத்தோ முகர்ஜியை இழுத்துச் சென்றார்.

ரௌடித்தனங்கள் கட்டுமீறிப் போனதால் கவர்னர் உரை முடிந்துவிட்டதாகப் பாதியிலேயே அறிவித்துவிட்டு ஓடப்பார்த்தார்.

வெளியே அவரது வருகைக்காக காத்திருந்த காங்கிரசுக் கட்சியினர் அவருக்கு வழிவிடாமல் மறியல் செய்தனர். சபைக் காவலர்களின் உதவியால் எப்படியோ தப்பித்து கவர்னர் தனது காருக்குள் புகுந்து கொண்டார். காங்கிரசார் காரை மறித்துக் கொணடு ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒரு காங்கிரசு எம்.எல்.ஏ காருக்கு கீழே படுத்துக்கொண்டு 'சத்தியாகிரகம்' செய்தார். இன்னொரு எம். எல்.ஏ காரின் மீதேறிக் கொண்டு நடனமாடத் தொடங்கினார். பின்னர் 'மார்க்சிஸ்டு' எம்.எல்.ஏக்கள் மீண்டும் தமது கைவரிசையைக் காட்டி காங்கிரசாரை விரட்டியடித்து கவர்னரைப் பத்திரமாக வழியனுப்பி வைத்தனர்.

அடுக்கடுக்கான ஊழல்களில் வகையாக சிக்கிக் கொண்டு அம்பலப்பட்டு நிற்கும் போலிக் கம்யூனிஸ்டுகள் அதற்கு பதிலளிக்க வக்கற்று, சட்டமன்ற ரௌடித்தனங்களுக்கு காங்கிரசாரே காரணம் என்று சாடுகின்றனர். ''எனது நாடாளுமன்ற வாழ்க்கையில் இதுபோன்ற வன்முறையைச் சந்தித்ததேயில்லை. எந்த மாநில சட்டசபையிலும் கவர்னருக்கு எதிராக எதிர்கட்சியினர் இப்படி அராஜகத்தில் ஈடுபட்டதில்லை. காங்கிரசுகாரர்கள் சட்டமன்றத்துக்கு வெளியே செயல்படுத்திவரும் வன்மறையை இப்போது உள்ளேயும் அரங்கேற்றத் தொடங்கி விட்டனர்'' என்று அங்கலாய்கிறார் முதல்வர் ஜோதிபாசு. ''ஜனநாயக மரபுகளை மிதித்து அரசியல் நாகரீகமற்ற காட்டுமிராண்டிகளாக காங்கிரசார் தம்மை நிரூபித்துக் கொண்டுவிட்டனர்'' என்று சாடுகிறார் மே.வங்க சபாநாயகர் கலீம்.

மறுபுறம், ''இந்த ரௌடித்தனங்களுக்கு காரணம் மார்க்சிஸ்டுகள் தான்! இது ஜனநாயகப் படுகொலை! சட்டமன்ற மாண்பையும் மரபையும் மார்க்சிஸ்டு குண்டர்கள் கசக்கி எறிந்து விட்டார்கள்'' என்று சாடுகிறார் மே.வங்க காங்கிரசு தலைவர் கானி கான் சௌத்திரி.



படிப்பகம்

www.padippakam.com



'மார்க்சிஸ்டு' எம்.எல்.ஏ.க்களால் உதைபட்டுக் கிடக்கும் காங்கிரசு எம்.எல்.ஏ. சுப்ராத்தோ முகர்ஜி

இது ஏதோ வங்கத்தில் இதுவரை காணாத ரௌடித்தனமல்ல; போலிகளும் புனிதமானவர்களல்ல. ஏற்கனவே மே.வங்க சட்டமன்றத்துக்குள் போலீசை அழைத்து தடியடி நடத்தி போலிகள் மாண்பைக் காத்த வரலாறு உண்டு. கேரளத்தில் '87 ஜூலையில், தம்மிடமிருந்து விலகி காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து எம்.எல்.ஏ.வாகிய ராகவனை சட்டமன்றத்துக் குள்ளேயே ரத்தம் ஒழுக அடித்தும் உள்ளனர்.

கவர்னரைப் பேச விடாமல் தடுப்பதும் கூட மே.வங்கத்துக்குப் புதியதல்ல. 1968ல் சட்டசபைக்குள் கவர்னரை நுழைய விடாமல் மறித்து, பின்னர் அவர் புறக்கடை வழியே நுழைந்து மேடையேறியபோது அவரைப் பேசவிடாமல் இதே போலிக் கம்யூனிஸ்டுகள் விரட்டியடித்தனர். இவர்கள் தான் இன்று புனிதம் கெட்டுவிட்டதாக ஒப்பாரி வைக்கின்றனர்.

பெருகிவரும் நாடாளுமன்ற அராஜகத்தின் அடுத்த கட்டம்தான் இந்த ரௌடித்தனங்கள். ஆனால் நாடாளுமன்ற ஜனநாயகம் போலியானது; அதை அம்பலப்படுத்தி மக்களைப் புரட்சிக்கு அணிதிரட்டவே நாங்கள் தேர்தலில் பங்கேற்று ஆட்சி அமைக்கிறோம் என்று கூறும் போலிகள் கடைசியில் நாடாளுமன்ற - சட்டமன்ற மாண்பையும் மரபையும் புனிதத்தையும் காக்கும் நாயகளாக மாறிவிட்டார்கள். சட்டமன்ற -நாடாளுமன்ற ஓட்டாண்டித்தனத்தை மக்கள் புரிந்து கொள்ளக்கூடாது; அதன் மீது நம்பிக்கை இழந்துவிடக் கூடாது என்பதற்காக இப்போது மாண்பைப் பற்றி ஒப்பாரி வைக்கிறார்கள்.

ஆனால் ராஜாங்க கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாத கொள்கையைப் போலவே நாடாளுமன்ற ஜனநாயகமும் மேலும் மேலும் அம்பலப்பட்டு அம்மணமாக நிற்கிறது.

✱ குமார்

# மேடைக்கு மார்க்சியம்! பிழைப்புக்கு வட்டித்தொழில்!

**ஊ**ருக்கு உபதேசம் செய்யும் ஓட்டுக்கட்சித் தலைவர்கள் என்றைக்குமே அவற்றை நடைமுறைப்படுத்தியதாக வரலாறு இல்லை. தமது கட்சியின் உள்ளூர் தலைவர்கள் அயோக்கியத்தனங்களில் ஈடுபடும் போது மூடிமறைப்பது, அல்லது அதற்கு மௌனமாக சம்மதிப்பது, அம்பலப்படும்போது அவருக்கும் கட்சிக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று புனிதமானவர்களாக வேடம் போடுவது என்பது ஓட்டுக்கட்சிகளின் அரசியல் கலாச்சாரமாக புழுத்து நாறுகிறது. ''இவர்கள் பூர்ஷ்வா கட்சியினர்; ஆனால் நாங்கள் கம்யூனிஸ்டுகள்!'' என்று வாய்ப்புரட்சி செய்யும் போலிக் கம்யூனிஸ்டு தலைமையும் இதற்கு விதிவிலக்கல்ல! அண்மையில் கம்பம் நகரில் மார்க்சிஸ்ட் கட்சிப் பிரமுகர்களுக்கிடையே நடந்த அடிதடி, அக்கட்சியின் யோக்கியதையைத் தெளிவாகவே தோலுரித்துக் காட்டியுள்ளது.

கம்பம் நகரில் திருப்பதி பைனான்ஸ் என்ற சீட்டுக் கம்பெனி உள்ளது. அதில் 12 நபர்கள் பங்குதாரர்கள். அதில் ''மார்க்கிஸ்ட்'' கட்சியின் நகர்மன்ற உறுப்பினரும், இந்திய ஜனநாயக இளைஞர் சங்க **(DYFI)** நகரப் பொருளாளருமான கருளிவேலும் ஒருவர். இவர் திருப்பதி லாட்டரி என்ற கடையும், திருப்பதி மெடிக்கல்ஸ் என்ற கடையும் வைத்து நடத்துகிறார்.

திருப்பதி பைனான்ஸ் பங்குதாரர்களில் ஒருவரும் அதன் மேனேஜருமான கிருஷ்ணகுமார் என்பவர், கம்பெனி கணக்கில் வராமல் தனது சொந்தப்பொறுப்பில் பணம் கொடுக்கல் - வாங்குதல், நகை அடகுபிடித்தல் போன்றவற்றை செய்துவந்தார். அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு பொது மக்களில் சிலர் அவரிடம் பணம் கொடுத்திருந்தனர். அவற்றுக்கு ரசீதோ கணக்கோ அவர் வைத்திருக்கவில்லை. இந்நிலையில் கடந்த பிப்ரவரி 7-ம் தேதியன்று ரூ.50 லட்சம் ரொக்கமும் 250பவுன் நகையையும் மூட்டைகட்டிக்கொண்டு அவர் தலைமறைவாகி விட்டார். இச்செய்தி நகரெங்கும் பரவி அவரிடம் பணமும் நகையும் கொடுத்தவர்கள் பீதியடைந்து புலம்பத் தொடங்கினர். பின்னர் அவர் பிப்ரவரி16 அன்று பிடிபட்டார்.

அவரிடம் நகை அடகுவைத்திருந்த 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தாலுகா செயலாளரான தர்மராஜ், இதற்கிடையே இம்மோசடியை அறிந்து, கருளிவேலுவை அணுகி தனதுநகையைக் கொடுத்துவிடும்படி அவரது வீட்டிலும் கடையிலும் மிரட்டினார். ஆத்திரம் அடைந்த கருளிவேலு கராத்தே கட்டையால் தர்மராஜைத் தாக்கிவிட்டார். தலைவர் தாக்கப்பட்ட ஆத்திரத்தில் இதர ஓட்டுக்கட்சிகளைப் போல தமது அணிகளை உசுப்பிவிட, அவர்கள் கருளிவேலுவை இழுத்துபோட்டு அடித்து பல்லையும் உடைத்து பந்தாடிவிட்டனர். அதன் பிறகு அவசரமாக கட்சிக் கிளையைக்கூட்டி கருளிவேலுவை கட்சியிலிருந்து நீக்கிவிட்டோம்; அவருக்கும் கட்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று அறிவித்து விளம்பரப் பலகையையும் மாட்டிவைத்தனர். அதே சமயம் தர்மராஜ் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதுநாள் வரை கருளிவேலுவின் மோசடிக்கு உடந்தையாகவும் ''தோழரே!'' என்று தோளில் கைபோட்டுக்கொண்டும் திரிந்த 'மார்க்சிஸ்டு' தலைமை இன்று மோசடி அம்பலமானதும் நவீன விசுவாமித்திரர்களாக உனக்கும் எனக்கும் தொடர்பில்லை என்று நாடகமாடுகின்றனர். வட்டிக்கு விடுவது, வாடகைக்கு விடுவது, லாட்டரிசீட்டு கடை நடத்துவது - முதலானவை மார்க்சிய கொள்கைக்கு எதிரானது என்று அறிந்தும் கருளிவேலு இத்தொழிலை செய்ய கட்சித்தலைமை அனுமதித்தது ஏன்?

பஞ்சாயத்து தேர்தலில் உங்களுக்காக உழைக்க கருளிவேலுக்கு வாக்களியுங்கள் என்று பிரச்சாரம் செய்து, அவரை தலைமேல் தூக்கிவைத்து ஆடிவிட்டு இன்று வெறுத்தொதுக்குவது ஏன்?

கருளிவேலுவை வெளியேற்றியதன் மூலம் தங்களை உத்தமர்களாக காட்டிக் கொள்ள 'மார்க்சிஸ்டு' தலைமை முயற்சிக்கிறது. ஆனால் கட்சிக்குள்ளே கந்துவட்டி கொடுப்பவர்கள், குடிகாரர்கள், இரண்டு மனைவிகளை வைத்திருப்பவர்கள், சாதி சங்கத்தில் உள்ளவர்கள், சூதாடிகள் முதலான கடைந்தெடுத்த கழிசடைகள் நிரம்பி வழிந்து, தலைவர்களாகவும் வலம்வந்து கொண்டிருக்கிறார்கள்.

போலிக் கம்யூனிஸ்டுத் தலைமையின் கீழுள்ள புரட்சிகர அணிகளே, சாயம் வெளுத்து சந்தி சிரிக்கும் இவர்கள் புரட்சியை வழிநடத்துவார்கள் என்று இன்னுமா நம்புகிறீர்கள்? இனியும் தாமதிக்காமல் போலிக் கம்யூனிஸ்டுக்கட்சியை விட்டு வெளியேறுங்கள்! புரட்சிகர மார்க்சிய -லெனினிய இயக்கத்தில் அணி திரளுங்கள்!

தகவல்: புதிய ஜனநாயக வாசகர் வட்டம், கம்பம்.

www.padippakam.com



போபால் விஷவாயு வழக்கில் குற்றவாளிகளுக்காக எதிரெதிரே நின்று வாதாட வந்த வக்கீல்கள் இங்கே கூடிக் குலாவுகின்றனர். கம்பெனி வக்கீல்கள் நாரிமான், க்ரோலே; அரசு வக்கீல்கள் தாதா சான்ஜி மற்றும் பராசரண்.

# கோர்ட்டுகளில் நீதி கிடைக்குமா?



"போபால் விஷவாயு விபத்து" வழக்கிலே யூனியன் கார்பைடு கம்பெனியுடன் பாசிச ராஜீவ் கும்பல் செய்துகொண்ட தேசத்துரோக ஒப்பந்தத்துக்குப் பொறுப் பேற்றுத் தனது முத்திரையைக் குத்தியுள் ளது நாட்டின் உச்ச"நீதி" மன்றம். அதன் மூலம் "மிகவும் புனிதமானது, சுயேச்சை யானது, நீதி வழுவாதது, சந்தேகத்துக்கோ -விமர்சனத்துக்கோ இடமற்றது நாட்டின் நீதித்துறை" என்று அதைச் சுற்றியுள்ள அங்கியைத் தானே கிழித்தெறிந்து விட்டு அதுவே அம்மணமாக நிற்கிறது. சாதாரண - கீழ்நிலை முன்சீப் கோர்ட்டுகளில் இருந்து சுப்ரீம் கோர்ட்டு வரை அன்றாடம் ஆயிரத் தெட்டு வழக்குகளிலே இப்படி நீதி கொல் லப்படுகிறது; அநீதி ஆட்சி செலுத்துகிறது. "போபால் விஷவாயு விபத்து" வழக்குக்கு முன்னும் பின்னும் கூட வேறு இரண்டு வழக்குகளில் அப்பட்டமான அநீதியான தீர்ப்புகளை வழங்கியது உச்ச"நீதி" மன்றம்.

☆ சீக்கியர்களின் ரத்தம் குடிக்கத் துடிக்கும், சீக்கியர்களைப் பழி வாங்க -பலியிடத் துடிக்கும் பாசிச ராஜீவுக்கு உடந்தையாகி இந்திரா கொலை வழக்கிலே நிரபராதியான கேஹார் சிங்கைத் தூக்கிலிட்டுக் கொன்றது. கேஹார் சிங் குற்றவாளிதான் என்பதை நிரூபிப்பதற்கான எவ்வித ஆதாரமும் இன்றி, கொலையாளி பியந்சிங்கினுடைய உறவுக்காரர் என்பதால் வெறும் ஊகம் -சந்தேகத்தைக் கொண்டு இட்டுக்கட்டிய சதிக்குற்றத்தை ஏற்றுத் தூக்கிலிட்டது.

☆ 14வயது சிறுமி சுமன் ராணியை இரு அரியானா போலீசுக்காரன்கள் கற்பழித்த வழக்கில் கீழ்க் கோர்ட்டுகள் விதித்திருந்த பத்தாண்டு சிறைத் தண்டனையை ஐந்தாண்டுகளாக உச்ச"நீதி" மன்றம் குறைத்து விட்டது. அந்தப் பெண் ஒழுக்கக் கேடானவள் என்ற போலீசுக் காரன்களுடைய வாதத்தை ஏற்றுக் கொண்டு, "பலியான பெண்ணின் ஒழுக்கக் கேட்டைக் கவனத்தில் கொண்டு குறைவான தண்டனைக்கும் குறைவாக தண்டிக்கிறோம்" என்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. அது மட்டுமல்ல; வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச் சுவதைப் போல தனது தீர்ப்புக்குப் பின் வரும் விளக்கமளித்துள்ளது. "அரசிடமிருந்து நீதியும் அதன் சட்டங்களின் காவலர்களிடமிருந்து பாதுகாப்பும் ஒரு பெண் கோரினால் அவள் தனது கன்னித்தன்மை குலையாமல் காத்துக் கொள்பவளாக இருக்க வேண்டும்"

சுப்ரீம் கோர்ட்டின் இந்த இரண்டு தீர்ப்புகளே போதும். கொலையாளிகளை விடக் கொடியவர்கள், கற்பழிக்கும் காம வெறியர்களை விட அயோக்கியர்கள்தான் கருப்பு அங்கி அணிந்து கொண்டு 'நீதிபதி'களாகக் கோர்ட்டுகளிலே வீற்றிருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்கு! அப்படிப் பட்டவர்களிடம் இருந்து நீதி கிடைக்குமா?

## போபால் விஷவாயு வழக்கு: அம்மணமான அநீதி!

1989, பிப்ரவரி, 14ந்தேதி, போபால் விஷவாயு வழக்கிலே திடீரென்று சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்தது. உடனே யூனியன் கார்பைடின் அமெரிக்க வக்கீல் வில்லியம் க்ரோலே தான் தங்கியிருந்த ஐந்து நட்சத்திர ஓட்டலான ஓபேராய்க்கு விரைந்தார். அமெரிக்காவிலுள்ள தனது முதலாளிகளுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். அன்று அமெரிக்காவில் பரிசுப் பொருட்களும், வாழ்த்துக்களும் பரிமாறிக் கொள்ளும் வாலந்தினா திருவிழா நாள். அதற்குப் பொருத்தமாக, "ஒரு மகிழ்ச்சியான செய்தி! வழக்கில் நாம் ஜெயித்து விட்டோம்!" என்று கொண்டாட்டத்தோடு அறிவித்தார். இருக்காதா! ஆயிரக் கணக்கானோரைக் கொன்று லட்சக் கணக்கானோரைப் படுகாயப் படுத்தியவர்கள் அனைத்து சிவில் -கிரிமினல் குற்றங்களில் இருந்தும் தண்டனையின்றித் தப்பிக் கொண்டார்கள்.

வழக்கு முடிந்த அந்நாளை யூனியன் கார்பைடின் தலைமையகமும் கிளைகளும் குதூகலத்தோடு கொண்டாடின. "உலகின் பல இடங்களிலும் நூற்றுக்கணக்கான உயர் வகை மதுப்புட்டிகள் உடைபட்டுப் பொங்கின" என்று மகிழ்ச்சியோடு சொல்கிறார் அமெரிக்காவில் உள்ள கம்பெனியின் இந்திய வக்கீல் டி.எஸ்.சாஸ்திரி.

1989 பிப்ரவரி 19ந்தேதி அதாவது தீர்ப்பு வந்த ஐந்தாம் நாள், போபால் அமீதியா மருத்துவமனை; கம்பெனியின் விஷவாயுவான மிதைல் ஐசோ சைனைடு தாக்கிப் பாதிக்கப்பட்டவர்களின் பிரிவு. உள்ளூர் உருதுப் பள்ளியின் ஏழை ஆசிரியர் அஷிக் அலி. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு விஷவாயு தாக்கியவர். பல உறுப்புகள் சேதமாகி, ஈரல் வீங்கி, நுரையீரலில் ரத்தப் பெருக்கு ஏற்பட்டு இப்போது இறந்து போனார். யூனியன் கார்பைடின் ஏகபோக முதலாளிகள் இந்திய சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பு அறிந்து மகிழ்ச்சியில் -மதுவில் மிதக்கிறார்கள். போபாலில் இருந்து இன்றும் சாவுச் செய்திகள் வருகின்றன. ஆகவே சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புக் கேட்டுக் கொதிப்படைந்து போயுள்ளனர், பாதிக்கப்பட்ட போபால் மக்கள். அவர்களுக்காக போராடும் இரு அமைப்புகளின் தலைமையில் 3,000 பேர் புதுடில்லி சுப்ரீம் கோர்ட்டின் முன்பும், நாடாளுமன்றத்தின் முன்பும் யூனியன் கார்பைடு அலுவலகம் முன்பும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். ஆர்ப்பாட்டம் நடத்திய பெண்கள் உட்பட பலரைப் போலீசார் அடித்துக் காயப் படுத்தினர்



படிப்பகம்

www.padippakam.com

யூனியன் கார்பைடுடனான இந்திய அரசு ஒப்பந்தம் ''விலை போன செயல்'' என்று ஏறக்குறைய எல்லாப் பத்திரிக்கைகளுமே சாடியுள்ளன. எதிர்க்கட்சி எம்.பிக்கள் உட்பட பல அரசியல்வாதிகள், முன்னாள் ''நீதிபதி''கள், பிரபல வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள், சமூக சேவகர்கள் என்று பல்வேறு தரப்பினரும் தீர்ப்பை எதிர்த்துள்ளனர். அத்தனைபேரும் ஒரு குற்றச்சாட்டை வலியுறுத்திக் கூறுகின்றனர்.

''அரசும் யூனியன் கார்பைடும் போட்டுக் கொண்ட ஒரு இரகசிய ஒப்பந்தத்துக்கு முடுதிரையாக நீதித்துறையைப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. அந்த யுக்திக்கு, துரதிருஷ்டவசமாக நீதித்துறை பலியாகிவிட்டது'' என்கின்றனர்.

போபால் விஷவாயு வழக்குத் தீர்ப்பை எதிர்ப்பவர்கள் பல சட்டபூர்வமான, நியாயமான வாதங்களை முன்வைக்கின்றனர்.

◇ இந்த விவகாரத்தின் பிரதான வழக்கு பற்றிய குற்றப் பத்திரிக்கை தயாரிக்கப்பட்டு இன்னமும் விசாரணைக்கு வைக்கப்படவில்லை. இடைக்கால நிவாரணம் கோரும் வழக்கின் மேல் முறையீட்டை விசாரித்துக் கொண்டிருக்கும் போதே வழக்கின் வாதப்பிரதி வாதங்கள், சாட்சி விசாரணைகள், பரிசீலனைகள் எதுவுமின்றி திடீரென்று தான்தோன்றித்தனமாக சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு வழங்கியுள்ளது. இதுவே முறைகேடானது - சட்ட விரோதமானது.

☆ யூனியன் கார்பைடுக்கு எதிரான எல்லா வழக்குகளையும் ஒரே அடியாக ரத்து செய்ததோடு எதிர்கால வழக்குகளில் இருந்தும் பாதுகாப்புக் கொடுத்த சுப்ரீம் கோர்ட்டின் நடவடிக்கை அதிகாரவரம்பு -நீதிவரம்பு மீறியது.

☆ 4500 கோடி ரூபாய் நட்டஈடு கோரியுள்ள விவகாரத்தில் 715 கோடி ரூபாய் நிவாரண நிதியை ஏற்றுக் கொண்டது எந்த அடிப்படையில்? அரசே சமரசப் பேச்சு வார்த்தையைத் தவிர்த்து வருவதாகக் காட்டிக் கொண்ட விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டு ஏன் தலையிட வேண்டும்?

☆ திடீரென்று கோர்ட்டு அறிவித்த தொகையை மறுபேச்சின்றி இருதரப்பும் ஏற்றுக் கொண்டன. ''நீதிபதி''களும், இருதரப்பு வக்கீல்களும் ஏற்கனவே இரகசிய பேரம் நடத்தி ஒப்புக்கொண்டு அறிவிக்காமல் இது எப்படி நடந்தது?

☆ தீர்ப்புக்கு முதல்நாள் மந்திரிசபையின் அரசியல்குழு கூடி ஒப்பந்தத்தை அங்கீகரித்துவிட்டு, சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புபோல நாடகமாடியுள்ளார்கள். 4,500 கோடி ரூபாய் நட்டஈடு கோரி விட்டு அதிலே 14 சதவிகிதமேயான தொகைக்கு ஒப்புக் கொள்ள அரசு வழக்கறிஞர்களுக்கு யார் அனுமதி கொடுத்தது?

— இப்படி நியாயபூர்வமான, சட்டபூர்வமான எதிர்ப்புகள் வந்ததும் இவையெல்லாம் நீதிபதிகளை சந்தேகிப்பவை, நீதித்துறைக்கே எதிரானவை, அதன் புனிதத்தைக் கெடுப்பவை என்று அரசுத்துறையினர் எகிறிக் குதிக்கின்றனர். ''நீதிபதிகளுக்கு எதிரான அசிங்கமான தாக்குதல்கள்; உள்நோக்கம் கற்பிப்பவை; ஒரு ஒப்பந்தத்தைத் திணிப்பதன் மூலம் அவர்களுக்கு என்ன ஆதாயம் இருக்க முடியும்? அவர்கள் ஏன் அதற்கு சம்மதிக்க வேண்டும்?'' என்று இந்த வழக்கில் இந்திய அரசு சார்பாகத் தலையிட்டிய துரோகத்தரகு வக்கீல் பராசரன் விசுவாசமாகக் குலைத்திருக்கிறார்.



போபால் விஷவாயுவால் பாதிக்கப்பட்ட மக்கள், தீர்ப்புக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டுக்கு முன்பாக நடத்தும் ஆர்ப்பாட்டம்.

இந்த வழக்கிலே அநீதியான தீர்ப்பளித்த ஐந்து பேர்களில் ஒருவர் ஈ.எஸ். வெங்கிடராமையா. தீர்ப்பின் மீதான விமர்சனங்களைப் பொறுக்கமாட்டாமல் ஆத்திரப்பட்டுள்ளார். ஆனால் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு மிகவும் பொறுப்பான நீதிமானைப் போல பாசாங்கு செய்துள்ளார். வழக்கை மறுபரிசீலனை செய்யக் கோரும் மனுவை விசாரித்துக் கொண்டிருந்த வெங்கடராமையா திடீரென்று உணர்ச்சி வசப்படுபவர் போலப் பேசினார். ''நம்பிக்கையில்லை என்று தீர்மானம் போட்டு பதவிநீக்கம் செய்வதை விட பகிரங்கமான விமர்சனம் படுமோசமானது. எங்களுக்கு ஆதரவாக யாருமே பேசவில்லை. திட்டமிட்டு அமைப்பு ரீதியிலான தாக்குதல் நடக்கிறது. தினம்தினம் செய்தித் தாளைத் திறந்தால் அடுத்தடுத்த கட்டுரைகள், அடுத்தடுத்த புகைப்படங்கள் நீதிமன்றத்தைத் தாக்குகின்றன. உள்நோக்கம் கற்பிக்கப்படுகிறது. நாங்கள் உயிரோடு வாழத்தான் வேண்டுமா? இந்த நீதிமன்றம் இருக்கவும் வேண்டுமா?'' என்று ஆதங்கப் படுபவரைப்போல பாசாங்கு செய்தார்.

உடனே, போலிக்கம்யூனிஸ்டு வக்கீலும், ருஷ்யாவின் நம்பகமான அடிவருடியுமான ஆர்.கே.கார்க் எழுந்து, ''நீதிபதிகளின் மீது மக்கள் உயர்ந்த மரியாதை வைத்துள்ளார்கள்'' என்று கூறி சமாதானப்படுத்த முயன்றார். ''அப்படிச் சொல்வதால் என்ன பயன்; முன்னாலே ஒன்று பேசிவிட்டுத் திரைமறைவிலே வேறொன்று செய்கிறார்களே!'' என்று பொருமினார் வெங்கிடராமையா. ''இந்த நீதிமன்றத்திலே வழக்காடும் வக்கீல்கள் கூட பயன்படுத்தக்கூடாத வார்த்தைகளினால் தலைப்பிட்டு சொந்தப் பெயரில் கட்டுரைகள் எழுதுகிறார்கள். நாங்கள் ஏதோ சட்டத்தையே அறியாதவர்கள் என்பதைப் போல அவர்கள் விமர்சிக்கிறார்கள்'' என்று நொந்துகொண்டார்.

''இது அவ்வளவு மோசமான தீர்வு என்றால் என்னுடைய பழைய தீர்ப்பை விலக்கிக் கொள்கிறேன். இந்த அமைப்புகள் ஒரு 20 ஆண்டுகளுக்கு வேண்டுமானால் வழக்காடிக் கொள்ளட்டும். முடிந்தால் அவர்களுக்குப் பணம் பெற்றுத்தரட்டும். இந்த விசாரணைக் குழுவிலிருந்தே நான் விலகிக் கொள்கிறேன். வாழ்க்கையின் இந்தக் கட்டத்தில் ஒரு அமைதியான வாழ்க்கையையே நான் விரும்புகிறேன்'' என்று முதலைக் கண்ணீர் வடித்துள்ளார் வெங்கிடராமையா.

அவர் எவ்வளவுதான் பாசாங்கு செய்தாலும், மனிதாபிமானமும் நேர்மையும் உடைய யாரும் அனுதாபப்பட மாட்டார்கள். ''துறவு'' கொண்டு ஒதுங்கும் அளவு சம்பாதித்துவிட்டார் போலும் என்றுதான் எண்ணுவார்கள். இந்த அநீதியான தீர்ப்புக்காக யாருமே பரிந்து பேசவில்லை என்றும் அவர் புலுகுகிறார். அரசுத்தரப்பினர் அவ்வளவு பேரும், அதன் பிரச்சார சாதனங்கள் அத்தனையும் இந்தத் துரோகத்தை நியாயப்படுத்துமாறு முடுக்கி விடப்பட்டுள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மிகவும் நம்பகமான விசுவாசிகளான ராம்ஜேத் மலானி, தார்குண்டே போன்ற எதிர்த் தரப்பினர்கூட இந்தத் தீர்ப்பை ஆதரித்துள்ளனர். ''நீதி''மன்றத்தையும், ''நீதி''பதிகளையும் குறை கூறவே கூடாது என்று வாதாடும் வெங்கிடராமையா அதே வேலையைச் செய்துள்ளார். இந்த வழக்கில் 350 கோடி ரூபாய் இடைக்கால நிவாரண நிதி அளிக்கும்படி யூனியன் கார்பைடு நிறுவனத்துக்கு உத்தரவு போட்டார் ஜபல்பூர்

படிப்பகம்

www.padippakam.com

மாவட்டத்துணை நீதிபதி. ''அவருடைய உத்திரவைவிட எங்களுடைய தீர்ப்பு மோசமானது என்று நான் கருதவில்லை விசாரணையின்றிக் குடிமக்களை சுட்டுக் கொல்லும் உத்திரவை ஆதரித்தவர்கள் கூட இந்தத் தீர்ப்பைத் தாக்குகிறார்கள்'' என்று வெங்கடராமையா வெடித்துள்ளார்.

அப்படி இவர் எதிர்த்தாக்குதல் தொடுத்திருப்பது சுப்ரீம் கோர்ட்டின் முன்னாள் தலைமை ''நீதி''பதி பி.என்.பகவதியைத்தான்! இந்திராவின் அவசரநிலை ஆட்சியின் போது அரசிடம் சிக்கியுள்ளவர்களை கோர்ட்டுமுன் நிறுத்தும்படி கோரும் வழக்கில் அப்படிக் கோரக் குடிமக்களுக்கு உரிமையில்லை என்று பி.என்.பகவதி உட்பட சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்தது. அதைத்தான் வெங்கடராமையா இங்கு குறிப்பிடுகிறார். ஏனெனில் இப்போது முற்போக்கு வேஷம்போடும் பகவதி போபால் விஷ்வாயு வழக்கின் தீர்ப்பை எதிர்த்துள்ளார். சுயநலம், பதவிச்சண்டை காரணமாக ''நீதி''மன்ற அசிங்கங்களை பகிரங்கமாக அவர்களே அலசத் தொடங்கிவிட்டார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. மற்றபடி நீதியை நிலைநாட்டியே தீரவேண்டும் என்ற அக்கறையே அல்ல.

## நீதித்துறை அல்ல அநீதித்துறை தான்!

போபால் விஷவாயு வழக்கும், தீர்ப்பும் இரண்டு முக்கியமான கேள்விகளைப் பெரிதாகக் கிளப்புகின்றன. ★ நீதித்துறையும், நீதிபதிகளும் அவர்களுடைய தீர்ப்புகளும் புனிதமானவையா? கேள்விக்கோ, சந்தேகத்துக்கோ. விமர்சனத்துக்கோ அப்பாற்பட்டவையா? ★ கோர்ட்டுகளின் மூலம் மக்களுக்கு நீதி கிடைக்குமா?

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு என்பதைச் சொல்லிக் கொண்டே இராணுவம், அரசுத்தலைவர், கோர்ட்டுகள் போன்ற பல விவகாரங்கள் புனிதமானவை, விமர்சனத்துக்கோ, கேள்விக்கோ, சந்தேகத்துக்கோ, மக்கள் பரிசீலனைக்கோ அப்பாற்பட்டவை என்று ஒதுக்கி வைத்துக் கொண்டுள்ளார்கள். உண்மையில் இது மிகவும் நயவஞ்சகமான, சர்வாதிகாரம் ஆகும். தேசிய - அரசு நலன்கள் என்கிற பெயரால் முற்றிலும் இரகசியமான முறையிலே தேசவிரோத, மக்கள்விரோத, ஜனநாயகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக ஆட்சியாளர்கள் பயன்படுத்தும் மிகவும் கேடான தந்திரம் இது.

இராணுவத்தின் அக்கிரமங்கள் -அட்டூழியங்கள், அண்டை நாடுகள் மீதான ஆக்கிரமிப்புகள், ஆயுதபேர ஊழல்கள், அதிகார முறைகேடுகள், அரசின் ராணுவக் கொள்கைகள் போன்றவற்றின் மீது விமர்சனங்கள் வந்தால் போதும்; விளக்கங்கள் கோரினால் போதும்! அவ்வளவுதான்! ''ஆ!.. இராணுவத்தைச் சந்தேகிக்கலாமா? அப்படிச் செய்வது தேசதுரோகமல்லவா?'' என்று பெருங்கூச்சல் போடுகிறார்கள். இராணுவச் செலவுகள் பற்றி அறியவோ, மூச்சு விடவோ கூட அனுமதிப்பதில்லை.

அரசுத்தலைவர் - பிரதமர் தகராறுகள்; அவர்களின் நடத்தைகள் மீதான



அநீதியான தீர்ப்பு வழங்கிய
தலைமை 'நீதி'பதி ஆர்.எஸ்.பதக்

விளக்கங்கள் - செய்திகளைக் கேட்டாலோ, பேசினாலோ போதும், ''புனித' மான பதவியை இழிவுபடுத்தலாமா? அரசு ரகசியங்களைப் பகிரங்கமாக அலசலாமா" என்று அப்படியே அமுக்கி விடுகிறார்கள். இது ஒரு வகையிலான நயவஞ்சகமான சர்வாதிகாரம். இது முற்றிப்போய் தரகு அதிகாரவர்க்க முதலாளிகளின் பொருளாதார - தொழில் விவகாரங்கள் கூட கேள்விக்கு இடமற்றது, இரகசியமானது என்றும் மறைக்கிறார்கள்.

அதேபோல தமது வசதிக்காக, சர்வாதிகார ஆதிக்கத்துக்காக நீதித்துறையும், நீதிபதிகளும், அவர்களின் தீர்ப்புகளும் புனிதமானவை; யாரும் குற்றம் - குறை காண முடியாதவை; விமர்சிப்பதே குற்றம், அவமதிப்பு அதற்கும் தண்டனை உண்டு என்ற லட்சணத்தில் வைத்திருக்கிறார்கள். இது எந்த வகையில் நியாயமானது? அவ்வளவு தூரம் மிக உயர்ந்த தகுதியும், உரிமையும், யோக்கியதையும் அவர்களுக்கு எப்படி வந்தது? அதற்கெல்லாம் அவர்கள் பொருத்தமானவர்கள் -லாயக்கானவர்கள் தானா? இல்லை அவர்களுடைய தீர்ப்புகள் எதுவானாலும் கேட்டுக்கொண்டு அடிபணிந்து போக மக்கள் என்ன மிருகங்களா - அடிமைகளா?

சட்டத்தை அப்படியே கரைத்துக் குடித்தவர்களானாலும் கூட, ''நீதி''பதிகளாக நியமனம் பெறுபவர்கள் தவறே செய்ய முடியாதவர்களோ வானத்திலிருந்து குதித்த புனிதர்களோ கிடையாது. எள்முனை பிளந்தாற்போல நீதி வழுவாது தீர்ப்புக் கூறுவதற்கு அப்படி ஒன்றும் அபூர்வமான மனிதர்கள் அல்ல. நேற்றுவரை பல்வேறு சிவில் - கிரிமினல் குற்றங்களுக்காக ஏதோ ஒரு தரப்பின் பக்கம் நின்று பணத்துக்காக வாதாடியவர்கள்தான். அரசியல்வாதிகள் லாபம் கருதி ஒரு தொழிலாகக் கருதி பதவிக்குப் போட்டி போடுவதைப் போலத்தான் ''நீதி''பதி பதவியைப் பிடித்தவர்கள்.

இவ்வளவு ஏகபோக உரிமையும், அதிகாரமும் உடைய ''நீதி''பதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கூட கிடையாது. வெறுமனே நியமனம் பெற்றவர்கள். அறிவும் நேர்மையும் இந்தப் பதவிகளுக்கான தகுதிகளாகச் சொல்லிக் கொண்டாலும் லஞ்ச ஊழல்,அதிகார முறைகேடுகளைப் பயன்படுத்திதான் அவர்களும் நியமிக்கப்படுகிறார்கள். சட்டபூர்வமான முறையில் மக்களுக்கோ, மக்கள் ''பிரதிநிதி''களுக்கோ ' எந்த வகையிலும் பதில்கூறும் பொறுப்பற்றவர்கள்.

''நீதி''பதிகளும் மற்ற பிற அரசு நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளைப் போன்றவர்கள்தான். லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், பதவிச்சண்டைகள் எல்லாம் நீதித்துறையிலும் நீக்கமற நிறைந்துள்ளன. ஆளும் கட்சியினர் தமக்கு விசுவாசமானவர்களாகப் பார்த்துத்தான் ''நீதி''பதிகளாக நியமிக்கின்றனர். இதற்காக பல நியமன மரபுகளையும் மீறுகின்றனர். ஆளுங்கட்சியின் கொள்கைகளோடு இசைந்து போகும்படியாக ''நீதி''பதிகள் இருக்க வேண்டும் என்று பகிரங்கமாகவே மந்திரிகள் பேசுகின்றனர். ''நீதி''பதிகளைத் தமது விருப்பம் போல ஆட்டிப்படைக்கவும், வெவ்வேறு மாநிலங்களுக்கு மாற்றவும், நீண்டகாலம் தற்காலிக நிலையில் வைக்கவும் மத்திய அரசு அதிகாரம் பெற்றுள்ளது.

அப்படி இருக்கும்போது நீதித்துறையும், நீதிபதிகளும் அவர்களுடைய தீர்ப்புகளும் புனிதமானவை, விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவை என்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அவ்வளவு ஏன்! ஆளும் கட்சியினரோ, எதிர்க்கட்சியினரோ தமக்குப் பாதகமான தீர்ப்புகள் வந்தபோதெல்லாம் கடுமையாகத் தாக்கியுள்ளனர். வங்கிகள் தேசவுடமையாக்கப்படுவதற்கு எதிரான தீர்ப்பு வந்தபோது, ''நீதிபதிகள் பிற்போக்காளர்களாக உள்ளனர்; மக்கள் விருப்பத்துக்கு விரோதமாகச் சிந்திக்கிறார்கள்'' என்று இந்திரா, மோகன் குமாரமங்கலம் போன்ற போலி முற்போக்குகள் நாடாளுமன்றத்திலேயே தாக்கினார்கள். ஷாபானுவின் ஜீவனாம்ச வழக்கிலே உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்தபோது பரத்வாஜ் மற்றும் அன்சாரி * ஆகிய ராஜீவின் இரு மந்திரிகள் கடுமையாகச் சாடினார்கள். கைதிகளை கோர்ட்டின் முன் நிறுத்தக் கோரும் வழக்கு, இந்திரா கொலை வழக்கு உட்பட பல வழக்குகளிலும் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புகளை எதிர்க்கட்சியினர் சாடினர். ஆனால் கோர்ட்டை விமர்சிக்கலாகுமா என்ற கேள்வி வந்தால் மட்டும் ''இல்லை, இல்லை, கோர்ட்டையோ, நீதிபதிகளையோ குறை கூறவில்லை குறிப்பிட்ட தீர்ப்பைப் பற்றி மட்டுமே கருத்துச் சொன்னோம்'' என்று அவர்கள் அனைவருமே நழுவிக் கொள்கின்றனர்.

''நீதிபதிகள் சட்டத்தின் தர்மகர்த்தாக்கள்; நீதித்துறை ஜனநாயகத்தின் அடித்தளம்; சுயேச்சையான நீதித்துறை குடியரசின் இதயமாகும். பயமோ பாராபட்சமே இல்லாது நீதியோடு நேர்மையோடு இயங்கும் நீதிமன்றங்கள் புனிதமானவை'' என்று பாசாங்கு செய்வதற்காகத்தான் அவர்கள் அனைவரும் இப்படி நழுவிக் கொள்கிறார்கள். ஆனால் நீதித்துறையும், நீதிபதிகளும், அவர்களுடைய நடவடிக்கைகளும் நாட்டிலுள்ள இராணுவம், போலீசு, அதிகாரவர்க்கம் நிறுவனங்களைப்போல அரசின் ஒரு அங்கம் தானே தவிர வேறொன்றுமில்லை. மற்ற உறுப்புகளைத் தமக்கு ஆயுதமாகப்

படிப்பகம்

www.padippakam.com

பயன்படுத்திக் கொள்வதைப் போலவே ஆளும் வர்க்கங்கள் இதையும் பயன்படுத்திக் கொள்கின்றன. ஆளும் கட்சியும் எம்.எல்.ஏ., எம்.பி. மற்றும் மந்திரி பதவிகளும் அரசு நிறுவனங்களின் தலைவர் பதவிகளும் விசாரணைக் கமிஷன்கள், வெளிநாடுகளில்பதவிகளும்என்றுவாரிவழங்கி ''நீதி'' பதிகளை விலை பேசுகின்றனர்.

தி.மு.கவின் நெல்லை மாவட்டச் செயலாளராக இருந்த ரத்தினவேல் பாண்டியன் 1967ல் அக்கட்சி ஆட்சியைப் பிடித்ததும் உயர்நீதிமன்ற நீதிபதியானார். இப்போது உச்ச நீதிமன்றத்துக்கு போய் சுமன்ராணி வழக்கிலே வெறுக்கத்தக்க அந்தத் தீர்ப்புச் சொன்னார். சுப்ரீம் கோர்ட் ''நீதி''பதி நஸ்ருல் இஸ்லாமும், பம்பாய் உயர்நீதிமன்ற ''நீதி''பதி மசோத்காரும் இந்திரா காங்கிரசு எம்.பி ஆனார்கள். காரணம் பீகார் முதல்வரின் கூட்டுறவு ஊழல் வழக்கை நஸ்ருல் இஸ்லாம் தள்ளுபடி செய்தார். அந்துலேயின் ஊழலில் பிறந்த இந்திரா அறக் கட்டளையில் மசோத்கர் தர்மகர்த்தவாக இருந்தவர்.

1973ல் இந்திராவின் கைக்கூலி ஏ.என்.ரேவுக்கு தலைமை 'நீதி'பதி பதவி அளிப்பதற்காக ஷேலாட், ஹெக்டே, குரோவர் ஆகிய மூத்த ''நீதி''பதிகளைக் கீழே தள்ளினார் இந்திரா. அதேபோல 1977இல் இன்னொரு கைக்கூலி பெக்கை தலைமை ''நீதி''பதியாக்குவதற்காக எச்.ஆர். கன்னாவை ஒதுக்கினார். பின்னர் 1979இல் சரண்சிங் மந்திரி சபையில் கன்னா சட்ட மந்திரி பதவிபெற்று கடும் எதிர்ப்பு காரணமாக விலகினார்.

அவசரநிலை ஆட்சியின் போது தேசிய ஒருமைப்பாடு என்கிற பெயரில் வெளி மாநிலங்களைச் சேர்ந்த 16 ''நீதி''பதிகளை மாநில உச்ச நீதிமன்றங்களின் தலைமைக்கு நியமித்த இந்திரா, மேலும் 40பேரின் இடமாற்றப் பட்டியல் தயாரித்தார். தனது விசுவாசிகளைக் கொண்டு மாநில உயர்நீதிமன்றங்களையும் நிரப்புவதுதான் இதன் நோக்கம். அவசரநிலை ஆட்சியின் மிசா கைதிகளை விடுதலை செய்வதற்காக பம்பாய் உயர்நீதிமன்ற வி.ஆர். லலித்மற்றும் டெல்லி உயர்'நீதி'மன்ற ஆர். என் அகர்வால் ஆகிய இணை ''நீதி''பதிகளை பழிவாங்கினார். பல மாநில உயர்நீதிமன்றங்களில் தற்காலிகத் தலைமை 'நீதி பதிகள், இணை'நீதி'பதிகளைக் கொண்டு எப்போதும் வேலை போகும் பயத்துடனே இயக்கப்படுகிறார்கள். தனது ஆட்சிக்கு முரணான தீர்ப்புச் சொன்ன (திமுக ஆதரவு) நீதிபதிகளை உளவு பார்த்தார் பாசிச எம்.ஜி.ஆர். 'நீதி'பதிகளின் நியமனங்களில் அரசியல் சுயநலன்கள், அதிகார முறைகேடுகள், லஞ்ச ஊழல்கள் மட்டுமல்ல ஜாதி மதவெறியும் புகுந்து விளையாடுகின்றது. சென்னை உயர்நீதிமன்றத் தலைமை 'நீதி'பதி சந்துருக்கரும், மத்திய சட்ட மந்திரி பரத்வாஜும் சேர்ந்து கொண்டு பார்ப்பனர்களை நியமிக்க முயன்றனர்; பார்ப்பனர் அல்லாத தகுதியில்லாத தனது சாதிக்காரரை நியமிக்க மந்திரி பொன்னையன் முயன்றார். இப்படிப்பட்ட பதவிச் சண்டைகள் காரணமாக பல ''நீதி''பதி பதவிகள் பல மாநிலங்களிலும் நிரந்தரமாகவே காலியாக இருக்கின்றன.



நீதி'பதி வெங்கிடராமையா

இந்த லட்சணத்தில் நீதித்துறையும், நீதிபதிகளும், அவர்களுடைய தீர்ப்புகளும் புனிதமானவையாக எப்படிக் கருத முடியும்?அது மட்டுமல்ல இந்த நீதித்துறை கட்டி எழுப்பப்பட்டுள்ள அடித்தளமே இழிவானது; தேசவிரோதமானது; மக்கள் விரோதமானதுஜனநாயக விரோதமானது. ஆங்கிலேய காலனியவாதிகளால் உருவாக்கப்பட்ட இந்த நீதித்துறை அதே சட்டதிட்டங்கள், மரபுகள், நெறிமுறைகள், பழக்கவழக்கங்களோடு தொடர்கிறது. சட்டப்பிரிவு 372-இன்படி காலனிய ஆட்சிகாலத்து சட்டங்கள் அனைத்தும் தொடர்ந்து நீடிப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த நாட்டு மக்களை அடக்கி ஒடுக்கி, கொள்ளையிடுவதற்காக அந்நிய ஆட்சியாளர்களால் போடப்பட்ட சட்டங்கள் - கண்ணை மூடிக்கொண்டு காலனிய ஆதிக்கத்துக்கு அடிபணியும்படி கூறும் சட்டங்கள் - அடிப்படையிலான நீதித்துறை, நீதிபதிகள், அவர்களுடைய தீர்ப்புகள் எப்படிப் புனிதமானதாகும்!

### கோர்ட்டுகளில் நீதி கிடைக்குமா? பாறையிலே புல் முளைக்குமா?

இரண்டுமே ஒரு போதும் நடக்காது. இதை நிரூபிப்பதற்காக நீண்ட விளக்கங்களே தேவையில்லை. பிரபலமான சில வழக்குகளில் வந்துள்ள தீர்ப்புகளே அதை நிரூபிப்பதற்கான உயிருள்ள சாட்சியங்களாக உள்ளன.

★ 1971 வங்கதேசப் போரின்போது, இந்திராவைப் போல பேசி டில்லி அரசு வங்கியிலிருந்து 60 லட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டு போனான் நகர்வாலா. அந்த வழக்கை ஒரே நாளில் விசாரித்து(!) அவனுக்குச் சிறைத்தண்டனை விதித்தது. நகர்வாலாவும், வழக்கைத் துப்பறிந்த போலீசு அதிகாரியும் மர்மமான முறையில் மாண்டு போனார்கள்.

★ வைப்பாட்டிக்காக கூலிக் கொலைகாரர்களை வைத்து மனைவியைக் கொன்ற புதுடில்லி டாக்டர் ஜெயினுக்கு ஆயுள்தண்டனை விதித்து, பிறகு அதையும் குறைத்து விடுதலை செய்தது. ஆனால் கூலிக் கொலைகாரர்களைத் தூக்கிலிட்டது. காரணம் ஜெயின் செல்வாக்குள்ள நபர் என்று கூறியது.

★ இந்திராவின் தேர்தல் வழக்கிலே அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக்காலத்தடை விதித்தும், பிறகு வழக்கைத் தள்ளுபடி செய்தும் பாசிச ஆட்சியைக் கொண்டுவர சுப்ரீம்கோர்ட் உதவியது.

★ ஒரிசாவிலே, காங்கிரசாரின் ஊழல்களை அம்பலப்படுத்திய பத்திரிக்கையாளர் மனைவி சாபிரானியைக் கற்பழித்துக் கொன்ற வழக்கிலே குற்றவாளிகளை விடுதலை செய்தது.

★ 1978 கீழ்வெண்மணியில் 44 தாழ்த்தப்பட்ட மக்களை எரித்துக்கொன்ற வழக்கிலே, ''ஒரு நிலப்பிரபு, பணக்காரர் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்திருக்கமாட்டார்'' என்று கூறி இரிஞ்சூர் கோபால கிருஷ்ணநாயுடுவை விடுதலை செய்தது; ஆனால் அவரது அடியாளைக் கொன்றதாக 8 விவசாயிகளுக்கு சிறைத்தண்டனை விதித்தது.

★ கேரள ராஜன் அவசநிலை ஆட்சியிலே சித்தரவதை செய்து கொல்லப்பட்ட வழக்கிலே, ''உண்மை விவரத்தை கறப்பதற்காக கைதிகளை சித்தரவதை செய்வது குற்றமல்ல'' என்று தீர்ப்பளித்து போலீசு அதிகாரிகளை விடுதலை செய்தது.

★ அந்துலேயின் அறக்கட்டளை ஊழல்கள், ஜகன்னாத மிஸ்ராவின் கூட்டுறவு ஊழல்கள் போன்ற பல ஊழல் வழக்குகளிலும் குற்றவாளிகளைத் தப்புவித்தது.

★ கல்கத்தா உயர்''நீதி''மன்றம் சாராய வியாபாரிகள், ஏகபோக தரகு முதலாளிகள், கடத்தல்காரர்கள் போன்றவர்களுக்கு வாய்வழிவிசாரணைமூலம் பல தடைஉத்திரவுகள் போட்டு உடந்தையாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

★ நடைபாதைவாசிகளுக்கு வாழ்விட உரிமையை அரசு உத்திரவாதம் செய்ய வேண்டியதில்லை; அவர்களுடைய குடிசைகளை இடித்துத்தள்ளுங்கள் என்று சுப்ரீம்கோர்ட் தீர்ப்பளித்தது. மிசா சட்டத்தின் கீழ் விசாரணையின்றி கைதிகளைச் சுட்டுக் கொல்ல அரசுக்கு உரிமை உண்டு என்று முடிவு சொன்னது.

★ விசாரணையின்றி அரசு ஊழியர்களை வேலை நீக்கம் செய்ய உரிமை உண்டு என்று தீர்ப்பளித்தது.

★ மகாராஷ்டிராவில் மதுரா என்ற ஆதிவாசிப் பெண்ணை போலீசுக்காரன்கள் கற்பழித்த வழக்கில் அவள் விபச்சாரி என்பது உட்பட கேவலமான பலகாரணங்களைச் சொல்லி விடுதலை செய்தது. பல பெண்கள் அமைப்புகள் போராடி மறுபரிசீலனை கோரிய பிறகு ஐந்தாண்டு தண்டனைக்கு ஒப்புக் கொண்டது.

★ பார்வதிபுரம், செகநதிராபாத், சென்னை - ஐதராபாத் ஆகிய சதி வழக்குகளில் காலனிய காலத்து 124ஏ பிரிவின் கீழ் வழக்காட ஏற்றுக்கொள்கிறது. போலீசுக்கு உடந்தையாக இருந்து பல ஆண்டுகள் விசாரணையின்றி சிறையில் தள்ளவும் ஒப்புக்கொள்ளுகிறது.

★ அரசு மீது போர் தொடுத்து ஆட்சியைக் கவிழ்க்க முயன்றதாகக்கூறும் அதே 124ஏ பிரிவின் கீழ் பல சீக்கியர்களை ஐந்தாண்டுகளுக்கு மேல் விசாரணையின்றி



படிப்பகம்

www.padippakam.com

சிறையிலடைக்கவும், பாசிச ராஜீவ் கும்பல் விரும்பும்போது அவர்களைப் பணயக் கைதிகளாகப் பயன்படுத்தவும் அனுமதிக்கிறது.


— இப்படி ஏராளமான -கணக்கற்ற வழக்குகளை அடுக்கிக் கொண்டே போக முடியும். இவையும் கூட உயர்'நீதி'மன்ற உச்ச'நீதி'மன்ற அநீதிகள்தான். இன்னும் கீழ்க்கோர்ட்டுகள் அனைத்துமே போலீசுத் துறையின் தொடர்ச்சியான அடக்குமுறை, அக்கிரம மையங்களாகவே உள்ளன. போலீசாரோடு நேரடி பேரத்தின் அடிப்படையிலே அவை இயங்குகின்றன. ஒவ்வொரு வழக்குக்கும் இவ்வளவு தொகை என்கிற பட்டியல் போட்டு 'நீதி'பதிகள் வசூலிக்கிறார்கள்.

### மக்கள் மீது சவாரி செய்யும் கோர்ட்டுகள் எதற்கு?

கண்முன்னே பயங்கரமான கொலை நடந்தாலும் சரி, கோரமான விபத்திலே அடிபட்டு ஓர் உயிர் துடித்தாலும் சரி! மனதைக் கல்லாக்கிக் கொண்டு மனிதத்தன்மையற்றவர்களாகி தப்பி ஓடவே செய்கிறார்கள், மக்கள். ''கோர்ட்டு, கேசுன்னு மாட்டிக்குவோம்'' என்ற அச்சம் அவர்களைத் துரத்துகிறது. அவநம்பிக்கை - வெறுப்பு, பயம் -பீதி இவை போலீசின் மீது எந்த அளவு உள்ளதோ அதே அளவு கோர்ட்டுகளின் மீதும் மக்களுக்கு உண்டு. நியாயம் தம்பக்கம் இருக்கிறது என்று நிச்சயம் நம்பும் நேர்மையானவர்கள்கூட எவ்வளவோ சிவில் வழக்குகளில் கோர்ட்டுக்குப் போக அஞ்சுகின்றனர். அங்கே போய் போண்டியான அனுபவசாலிகள் பலரைப் பார்க்கிறார்கள். கிரிமினல் குற்றங்கள் -அக்கிரமங்களுக்குப் பலியாகும் அப்பாவிகள்கூட நீதி கேட்டு கோர்ட்டுகளுக்குப் போவதில்லை. அங்கே நீதி நிலைநாட்டப்படுவதை விட தண்டிக்கப்பட்ட நிரபராதிகள் பலரைப் பார்க்கிறார்கள்.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள், குறிப்பாக கிராமப்புற கூலி ஏழைவிவசாயிகளைப் பொருத்தவரை கோர்ட்டுகளில் நீதி கிடைக்கும் என்பதற்கான நம்பிக்கைக்கு சிறிதும் இடமில்லை. கோர்ட்டுகளின் இருப்பிடங்கள், அங்கே ஆட்சி செய்யும் மொழி, ஆதிக்கம் செலுத்துபவர்களின் அதிகாரதிமிர், செலவு செய்ய வேண்டிய நிதி ஆகிய எல்லாவகையிலும் மக்களுக்கு அந்நியமானது, தொலைதூரத்தில் இருப்பது கோர்ட்டுகள். இன்னும் சொன்னால் அவர்கள் அறியாமல் செய்த தவறுகள், செய்யாத குற்றங்களுக்காக அநீதியான முறையிலே தண்டிக்கும் எதிரிகள் தொழில் நடத்தும் இடம் கோர்ட்டுகள். ஆங்கிலேய மொழியும், மரபுகளும், சட்டதிட்டங்களும் இன்னும் கோர்ட்டுகளில் நீடிப்பதற்குக் காரணம் -மக்களுக்குப் புரியக்கூடாது, பீதியூட்டி ஆதிக்கம் செலுத்தவேண்டும். அதிகாரத்திமிர் - ஆணவம் கண்டு மக்கள் அஞ்சி நடுங்கவேண்டும் என்பதுதான். கோர்ட்டு விவகாரங்கள் அனைத்தையும் மர்மமான மயான அமைதியோடு, இரகசிய மூடுதிரைக்குப் பின்னே நடத்துவதற்கான காரணமும் அதுதான். அடிமை நாட்டவரை காலனியவாதிகள் அடக்கி ஒடுக்கிய அதே முறை பின்பற்றப்படுகிறது.

கோர்ட்டுகளில் குவிந்து வரும் வழக்குகளை அநீதியான முறையில் அவசர கோலத்தில் தீர்க்கவும், இன்னும் கடுமையான சட்டபூர்வ அடக்குமுறையை ஏவவும் சீர்திருத்தங்கள் என்கிற பெயரில் 'நீதி'த்துறையை இன்னும் கொடிய ஆயுதமாகக் கூர்தீட்டுகிறது அரசு. எல்லா உரிமைகளையும் மறுத்து இரகசிய விசாரணை நடத்தி அநீதியான முறையிலே தண்டிப்பதற்கானவை தனிச்சிறப்பான கோர்ட்டுகள்; மேல் முறையீடு, விசாரணை எதுவுமின்றித் தான்தோன்றித்தனமாக தீர்ப்பு வழங்குவதற்கு மக்கள் கோர்ட்டுகள் என்ற பெயரில் கட்டைப்பஞ்சாயத்து அமைப்புகள்; அதே போல பிற்போக்கான நிலப்பிரபுத்துவ குடும்ப உறவை அமுலாக்க குடும்ப கோர்ட்டுகள்; போலீசுக்காரன்கள், காட்டிலாகா -சுங்கலாகா போன்றவற்றின் அதிகாரிகளே தண்டிக்கும் சட்டவிதிகள் ஆகியன இதற்காகத்தான் வருகின்றன. இவற்றில் லட்சக்கணக்கான வழக்குகள் ஒரே ஆண்டில் தீர்க்கப்பட்டதாகவும், தீவிரவாதிகள் தண்டிக்கப்பட்டதாகவும், குடும்பத்தகராறுகளில் சமரசம் செய்ததாகவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டிவிட்டதாகவும் அரசு பீற்றிக் கொள்கிறது.



கோர்ட்டுகளின் மீதான மக்கள் கொண்டுள்ள அவநம்பிக்கை எல்லை மீறிப் போய்விடக்கூடாது என்பதற்காக ''பொதுநல வழக்குகள்'' என்றொரு பாசாங்கு செய்கின்றனர். அதாவது அநீதி இழைக்கப்பட்டவர்களுக்காக யார் வேண்டுமானாலும் வழக்குத் தொடுக்கலாம்; விதிமுறைப்படி வக்காலத்து - மனுப்போட்டு கோர்ட்டை அணுகத் தேவையில்லை. ஒரு தபால் அட்டையிலோ, தந்தியிலோ, துண்டுச் சீட்டிலோகூட முறையிடலாம் என்கிறார்கள். இதன்கீழ் ஆசியவிளையாட்டுத்திடல்கட்டிடத் தொழிலாளர்கள், பாகல்பூர் கண்பறிப்பு, பீகார் - ஒரிசா அனாதைகள் இல்லச்சீர்கேடு, சிவகாசி சிறுவர் உழைப்பு போன்ற பல வழக்குகள் தொடுக்கப்பட்டன. ஆனால் விளைவு என்ன? கோர்ட்டுகளுக்கென்று தனியே நிர்வாக அதிகாரிகள் - அமைப்புகள் கிடையாது. அரசு இலாகாக்கள் மூலமேதான் கோர்ட்டு தீர்ப்புகள் அமுலாக்கப்பட வேண்டும். மேற்கண்டவை மட்டுமல்ல, நாட்டிலுள்ள 80 சதவீத வழக்குகள் அரசுக்கு எதிரானவை. எனவே தீர்ப்புகள் எதுவானாலும் கிடப்பிலே போடப்படுவதும் எதிராகச் செயல்படுவதும்தான் நடக்கிறது.

குற்றமிழைப்பதும், குற்றத்தைத் தடுக்கத்தவறுவதும், தண்டிக்கப்படவேண்டியதும் மிகமிகப் பெரும்பான்மையான வழக்குகளில் அரசுதான். அடிமுதல் நுனிவரை அரசின் வெவ்வேறு உறுப்புகள் கூட்டுச் சேர்ந்துகொண்டு திட்டமிட்டு குற்றங்கள் செய்யும் போது, அரசின் ஒரு அங்கமான கோர்ட்டுகளிடம் இருந்து எவ்வாறு நீதி கிடைக்கும்? இப்போதும்கூட கொத்தடிமைகளாக உழைத்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் இல்லை; அப்பாவிகளின் கண்களைப்பறித்த போலீசுக்காரன்கள் தண்டிக்கப்படவில்லை - பதவி உயர்வுதான் பெற்றுள்ளனர்; அனாதை இல்லங்கள் சீர்திருத்தவில்லை. சிவகாசி சிறுவர் உழைப்பு - சுரண்டல் நீடிக்கிறது.

ஆகவே எப்படிப் பார்த்தாலும் கோர்ட்டுகளில் நீதிகிடைக்கவே கிடைக்காது. எனவே இந்தக் கோர்ட்டுகளை நம்ப முடியாது! இந்த கோர்ட்டுகள், ''நீதி'' முறைகள் அநீதியானவை -அகற்றப்படவேண்டியவை. இராணுவம், போலீசு, ஓட்டுக்கட்சிகள் ஆகியவற்றைப் போலவே கோர்ட்டுகளும் அதிகார ஆதிக்கத்தைத் தாமே சமாதானமான முறையில் விட்டுவிட மாட்டா. மக்கள் இந்த அநீதி மன்றங்களைத் தூக்கி எறிந்துவிடவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ''நீதி''பதிகளைக் கொண்ட புதிய முறையிலான மக்கள் நீதிமன்றங்களை நிறுவிக்கொள்ளவேண்டும். புரட்சியின் மூலம் அமைக்கப்படும் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரஅரசின் புதிய நீதித்துறையையும் சட்டவிதிமுறைகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

— ஆர்.கே.

படிப்பகம்

www.padippakam.com



# சாராய ஆறுபொங்குகிறது!

கருணாநிதியின் ஆரம்ப சூரத்தனங்களைக் கண்டு அகமகிழ்ந்துபோன பத்திரிக்கையாளர்களும் படிப்பாளிகளும், ஆட்சி கட்டில் ஏறிய 60 நாட்களுக்குள்ளேயே கருணாநிதி இப்படி கை அரிப்பெடுத்து அலைவார் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. 13 ஆண்டுகால வனவாசத்தை கணக்கில் கொண்டு இனி கருணாநிதி நீதி வழுவாது நேர்மையாக செயல்படுவார் என்று ஆரூடம் கூறினார்கள். புரட்சியாளர்கள் இதை மறுத்து ஆரம்பத்திலேயே துணிந்து ஒரு உண்மையை அறைந்து கூறினார்கள். '13 ஆண்டுகால பதவிபட்டினி கருணாநிதியையும் அவரது கும்பலையும் எந்த விதத்திலும் திருத்திவிடாது. மாறாக அதிகாரத்தை பயன்படுத்தி பல புதுப்புது தந்திர உபாயங்களை கையாண்டு முன்னிலும் மூர்க்கமாக இரைதேடும் வேட்டையில் இறங்குவார்கள்'' என்றார்கள்.

இதோ, புரட்சியாளர்கள் கூற்று அறுபதாம் நாளிலேயே உண்மை என நிரூபணமாகிவிட்டது. அதிமுக ஆட்சியில் நடந்த சாராய ஊழல்களை வெளிக் கொணர்வது (குற்றவாளிகளை தண்டிப்பது அல்ல) என்ற கருணாநிதியின் ஆரம்ப சூரத்தனத்திலேயே பொதுநலன் என்பதைவிட கருணாநிதியின் அவரது கும்பலின் சொந்த நலன்தான் மேலோங்கியிருக்கிறது என்று கருணாநிதி ஆட்சிக்கு லாலி பாடுபவர்களே புள்ளி விபரங்களை கொடுக்கிறார்கள். இருந்தாலும், இது உண்மையல்ல ஊகம்தான்! கருணாநிதி ஆட்சியிலும் தவறியும் திரும்பவும் தவறு நேர்ந்துவிடக் கூடாது என்று எச்சரிக்கவே காதில் கேட்டதை கவனத்திற்கு கொண்டுவருகிறோம் என்று சமாதானம் கூறுகிறார்கள். விசயம் இதுதான். எம்.ஜி.ஆர் தனது 10 ஆண்டுகால ஆட்சியில்போது சாராய உடையார் இன்னும் பல எடுபிடிகள் மூலம் தமிழகத்து சாராய சந்தையின் லாபத்திலிருந்து கணிசமான பங்கை லஞ்சமாக பெற்று வந்தார். சென்னையை அடுத்த வளசரவாக்கத்தில், சாராய உடையார், சுப்பிணிபதி ராவ், எத்திராஜ் ஆகிய பினாமிகள் மூலம் 'மோகன் பிரிவரீஸ் அண்டு டிஸ்ட்டிலரீஸ்' என்ற வெளிநாட்டு மதுபான உற்பத்தியின் புரவலராக இருந்து வந்தார் இவ்வாலைக்கு ஆயத்தீர்வையிலிருந்து விலக்களிக்கும் பொருட்டு தமிழகத்தில் இயங்கிவந்த பிற மூன்று சாராய ஆலைகளுக்கும் 29.5.82 முதல் ஆயத்தீர்வையிலிருந்து முழுவிலக்களித்தார். இந்த ஒரு உத்திரவின் மூலம் கடந்த ஏழு ஆண்டுகளாக அரசுக்கு ஏற்பட்ட நட்டம் 140 கோடி ரூபாய். சலுகை பெற்ற சாராய அதிபர்களிடமிருந்து இதன் மூலம் பெருந்தொகையை லஞ்சமாக பெற்றிருக்கிறார்.

. அரசு வாணிபக் கழகம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த சாராய சந்தைக்குதேவையான சாராயத்தை வெளி மாநிலங்களிலிருந்து வாங்கக் கூடாது என்று தடைவிதித்தது; வெளிமாநிலங்களின் விலையைவிட ஒரு கேஸுக்கு (750 மி.லி. கொண்ட 12 பாட்டில்கள்) 100 ரூபாய் அதிகமாக வைத்து அதன் தலையில் கட்ட சாராய அதிபர்களுக்கு உரிமம் கொடுத்தது; அதே நேரத்தில், வெளிமாநிலங்கள் உச்சபட்சமாக ஒரு புருப் லிட்டர் மதுவுக்கு ரூபாய் 82 ஆயத்தீர்வையாக வசூலித்த போது, எம்.ஜி.ஆர். அரசோ அதே அளவு சாராய உற்பத்திக்கு வெறும் 25 ரூபாய்தான் ஆயத்தீர்வையாக வசூலித்தது; ஆண்டொன்றுக்கு பலநூறு கோடி ரூபாய் லாபம் அடைந்த சாராய அதிபர்கள் வெறும் சில லட்சங்களை மட்டுமே லாபமாக கணக்கு காட்டியதை கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக் கொண்டது; இவ்வளவுக்கும் மேலாக இதன் சந்தையை உத்திரவாதப் படுத்தவும் விரிவு படுத்தவும் தெருவுக்கு தெரு இருந்த கள் - சாராயக் கடைகளை இழுத்து மூடியது எம்.ஜி.ஆர். அரசு. (கள்ளச்சாராயம் ஆறாக பெருக்கெடுத்து ஓடியதும் அதன் மூலம் கமிஷன் அடித்ததும், மறுபுறம் மக்களிடம் கள் - சாராயக் கடைகளை இழுத்து மூடிவிட்டதாக ஜம்பமடித்ததும் தனிக்கதை) - இப்படி எண்ணிலடங்கா வழிகள் மூலம் சாராய அதிபர்களுக்கு உதவி புரிந்ததால் ராமாவரம் தோட்டத்துக்கு ஆண்டொன்றுக்கு சென்ற கமிஷன் மட்டும் ரூபாய் 150 கோடி இருக்கும் என் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் கள்ளச்சாராய மாமூலும் அடங்கும். இது மிகை மதிப்பீடு அல்ல!

எம்.ஜி.ஆரின் சாவுக்கு பிறகு மோகன் பிரேவரீஸ் சாராய ஆலையில் லாப பிரிவினையில் அதன் பங்குதாரர்களுக்குள் மோதல் வெடித்தது. அதிலிருந்து வெளியேறிய சுப்பிணிபதிராவ் பல ரகசியங்களை போட்டுடைத்தார். அவ்வாலையிலிருந்து ஆண்டொன்றுக்கு கிடைத்த 50 கோடி ரூபாய் லாபத்தில் 50 சதவிகித பங்கு எம்.ஜி ஆருக்கும் 40 சதவிகிதத்தை சாராய உடையாரும் எத்திராஜும் பங்கு போட்டுக்கொண்டு 10 சதவிகிதத்தை மட்டுமே தமக்களித்ததாக கூறினார். இவை தவிர கள்ளத்தனமான உற்பத்திக்கு கணக்கேயில்லை என்றும் அதில் தனக்கு சம்மந்தமில்லை என்றும் 'கண்ணீர்' வடித்தார். தேர்தலுக்கு முன் இவ்விவரங்களை ஆதாரத்துடன் கவர்னரிடம் சமர்பித்த சுப்பிணிபதிராவ், சாராய உடையாரிடமிருந்து இதனால் தமக்கு ஆபத்து வரும் என்று போலீசு பாதுகாப்பையும் கோரி பெற்றார். தேர்தலில் வாகைசூடுவது பற்றி கனவுக் கண்டிருந்த காங்கிரசு ஆட்சி, தன்னுடைய வெற்றிக்கு பிறகு சாராய உடையாரை மிரட்டி பணிய வைக்க கிடைத்த ரகசியங்களை அமுக்கி வைத்தது. காங்கிரசின் இடத்தில் கருணாநிதி இருந்து கொண்டு இப்போது அந்த வேலையை செய்கிறார்.

* * *

எம்.ஜி.ஆர் ஆட்சியில் ஒரு புரூப் லிட்டர் மதுவுக்கு ரூபாய் 25 ஆக இருந்த ஆயத்தீர்வையை ரூபாய் 55 ஆக உயர்த்த அரசின் வருமானத்தை ஆண்டொன்றுக்கு 100 கோடி ரூபாய் உயர்த்தியிருப்பது சாராய மன்னர்களிடமிருந்த விலை நிர்ணயிப்பு உரிமத்தை அரசுக்கு மாற்றியிருப்பது என்ற இரு காகித அம்புகளைதான் கருணாநிதி சாராய மன்னர்கள் மீது இப்போது புதிதாக விட்டெறிந்திருக்கிறார். ஆண்டொன்றுக்கு 500 கோடி ரூபாய் லாபம் (சீமை சாராய மன்னர்கள் கருணாநிதியின் ஆரம்ப சூரத்தனங்களை கண்டு அசந்துவிடவில்லை. மாறாக, கவனத்தைக் கவர புது வாடிக்கையாளன் கையாளும் அற்ப சேட்டைகளாக - அன்பு தொல்லைகளாகவே - கருணாநிதியின் நடவடிக்கைகளை கருதுகின்றனர். கருணாநிதி

படிப்பகம்

www.padippakam.com

யின் நடவடிக்கைகளைப்பற்றி கருத்து சொன்ன சாராய உடையார். ''... முந்தைய சீப் மினிஸ்டர் (எம்.ஜி.ஆர்) எங்களை பயன்படுத்தின மாதிரி இவருக்கும் (கருணாநிதி) இருக்கிறதோ என்ற எண்ணம் எங்களுக்கு வர்றது...'' என்றார். இது உண்மை தான் என்பதற்கு கருணாநிதியின் ஆரம்ப சூரத்தனங்களிலேயே ஆதாரம் இருக்கிறது.


242 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு புருப் லிட்டர் மதுவின் மீது வெளிமாநிலங்கள் 82 ரூபாய் ஆயத்தீர்வை விதிக்கும்போது, அதே அளவு மதுவை ரூபாய் 323.11க்கு விற்கும் தமிழ்நாட்டு சாராய அதிபர்களுக்கு கருணாநிதி விதத்திருக்கும் புது ஆயத் தீர்வை ரூபாய் 55 மட்டுமே! வெளிமாநிலங்களின் சதவிகிதக் கணக்குப்படி இது ரூபாய் 108ஆக இருக்க வேண்டும். இந்த லட்சணத்தில் சாராய சாம்ராஜ்ஜியத்தை தரைமட்டமாக்கிவிட்டதாக சவடால் வேறு!

அதிமுக தன்னுடைய முந்தைய ஆட்சியின்போது தனியார் பேருந்துகளை தேசவுடமையாக்க போவதாக அறிவித்ததும் பஸ் அதிபர்கள் ஒன்று திரண்டு எம்.ஜி.ஆர் காலடியில் 50 கோடி ரூபாயை வைத்ததும், பிறகு உத்திரவை பின்னுக்கு இழுத்துக் கொண்டதும் ஊரறிந்த இரகசியம். அப்போதைய 'தொழில்' திறமையில் எம்.ஜி.ஆர். இரு மாங்காய் அடித்தார்.

கருணாநிதி 13 ஆண்டுகால பதவி பட்டினியால் இப்போது கொத்துகொத்தாய் அடிக்க குறிவைக்கிறார். அடித்தக் கொள்ளையை பங்கு போட்டுக் கொண்டிருக்கும் அதிமுக கோஷ்டிகளை மிரட்டிப் பணிய வைத்து அவர்களது முதுகில் தொடர்ந்து சவாரி செய்வது (தண்டிப்பது அல்ல), முடிந்தால் அவர்கள் அடித்த கொள்ளையிலும் பங்கு கேட்பது; இதே யுக்தியை சாராய மன்னர்களுக்கும் பயன்படுத்தி தன்னுடைய அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளவைப்பது; அடங்கியவர்களிடம் கப்பம் வசூலிப்பது அடங்காதவர்களிடம் புதிய மன்னர்களை -தனது பினாமிகளை - மோதவிடுவது. இதற்கு தயாராக கருணாநிதியின் வீட்டு வாசலில் ஒரு பெருங்கூட்டமே பண மூட்டைகளை வைத்துக் கொண்டு காத்திருப்பதாக செய்திகள் வருகின்றன.

கர்நாடக மாநிலத்தில் முன்னாள் முதல்வர் ஹெக்டேவின் ஊழல் அனைத்திற்கும் உறுதுணையாய் இருந்த 'கோடே' குடும்பம், சாராய உடையாரால் பின்னுக்கு தள்ளப்பட்ட நல்லையா, சண்முகம் மற்றும் பாரி கம்பெனியின் பங்குதாரர் ஜெயராம ஐயர் போன்ற ஒரு பெருங்கூட்டம் என்ன விலை கொடுத்தேனும் தமிழகத்தின் சாராய சந்தையை கைப்பற்றுவதற்கு தயாராய் இருக்கிறது.

கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடுவதற்கு கருணாநிதியும் ஏமாளி அல்ல. அவரது உடன் பிறப்புக்களும் சோணகிரிகள் அல்ல. கருணாநிதியின் பராசக்தி வசனம் பேசி கழக கண்மணிகள் ஆட்சிக் கட்டிலை பிடிக்கவில்லை. தேர்தல் சூதாட்டத்தில் 100 கோடி ரூபாயை விட்டெறிந்துதான் கழக கண்மணிகள் தானைத் தலைவருக்கு முதல்வர் பதவியை பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். போட்ட முதலை எடுத்தாக வேண்டும்.


R. K. Rao
Founder Chairman
Mohan Breweries & Distilleries Ltd.,
Appu Hotels Ltd.,
Indcraft Ltd.,

"CRAFTHOME"
1, Arcot Road,
Porur, Madras

Date: April 6, 1988

The Hon'ble Minister for Finance
Government of India
NEW DELHI

Respected Sir,

PRAYER

I will be very grateful to the Hon'ble Finance Minister for helping me in getting my due claim of my share of profit accrued for the ... years of the company which was founded by ... and started on my excellent potential landed property with buildings.

Thanking you,

Yours faithfully,
(R. K. RAO)
6th April 1988

Encl : as above

கப்பணி பத்ராவ் புகார் கடிதம்: பிரிவரீஸ் ஆலையில் லாப பங்கு பெற்றுத்தர மத்திய மந்திரிக்கு முறையீடு

அடுத்த சூதாட்டத்திற்கு சேர்த்தாக வேண்டும். காலமோ குறுகிக் கொண்டு போகிறது. அடுத்த தேர்தலில் ஜெயிப்பது என்பதும் நிச்சயமில்லாததாகி விட்டது. எந்த நேரத்தில் எது நடக்கும் என்று சொல்ல முடியாது. ஆட்சிக் கட்டில் ஏறிய 60 நாட்களுக்குள்ளேயே மருங்காபுரியும், மதுரை கிழக்கும் இடுப்பெலும்பை முறித்துவிட்டது. இப்போதே சுதாரித்துக் கொண்டு சுருட்டினால்தான் தப்பிக்க முடியும்.

ஓட்டுப் பொறுக்கிகளுக்கு பித்தலாட்டம் ஒன்றும் புதிதல்ல. கருணாநிதியும் இதற்கு விதிவிலக்கு அல்ல. ஆட்சியிலிருக்கும் வரை என்ன அயோக்கியதனங்கள் செய்தாலும், அதிகார முறைகேடுகளில் அப்பட்டமாக ஈடுபட்டாலும் ஆட்சி அதிகாரத்தை வைத்துக் கொண்டு அதை மறைத்துவிட முடியும். எதிர்ப்பவரின் வாயை அடைத்துவிட முடியும் என்ற தைரியம் இருக்கிறது. இந்த நாடாளுமன்ற ஜனநாயக முறையில் அதற்கான அடித்தளம் இருக்கிறது. ஆயிரம் ஊழலில் ஈடுபட்டாலும் சில கவர்ச்சி திட்டங்களின் ஆரவாரத்தின் மூலம் அனைத்தையும் அமுக்கிவிட முடியும். எம்.ஜி.ஆர். விரிவாக அமுலாக்கிய இந்த அண்ணாயிச கொள்கையைத்தான் கருணாநிதி இப்போது நம்பிக் கொண்டிருக்கிறார். அதையே தனது பாணியில் வேறுவிதமாக அமுல்படுத்திக் கொண்டிருக்கிறார். வெறும் சட்டியை வைத்துக்கொண்டு விதவிதமான அகப்பைகளை காட்டி மக்களை கவர்ந்திழுக்கும் வேலையில் முழுமூச்சாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். வேலைவாய்ப்பில் பெண்களுக்கு 30 சதம், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவிகித இட ஒதுக்கீடு என்று அடுத்தடுத்து ஆரவாரமான அறிவிப்புகளை வெளியிட்டு தனது சாராய சாம்ராஜ்ஜிய பேரத்தை மறைத்துக் கொண்டிருக்கிறார்.

* * *

தமிழகத்தின் தெருக்களிலே சீமைச்சாராயம் சட்டப்பூர்வமான முறைகளிலே ஆறாக பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கும் போதே இதற்கு இணையாக, சட்டவிரோதமான முறையில் கள்ளச் சாராயம் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பொங்கிவழிகிறது கள்ளச்சாராயத்தொழில் தமிழகம் தழுவிய ரீதியில் ஒருமுகப்படுத்தப்பட்டு, தனி ஒரு சாம்ராஜ்ஜியமாக - போலீசுக்காரன்கள், ஆளுங்கட்சியினர் கூட்டுச் சேர்ந்து பணத்தை மூட்டை மூட்டையாக அள்ளும் அதிகார முறைகேடுகளின் குவிமையமாக, போட்டி அரசாங்கத்தின் தலைமைபீடமாக பகிரங்கமாக இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் கள்ளச் சாராயத்தில் மட்டும் ஆண்டொன்றுக்கு புழங்கும் பணத்தின் மதிப்பு 750 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் கள்ளச் சாராய மன்னர்களுக்கு ஆண்டொன்றுக்கு கிடைக்கும் லாபம் மட்டும் 500 கோடி ரூபாய். இதில் போலீசுக்காரன்களுக்கு செல்லும் மாமூல் மட்டும் 100 கோடி ரூபாய். சமீபத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு தேர்ந்தெடுத்து சில இடங்களில் நடத்திய ஆய்வில் கிடைத்த உத்தேசமான புள்ளி விபரம் இது.

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காகவே அமைக்கப்பட்ட காவல் தடுப்பு பிரிவு போலீசு வாராந்திர மாமூல் 70,000 ரூபாய்.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு மாவட்டத்திற்கு ஏறக்குறைய இவ்வாறான உட்பிரிவு கிளைகள் 10 இருக்கின்றன. அவற்றுக்கு கிடைக்கும் ஓராண்டு மொத்த மாமூல் ரூபாய் 3.36 கோடி. தமிழ்நாட்டிலுள்ள 19 மாவட்டங்களின் ஓராண்டு மொத்த மாமூல் சுமார் 100 கோடி.

போலீசு அதிகாரிகள் சாதாரண போலீசுக்காரன்கள் என்று ஒவ்வொரு உட்பிரிவு கிளைகளிலும் ஏறக்குறைய 27 போலீசுகாரன்கள் இருக்கின்றனர். இவர்கள், தங்களுக்கு கிடைக்கும் வாராந்திர மாமூல் ரூபாய் 70,000ஐ 44 பங்குகளாக பிரித்து பதவிகளுக்கு தகுந்த மாதிரி கூறுபோடுகின்றனர். அப்பிரிவுக்கு தலைமை பொறுப்பு வகிக்கும் இன்ஸ்பெக்டருக்கு 8 பங்கு, ரூபாய் 12,720. அதற்கடுத்து இருக்கும் 2 சப் இன்ஸ்பெக்டர்களுக்கு தலா 4 பங்கு. 2 தலைமை போலீசுகாரன்களுக்கு தலா 2 பங்கு. முதல்கிரேடுபோலீசாக இருக்கும் 4 பேர்களுக்கு தலா 1.5 பங்கு. போலீசுக்கு தலா ஒரு பங்கு, ரூபாய் 1,590. மீதி 10 பங்குக்குண்டான பணம் பொதுநிதி(!) என்ற கணக்கில் கொண்டு போக்கப்படுகிறது. அப்பணத்திலிருந்து அம்மாவட்ட எஸ்.பிக்கும் கூடுதல் எஸ்.பிகளுக்கும், துணை எஸ்.பிகளுக்கும் என மாதம் தலா 1000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இந்த அதிகாரிகள் ஏறக்குறைய நான்கு மாவட்டங்களுக்கு பொறுப்பு வகிப்பதால் சுமார் 50 மது ஒழிப்பு பிரிவுகளிலிருந்து இவர்களுக்கு மாதம் 50 ஆயிரம் ரூபாய் மாமூலாக போய் சேருகிறது. பொதுநல நிதியிலிருந்து எதிர்பாராத செலவுகள் என்ற இன்னொரு நிதி ஒதுக்கப்படுகிறது. அதிகாரிகளை குளிப்பாட்டவும், பிரிவு உபச்சாரம் நடத்தவும் அப்பணம் பயன்படுத்தப்படுகிறது. பொது நிதி, போலீசுக்காரன்களுடன் நின்று விடுவதில்லை. சாராய வழக்குகளை விசாரிக்கும் அந்தந்த மாவட்ட நீதிபதிகளுக்கான லஞ்சமாக ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படுகிறது. மது ஒழிப்பின் ஒவ்வொரு உட்பிரிவும் மாதம் ஒன்றுக்கு சுமார் 300 வழக்குகளை பதிவு செய்ய தங்களுடைய வேலையை செவ்வனே செய்துக் கொண்டிருப்பதாக நிரூபிக்கின்றன. இதற்காக அப்பிரிவு போலீசுக்காரன்கள் அப்பகுதியிலுள்ள தங்களுடைய அடியாட்களையும் அப்பாவி மக்களையும் கூலிக்கு பிடித்து வழக்கு பதிவு செய்கின்றனர். ஏறக்குறைய அதில் சரிபாதி பேரை - தங்களுடைய அடியாட்களை - மறுநாளே போலீசுக்காரன்கள் ஜாமீனில் எடுத்து விடுகின்றனர். ஜாமீனில் எடுக்கும் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 20 வீதம் நீதிபதியிடம் கப்பம் கட்டுகின்றனர். இவைதவிர போலீசுக்காரன்களுக்கு மாமூல் கொடுக்கும் ஒவ்வொருவரும் மாதம் ஒரு வழக்கு கொடுக்க வேண்டும் அல்லது அதற்கென தனியாக ரூபாய் 250 கொடுக்க வேண்டும்.

பல அடுக்குகளிலும் தணிக்கையாளர்களைக் கொண்டு நடத்தப்படும் கணக்கு வழக்குகள் கூட, போலீசு கும்பல் மாமூலுக்காக கடைபிடிக்கும் துல்லியமான கறாரான கணக்கு வழக்கிடம் தோற்றுபோகும். அவ்வளவு 'தொழில்' சுத்தம்! கள்ளச்சாரயம் காய்ச்சுபவர்கள், விற்பவர்கள் என இருபிரிவிடமும் தவறாமல் மாமூல் வாங்குவதற்காக



சாராய உடையார்.

ஒவ்வொரு உட்பிரிவு கிளையிலும் இரண்டு போலீசுகாரன்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். ஒவ்வொரு வாரமும் மாமூலை பிரித்துக் கொடுத்தவுடன் கணக்கு வழக்குகளை அழித்து விடுகின்றனர். நீண்ட விடுப்பில் சென்றிருக்கும் சம்மந்தப்பட்ட போலீசுக்காரன்களுக்கும் சேர்த்து பங்கு ஒழுங்காக பிரிக்கப்படுகிறது.

எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில் பெரும்பாலான இடங்களில், உள்ளூர் அதிமுக தலைவர்கள் போலீசுகாரன்களுக்காக மாமூல் வசூலிக்கும் வேலையில் நேரிடையாக ஈடுபட்டனர். அதில் எழும் பஞ்சாயத்துக்களுக்கு போலீசுக்கு ஆதரவாக நிற்பது, புதிதாக சாராயம் காய்ச்சுபவர்களை, விற்பவர்களை, கள்ளச்சாராயத்தைப் பற்றி புகார் அனுப்பும் பொதுமக்களை, போலீசுக்கு அடையாளம் காட்டுவது, போலீசு சார்பில் இவர்களே சம்மந்தப்பட்டவர்களை மிரட்டுவது முதலான வேலைகளை கூசாமல் செய்து வந்தனர். இம்மாதிரியான தங்களுடைய சேவைக்களுக்காக போலீசிடமிருந்து ஒரு கமிசன் தொகையை பெற்றுவந்தனர்.

அதிமுகவின் தலைமையில் இயங்கிவரும் இந்த கள்ளச்சாராய சாம்ராஜ்ஜியத்தை திமுக கைப்பற்றுவதற்கு தற்போது பெரும் யுத்தமே நடக்கிறது. மேல் மட்டத்தில் இது கருணாநிதியின் ஆரம்ப சூரத்தனங்களாகவும் கீழ்மட்டத்தில் இது தெரு சண்டையாகவும் வெடிக்கிறது. மறுபுறம் திமுக கட்சிக்குள்ளேயே எந்த கோஷ்டிக்கு அதிக பங்குகள் என்பதற்காக நடக்கும் குத்து வெட்டுகளும் தமிழகம் பூராவும் எதிரொலிக்கிறது.

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை, வேலூர், ஆரணி போன்ற நகரங்களில் இது தீராத பகையாக பூதாகரமாக வளர்ந்து வருகிறது. இந்நகரங்களில் இருக்கும் தலா 60க்கும் மேற்பட்ட கள்ளச்சாராயக் கடைகளை உள்ளூர் திமுக கட்சி மூர்க்கமான போர் நடத்தி கையகப்படுத்தி வருகிறது. அதிமுக கோஷ்டிகளோ 40:20 என்ற விகிதத்தில் பிரித்துக் கொள்ளும் சமரச ஒப்பந்தத்தை அமுல்படுத்தக்கோரி விடாப்பிடியான யுத்தம் நடத்துகிறது. மறுபுறம் கையகப்படுத்திய பகுதிகளை சொந்தம் கொண்டாடுவதில் திமுக கட்சிக்குள்ளேயே குத்துவெட்டு நடந்து விவகாரம் வழக்குமன்றம் வரை சென்றிருக்கிறது. கொலைக்குற்றம் சுமத்தப்பட்ட திமுகவின் பலவீனமான கோஷ்டி சிறையில் வாடிக் கொண்டிருக்கிறது. உயர்மட்ட திமுகவின் தலைமைகள் தத்தமது கோஷ்டியின் பின்னால் நின்று உசுப்பி விடுகின்றன.

வேலூர் ராணிப்பேட்டை சுற்றுவட்டாரத்திற்கு சப்ளை ஆகும் திமுக பிரமுகரின் கள்ளச்சாராயம், மார்க்கெட்டில் திடீரென படுத்துவிட்டது. போட்டி திமுக கோஷ்டியால் ஆந்திராவிலிருந்து கொண்டுவரப்படும் வீரிய மிக்க கள்ளச் சாரயத்துக்குதான் இப்போது அங்கு கிராக்கி! இந்த இரு கோஷ்டிகளுக்குமான தகராறால் அப்பகுதியின் ஆந்திர எல்லை சட்ட விரோதமாக மூடப்படுவதும் திறக்கப்படுவதுமாக இருக்கிறது.

இப்படி ஏராளமான சம்பவங்கள். 100 கோடி ரூபாயை இறைத்து ஆட்சிக்கட்டிலை பிடித்த தானைத் தலைவரும் அவரது கும்பலும் அதை வட்டியும் முதலுமாக எடுப்பதற்கு எப்படி சட்டப்பூர்வ சாராய மன்னர்களிடம் பேரம் பேசுகிறார்களோ அதே கோணத்தில்தான் கீழ்மட்ட கழக கண்மணிகளும் உடன்பிறப்புகளும் சிந்திக்கிறார்கள் செயல்படுகிறார்கள். தேர்தல் விளம்பரத்திற்கு அடிதடியில் இறங்கி இடம் பிடித்தவர்கள், நாள் முழுக்க தலைவர்களின் பின்னால் சுற்றி திரிந்து அவர்களின் 'புகழ்' பரப்பியவர்கள். உள்ளூர் கூட்டங்களுக்கு கைப்பணத்தை செலவழித்தவர்கள், துணிந்து நின்று கள்ள ஓட்டு போட்டவர்கள் - இவர்கள் எல்லோரும் கொள்கை குன்றுகளோ தமிழின சிங்கங்களோ அல்ல. தொழில் என்ற ரீதியில் அரசியலை தேர்ந்தெடுத்துக் கொண்டவர்கள்; தங்கள் தலைவர்களைப் போல. எனவே அவர்கள் மாதிரியே இவர்களும் கள்ளச்சாராய சாம்ராஜ்ஜியத்தை கைப்பற்றுவதில் மூர்கமான போர் நடத்துகிறார்கள். இவர்களது பேரம் ஐந்து நட்சத்திர ஓட்டலின் திரைமறைவில் நடப்பதில்லை. கண்முன்னே நடுத்தெருவில் நடக்கிறது, அம்பலத்திற்கு வந்துவிடுகிறது.

இந்த அப்பட்டமான அதிகார முறைகேடுகளை உழைக்கும் மக்கள் வெறுமனே விலகிநின்று வேடிக்கை பார்ப்பதால் பலனேதும் இல்லை. விலகிநின்று வேடிக்கைப் பார்ப்பதையே இக்கொள்ளை கும்பல் தங்களுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரமாக எடுத்துக்கொண்டு ஊழலை இன்னும் பல அரங்கங்களுக்கு விரிவுபடுத்தும். மாறாக, இதற்கெதிராக இன்றே உழைக்கும் மக்கள் அணிதிரண்டு போராட முன்வரவேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com

## இந்திய - சீன எல்லை தகராறு: மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்:

# இந்தியாவில் போர்க்கூச்சல்கள்! இராணுவத்துக்குள் பதவிச் சண்டைகள்!

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே இருதரப்பும் ஏற்றுக்கொண்ட வரையறுக்கப்பட்ட எல்லை இல்லாதபோதும், தகராறுக்குள்ளான பகுதிகளில் இராணுவச்சாவடிகளை நிறுவி, இராணுவ ரோந்துப் பணிகளை இந்தியா மேற்கொண்டது. இதன் காரணமாக லோங்ஜீ மற்றும் கோங்கா கணவாய் மோதல்கள் நடந்தன. அதுவரை பேச்சுவார்த்தைக்குக்கூட இடமில்லை என்று அடாவடித்தனமாக மறுத்துவந்த நேரு எல்லைப் பிரச்சனையின்மீது சீனாவுக்கு எதிராக நேரடியுத்த எச்சரிக்கை -மிரட்டல் விட ஆரம்பித்தார். இந்த அளவுக்கு நேரு துணிந்ததற்கு மற்றொரு முக்கியமான காரணம், அமெரிக்கா -ருஷ்யா ஆகிய இருவல்லரசுகளும் சீனாவுக்கு எதிரான இந்தியப் போரை விரும்பினர். ஆதரித்தனர்.

ஸ்டாலின் மறைவுக்குப்பிறகு ருஷ்யாவில் கட்சி மற்றும் ஆட்சியைக் கைப்பற்றியது குருச்சேவ் கும்பல். அதன் புரட்டல்வாதத்தை எதிர்த்து சர்வதேசரீதியான சித்தாந்தப் போராட்டைத்தைத் துவக்கியிருந்தது சீனா. எனவே இந்திய - சீனத்தகராறில் நடுநிலை வகிப்பதைப்போல பேசி, மறைமுகமாக இந்திய ஆதரவு நிலைப்பாடு எடுத்தது ருஷ்யா. இருநாட்டுப் பிரதமர்களும் சந்தித்து எல்லைப் பிரச்சனையைப் பேசித்தீர்ப்பது என்கிற சீன முன்மொழிவை ஏற்கனவே இந்தியா நிராகரித்திருந்தது. அதைக் கண்டுகொள்ளாமல் பொதுவில் சமாதானம் பற்றிப் பிதற்றினார், அப்போது இந்தியா வந்திருந்த குருச்சேவ். முன்பு நேருவின் ''நடுநிலைக் கொள்கை'' மீது சந்தேகம் கொண்டிருந்த அமெரிக்கா, இந்திய - சீனத்தகராறு வலுப்பதைக் கண்டு இந்தியாவுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டது. இந்தியா வந்த அமெரிக்க அதிபர் ஐசனோவர் 2500 கோடி ரூபாய் உதவித்தொகைக்கு உத்திரவு போட்டார். சீனாவுக்கு எதிராகக் கம்யூனிச -எதிர்ப்பு நாடாக இந்தியாவைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும் என்று அமெரிக்க அரசுத்தலைவர்கள் பகிரங்கமாகவே பேசினர்.

எனவே, சீனாவுடன் சமரசத்துக்கு இடமில்லை, யுத்தம் தவிர்க்கமுடியாதது என்று நேரு அடிக்கடி பேசினார். ஆனால் மீண்டும் மீண்டும் சீனா வலியுறுத்தியதன் விளைவாக பேச்சுவார்த்தைக்கு இணங்கி சீனப் பிரதமருக்கு 1960 பிப்ரவரியில் அழைப்பு விடுத்தார். நேரு செய்தி அறிந்ததும் ''இது தேசிய அவமானம்'' என்று சுதந்திராக் கட்சி மசானியும், ''நேரு துரோகம் செய்து விட்டார். மரியாதைக்குரிய நபர்களிடம் தேசம் இல்லை'' என்று பிரஜாசோசலிஸ்டு கட்சி கிருபளானியும் நாடாளுமன்றத்தில் தாக்கினார். ''நேரு பல்டி அடித்துவிட்டார்''; ''கீழிறங்கிப் போய்விட்டார்'' என்று பல பத்திரிக்கைகளும் சாடின. உடனே நேரு; ''நமது கொள்கையில் மாறுதல் கிடையாது; எல்லைத் தகராறு குறித்துப் பேச்சுவார்த்தையும் இல்லை; நமது நிலைப்பாட்டை விளக்குவதற்கான சந்திப்புதான்'' என்று மழுப்பினார். 1960 ஏப்ரல் 19ந் தேதி சீனப்பிரதமர் இந்தியா வருவதாக உறுதியானது.

உடனே அவர் வருகைக்கு எதிராக நாடுமுழுவதும் பெரிய அளவு தேசியவெறி கிளப்பினர், ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும்.சௌ வருகையின் போது ''சரணடைவு எதிர்ப்பு வாரம்'' என்று ஆர்ப்பாட்டம் நடத்துவதாக எதிர்க்கட்சியினர் தீர்மானித்தனர். ஜனசங்கம் ஆயிரக்கணக்கானோரைத் திரட்டி நேருவின் வீட்டு முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். ''ஒரு அங்குல நிலம் கூட நாம் சீனாவுக்கு விட்டுக்கொடுக்கமாட்டோம்'' என்று அவர்களிடம் நேரு வாக்குறுதி அளித்தார். ''பேச்சுவார்த்தை தோல்வியுற வேண்டும். இல்லையானால் ஆசியாவில் சீனாவின் மதிப்பு உயர்ந்துவிடும்'' என்று மேலை நாட்டுப் பத்திரிக்கைகள் தலையங்கங்கள் எழுதின. 'இந்திய எல்லையில் மாற்றம் செய்வதானால் நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பகுதிப் பெரும்பான்மையுடன், பாதியளவு மாநிலங்களும் அதை ஆதரித்து அரசியல் சட்டமாக்க வேண்டும்' என்று உச்சநீதிமன்றத் தீர்ப்பு வேறுவந்தது. தனது கட்சிக்குள்ளேயே எதிர்ப்புவந்து, தனது சமரச ஒப்பந்தந்துக்கு ஆதரவின்றித் தோற்றுப்போகலாம் என்றும் நேரு பயந்தார்.

எனவே சீனப் பிரதமர் தலைமையிலான குழுவுடன் நடத்திய பேச்சுவார்த்தையில், சீனர்கள் விட்டுக்கொடுத்து சமரசம் செய்து கொள்வதற்கு முன்வந்த போதும் நேரு அடாவடியாக மறுத்துவிட்டார். எனவே பேச்சுவார்த்தை தோல்வியுற்றது. ''அவரவர் சுவாதீனத்தில் உள்ள பகுதிகளை அவரவர் வைத்துக் கொள்வது; தகராறுக்குள்ளாகி யாருடைய சுவாதீனத்திலும் இல்லாத பகுதிகளில் எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள்'' என்பதுதான் சீன நிலைப்பாடு. காந்தியின் செயலாளராக இருந்து, இந்திய - சீன நட்புறவுக்கழகத்தை நிறுவிய பண்டிட் சுந்தர்லாலைச் சந்தித்தப் போது சீனக்குழு இதைப் பகிரங்கமாகவே தெரிவித்தது. ஆனால் இந்திய அரசு ஒருதலைப்பட்சமாக, அறிவித்த எல்லைக்குட்பட்ட பகுதி முழுவதுமே இந்தியாவினுடையது; அதுபற்றிப் பேச்சுவார்த்தையே கிடையாது என்று மறுத்துவிட்டது. எனவே சமரசம் பேச்சுவார்த்தைக்கான கதவு ''சமாதான சிற்பி'' நேருவினால் அடைக்கப்பட்டது.

அதன் பிறகு ஆசியஜோதி நேரு ஆக்கிரமிப்பு போருக்கான தயாரிப்புகளில் இறங்கினார். எதிர்க்கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு அதற்குத் தூபம் போட்டன. ''முன்னேறும் கொள்கை'' எனப்படும் ஆக்கிரமிப்புக் கொள்கையை நேரு அரசு பின்பற்றத் தொடங்கியது. அதன்படி சீனர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் இந்திய இராணுவத்தின் ரோந்துக் குழுக்களை அனுப்பி சாத்தியமான இடங்களில் சாவடிகளை நிறுவுவது; சீனா முன்னேறாமல் தடுப்பதோடு தமது படையும் அங்கிருப்பதை வைத்து மேலும் வலுவாக உரிமை பாராட்டுவது. குறுக்கும் நெடுக்கும் பல பகுதிகளில் சாவடிகளை அமைத்தபிறகு சீன இராணுவத்தை வெளியே நெட்டித் தள்ளிவிடுவது என்று திட்டமிட்டனர்.

போலிக் கம்யூனிஸ்டுகள் வாய் மூடிக் கொண்டிருந்தனர். மற்ற அனைத்துக் கட்சிகளும் போட்டி போட்டுக்கொண்டு போர்க் கூச்சல் போட்டனர். ''உங்களுடைய பிராந்தியத்தை நீங்கள் தற்காத்துக் கொள்வது எப்படிப் போராகும். உங்களுடைய பிராந்தியத்தில் இருந்து கொள்ளைக்காரர்களை விரட்டுவதற்கு போர் என்று கூறுவதை நான் கேள்விப்பட்டதேயில்லை. அது உங்கள் சொந்த பிராந்தியத்தில் மேற்கொள்ளும் போலீசு நடவடிக்கைதான்'', என்று புது அகராதி எழுதினார் மசானி. சீனாவுக்கு எதிரான போர் என்பது ஐதராபாத் சமஸ்தானத்தை இணைக்கவும், கோவாவை மீட்கவும் மேற்கொண்ட போலீசு நடவடிக்கை போன்றது என்றே அரசு குறிப்பிட்டது. ''ஐ.நா.சபையில் உறுப்பினரான நமக்கு போர் மூலமான தீர்வில் நம்

நேரு கும்பலின் ராணுவ மந்திரி கிருஷ்ணமேனன்,





படிப்பகம்

www.padippakam.com

பிக்கை கிடையாது. எனவே இது ஆக்கிர மிப்பை அகற்றுவதற்கான போலீசு நடவடிக்கை; அதன் பிறகு தான் பேச்சுவார்த்தைக் கான அடிப்படை ஏற்படும்'' என்றார் ஒரு சுயேச்சை உறுப்பினர்.

''சிறிய உள்ளூர் யுத்தங்கள் தவிர்க்க முடியாது; ஆனால் அது உலகப்போராகவோ, மனித இனத்தை அழிக்கக் கூடியதாகவோ இராது. சீனா ஆக்கிரமிப்புக்கு எதிரான போர்கண்டு நாம் அஞ்சத்தேவையில்லை; அதன் பிறகுதான் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்'' என்றார் காந்தீயவாதி கிருபளானி. ''போர் சிறந்த அம்சங்களை வெளிப்படுத்தும்; தேசிய ஐக்கியத்தைக் கொண்டுவரும்; கூடுதலான தியாகத்துக்குத் தேசம் முன்வரும்'' என்றார் காந்தீய சோசலிஸ்டு அசோக்மேத்தா. ''இந்தியா போரை சந்திக்குமானால் அது படைகளின் தேசமாகி விடும். ஒவ்வொரு தனி நடத்தையும், ஒவ்வொரு அம்சமும் திட்டமிடுதல் உட்பட அனைத்தும் போருக்காகவே தீர்மானிக்கப் படும். ஏனெனில் போர் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான போராட்டமாகி விடும்'' என்று முழங்கினார் நேரு.

போர் அபாயத்துக்கு எதிராக இந்தியாவை மட்டுமல்லாமல் உலகையே எச்சரித்தார் நேரு. ''இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான யுத்தம் உலகப்பெரும் பேரழிவுகளில் ஒன்றாகிவிடும்; ஏனெனில் அது உலகப்போராக மாறும். முடிவே இல்லாத காலவரையற்ற யுத்தமாக இருக்கும். கெடுவைத்து அதைக் கட்டுப்படுத்த முடியாது; ஏனெனில் நம்மைத் தோற்கடிப்பது சீனாவுக்கு சாத்தியமில்லை; நாமும் திபேத்தைத் தாண்டி பீகிங் வரை படையெடுத்துப் போவது சாத்தியமில்லை'' என்று சவடாலடித்தார். இப்படி வாய்ச்சவடால் அடிப்பது நேரு பரம்பரைக்கு வழக்கமான கோமாளித் தனம்தான் என்பதை பிந்தைய வரலாறு காட்டிவிட்டது.

யுத்தவெறியிலும், வெற்றிக்கனவிலும் மிதந்த நேரு அரசு வடக்கிலும், வடகிழக்கிலும் சீன ''எல்லை'' நெடுக புதிய இராணுவப் பிரிவுகளைக் குவிக்கத் துவங்கியது. ஆனால் இந்திய இராணுவமோ நேரு அரசின் ஆக்கிரமிப்புக் கனவுகளை நனவாக்கும் வகையிலே இல்லை. போதிய பயிற்சியோ, ஆயுதங்களோ கிடையாது; இராணுவத்துக் குள்ளே பதவிச்சண்டை வெடித்து நாறியது. ஆயுதக்கொள்முதல் இராணுவப் பதவிஉயர்வு ஆகியவற்றில் நேருவின் அரசியல் தரகரும், இராணுவ மந்திரியுமான கிருஷ்ணமேனன் தலையிடவே பதவிச்சண்டை வலுத்தது. 1959 செப்டம்பரிலேயே தலைமைத்தளபதி திம்மையா ராஜினாமா செய்தார். நேரு கேட்டுக் கொண்டதன்பேரில் அன்றே ராஜினாமாவை விலக்கிக்கொண்டார். ஆனாலும் விவகாரம் வெளியே வந்து கிருஷ்ணமேனன் மீது எதிர்க்கட்சிகள் தாக்குதல் தொடுத்தன. நேரு அவரை ஆதரித்த தோடு திம்மையாவைப் பகிரங்கமாகக் கண்டித்தார்.

அதற்கு முன்பிருந்தே இராணுவத்துக் குள் கோஷ்டிசண்டை, பதவிவேட்டை தீவிரமாக நடந்து வந்தது. மேஜர் ஜெனரல் பிரிஜ் மோகன் கவுல் என்பவர் நேருவின் காஷ்மீரிப் பார்ப்பனர். நேருவின் பங்காளிமுறை உறவுக்காரர். நேருவின் குடும்பப்பெயரே கவுல்தான். அவருடைய மனைவி கமலா நேரு வேறொரு கவுல் குடும்பத்தைச் சேர்ந்தவர். நேருவின் நெருங்கிய உறவுக்காரர் -நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தவர் என்கிற முறையில் இராணுவத்தில் சலுகையும், தனி அதிகாரம் - மதிப்பும் பெற்றிருந்தார் பி.எம்.கவுல். நேரு -கிருஷ்ணமேனன் - கவுல் அடங்கிய கும்பல்தான் உண்மையில் இராணுவத்தின் மீது ஆதிக்கம் வகித்தது. இந்தக் கும்பல் கவுல் உட்பட தனது விசுவாசிகளுக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்காக பல மூத்த அதிகாரிகளைப் புறக்கணித்துப் பின்னே தள்ளியது. இதனால் கவுல் ஆதரவு, கவுல் எதிர்ப்பு என்று இராணுவத்துக்குள் இரு கோஷ்டிகள் உருவாகின.

> யுத்தவெறியிலும் வெற்றிக் கனவிலும் மிதந்த நேரு அரசு சீன 'எல்லை' நெடுக புதிய இராணுவப் பிரிவுகளைக் குவிக்கத் தொடங்கியது. ஆனால் போதிய பயிற்சியோ, ஆயுதங்களோ இல்லாத இந்திய இராணுவம் நேரு அரசின் ஆக்கிரமிப்புக் கனவுகளை நனவாக்க இயலவில்லை. இதோடு இராணுவத்துக்குள்ளேயே பதவிச்சண்டை புழுத்து நாறியது. நேருவின் உறவினரும் மேஜர்ஜெனரலுமான பி.எம்.கவுல் ஆதரவு, கவுல் எதிர்ப்பு என்று இரு கோஷ்டிகள் உருவாயின. நேருவின் அரசியல் தரகரும், இராணுவ மந்திரியுமான கிருஷ்ணமேனன் தலையிடவே பதவிச் சண்டை மேலும் வலுத்தது.

சாதாரண அதிகாரியாக இருந்த கவுல் நேரு ஆட்சிக்கு வந்த பிறகு 10 ஆண்டுகளில் கிடுகிடு பதவிஉயர்வு பெற்றார். தலைமைத் தளபதியின் எதிர்ப்புக்கிடையே 1959 மேயில் லெஃப்டினன்ட் ஜெனரல் ஆக்கப் பட்டார். விரைவிலேயே குவார்டர் மாஸ்டர் ஜெனரல் பதவி காலியானபோது அந்தப் பதவியைப்பிடிக்கக் கவுல் முயன்றார். பி.எஸ். கியானி மற்றும் பி.பி.குமாரமங்கலம் (அந்நாள் மந்திய மந்திரி சுப்பராயனின் மகனும், பிந்நாள் மந்திரி மோகன் குமாரமங்கலத்தின் அண்ணனுமாவார்) ஆகியோர் மூத்த தளபதிகளாக இருந்தனர். கியானிக்கும் பதவிஉயர்வு தர தளபதி திம்மையா விரும்பினார். இராணுவ நுட்பக் காரணங்களைக் காட்டி கிருஷ்ணமேனன் கியானியை நிராகரித்தார். செல்வாக்குடையவராததால் பி.பி.குமாரமங்களத்துக்காகப் புதிய பதவி உருவாக்கி ஓரங்கட்டிவிட்டு கவுலுக்குப் பதவிஉயர்வு அளித்தார்கள்.

யுத்த வெறியைத் தூண்டிய காந்தியவாதி கிருபளாணி.



இராணுவ மரபுகளை மீறி சிவிலியன் அரசியல் தலைவர்களுடன் இரகசியக் கூட்டுச்சேர்ந்து செயல்பட்டார் கவுல். ஒரு தேர்தல் அரசியல்வாதியைப் போல சில சூரத்தனங்களைச் செய்து காட்டினார். லோங்ஜீ மோதலுக்குப் பிறகு அங்கு நேரில் கண்டு விவரமறிய போய்வந்து நேருவிடம் நேரடி அறிக்கை கொடுத்தார். வாங்குவதற்காக அப்போது பரிசீலனையில் இருந்த ருஷ்ய எலிக்காப்டரில் ஏறி லடாக் பிராந்தியத்தில் சோதனை ஓட்டம் நடத்தினார். உயர்பதவியிலுள்ள முதிய அதிகாரியின் இந்தச் சூரத்தனங்களைச் சொல்லி மகிழ்ந்தது நேரு - கவுல் - மேனன் கும்பல். தளபதி திம்மையா ஓய்வு பெறும் சமயம் வந்தபோது, அவர் சிபாரிசு செய்த தொராட் என்பவரை நிராகரித்துவிட்டு தபார் என்பவரைத் தளபதி ஆக்கியது. அதன் மூலம் கவுல் இராணுவப் பொதுத்தளபதி ஆனார். தபார் விசுவாசத்துடன் தகுதியில்லாத கவுலுக்கு அப்பதவிகிடைக்க வழி செய்தார். கவுலுடைய எதிர்க் கோஷ்டி பழிவாங்கப்பட்டது. திம்மையா ஓய்வு பெறுவதற்குச் சற்று முன்பு, அவர் ஆட்சிக்கவிழ்ப்பு நடத்தப் போவதாக பீதியும், வதந்தியும் கிளப்பியது கவுல் கும்பல். இராணுவ மந்திரி கிருஷ்ணமேனன் கடற்படை, விமானப்படைத் தளபதிகள் மற்றும் சிவிலியன் அதிகாரிகளைக் கூப்பிட்டு எச்சரிக்கையாக இருக்கும்படி உத்திரவுகூடப் போட்டார். அதன் பிறகு தோராட் மற்றும் எஸ்.டி.வர்மா ஆகிய துணைத் தளபதிகள் மீதும் இம்மாதிரியான சந்தேகங்கள் - குற்றச்சாட்டுகளைக் கிளப்பி உரிய அதிகாரமில்லாத போதும் கவுலை விசாரிக்கச் சொன்னார்கள்.

பின்னால் வங்கதேசப் போரின்போது தளபதியாக இருந்த சாம்மேனக்ஷா அப்போது மேஜர்ஜெனரலாக இருந்தார். ஆங்கிலேயே ராணுவ மரபுகளின் மீது மோகம் கொண்டவர் மேனக்ஷா. அதைக் காரணங் காட்டி ''தேசியத்தலைவர்களை மேனக்ஷா தாக்கிப் பேசுகிறார்; ஆங்கிலேயரை அதீதமாகப் புகழ்கிறார்'' என்று தளபதி தபாரிடம் கவுல் கோள்மூட்டினார். மேனக்ஷா மீது விசாரணைநடத்தி அவர் நாவடக்கத்துடன் நடந்து கொள்ளவேண்டும் என்று எச்சரித்தனர். அவருடைய பதவிஉயர்வு நிறுத்தி

படிப்பகம்

www.padippakam.com

வைக்கப்பட்டது. தபாருக்குப் பிறகு தளபதி யாவதற்காக வேண்டி பல்வேறு சூழ்ச்சி தந்திரங்களில் ஈடுபட்டார் கவுல். நேரு,மேனனிடமிருந்து அதற்கு முழு ஆதரவுமிருந்தது. நேருவின் அரசியல் வாரிசு என்கிற முறையில் கவுல் பிரதமராகக்கூடும் என்று வதந்தி எழுதியது பம்பாய் ஏடு கரண்ட். இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பு நடத்தி ஆட்சியைப் பிடிப்பார் என்கிற வதந்திகூட பரவலாக உலவியது. நேருவுக்குப் பிறகு யார்? என்கிற நூலில் அமெரிக்க எழுத்தாளர் வேலஸ் ஹேங்கென்கூட அவ்வாறு எதிர்பார்ப்பதாக எழுதியிருந்தார். கிருஷ்ணமேனன் தனக்கென சொந்த அதிகாரப்பலத்தை நிறுவிக் கொள்வதற்காகவும், கவுல் தலைமையிலான ஒரு இராணுவ கும்பலை முழுமையாக ஆதரித்தார். பெயரளவுக்கே தபார் தளபதியாக இருந்தார். மற்றபடி கவுல்தான் நேரடியாக நேரு - மேனனுடன் உறவு வைத்துக் கொண்டு இராணுவத்தின் மீது ஆதிக்கம் வகித்தார். இதனால் கடுமையான அதிருப்தியுடைய கவுல் எதிர்ப்பு கும்பல் ஒன்று இராணுவத்துக்குள் உருவாகியிருந்தது.

இந்த நிலைமையில் கவுலின் தவறான ஆலோசனை அடிப்படையில் ''முன்னேறும் கொள்கை''யைத் தீவிரமாக அமுலாக்கும்படி மேனன் கீழிருந்த இராணுவ அமைச்சகம் 1960 மேயில் அனுப்பியது. குறிப்பாக லடாக் -அக்சாய்சின் பிராந்தியத்தில் சாலை வசதி, போதிய துருப்புகள் இல்லாதபோதும் பழைய வர்த்தகப்பாதை வழியே முன்னேறி காரகோரம் கணவாய் அருகே சாவடி அமைக்கும்படி உத்தரவிட்டது. அது நிறைவேறிய பிறகு மேலும் முன்னேறி சிப்சாப் பள்ளத்தாக்கைக் கைப்பற்றும்படியும் சீனக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் ஊருருவிச் சாவடிகள் அமைக்கவும் முயலும்படி உத்திரவிட்டது. ஆனால் சீன இராணுவம் குறுக்கிட்டால் மோதலைத் தவிர்த்துவிட்டு அறிக்கை அனுப்பும்படி அறிவுறுத்தியது. அதேபோல வெளிவிவகாரத்துறை செயலாளரும் உத்திரவு அனுப்பினார். 1960 ஆக -செப்டம்பரில் மீண்டும் ''முன்னேறும் கொள்கை''யை வலியுறுத்தி அரசாங்கத்திடமிருந்து இராணுவத் தலைமையகத்துக்கு உத்திரவு போனது.

இதனால் இராணுவத் தலைமைக்கும் சிவிலியன் தலைமைக்கும் இடையே கடும் கருத்துவேறுபாடுகள் எழுந்தன. மேலும் மேலும் முன்னேறுவது சீனாவின் எதிர்ப்பையும் யுத்தத்தையும் தூண்டும்; அது தவிர்க்க முடியாதது என்று ஓய்வுபெறும் முன்பு திம்மையாவும் துணைத்தளபதி எல்.பி.சென்னும் எச்சரிக்கை அனுப்பினர். ''இராணுவம் தொளதொளப்பாகவும் சோம்பேறித்தனமாகவும் இருக்கிறது; ஏன் இன்னும் முன்னேறவில்லை'' என்று சிவில் அதிகாரிகள் கடிந்து கொண்டனர். இராணுவ நுட்பங்களையோ, இராணுவ பலாபலத்தையோ அறியாத இந்திய அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய சிவிலியன் தலைமை முட்டாள்தனமான உத்தரவுகள் போட்டது. சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் ரோந்துப்பணிகள் மூலம் ஊடுருவி, கொடி மரங்கள் நட்டு சாவடிகள் அமைத்து சுவாதீனப்படுத்திவிட முடியும்; அதன் மூலம் அங்கிருந்து யுத்தமின்றியே சீனர்களை நெட்டித் தள்ளிவிடலாம் என்று கூறினர். இராணுவத் தலைமை எவ்வளவோ மறுத்தும் அதைப் புரிந்துகொள்ளவில்லை.

இந்தச் சமயத்தில் தபார் தலைமைத் தளபதியாகி, கவுல் கும்பலின் ஆதிக்கம் வந்தது. 1961 ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தில் பேசிய நேரு, ''மேற்குப் பகுதியிலும் இராணுவ நிலைமை நமக்குச் சாதகமாக உள்ளது'' என்று அறிவித்தார். அதைப்படித்த தளபதி எஸ்.டி.வர்மா ''பிரதமர் உறுதியளித்தபடி உண்மை நிலைகள் இல்லை'' என்று தலைமைத்தளபதிக்கு அறிக்கை அனுப்பினார். மீண்டும் மீண்டும் ''சாதகமான நிலைமை இல்லை'' என்கிற அறிக்கைகள் அனுப்பி இராணுவத் தலைமையகத்தில் தனது எதிர்ப்பைப் பதிவு செய்து கொள்ளும்படி கோரினார். ஏனென்றால் பிரதமரைத் தவறான பாதையில் இட்டுச்செல்வதில் தாம் பங்கேற்க விரும்பவில்லை என்றார். ''நேருவின் பேச்சுக்கள் பொதுமக்களுக்குத் தீனி போடுபவைதான். மற்றபடி மேற்குப் பகுதியின் உண்மை நிலைமைகள் அரசாங்கத்துக்குத் தெரியும்'' என்று கூறிய தபார், வர்மாவின் அறிக்கைகளை விலக்கிக்கொள்ளும்படி நிர்ப்பந்தித்தார். வர்மா மறுத்துவிட்டார்.

இதனால் மூத்த அதிகாரியாக இருந்தபோதும் வர்மாவை ஒதுக்கிவிட்டு கிழக்கு மற்றும் மேற்கு ஆணையகப் பொறுப்பாளர்களாக முறையே சென்னும், தவுலத் சிங்கும் பதவிஉயர்வு பெற்றனர். வர்மா ராஜினாமா செய்தார். ஆனாலும் தளபதி தோரட்டுடன் சேர்ந்து ஆட்சிக்கவிழ்ப்புக்கு முயன்றதாக வர்மா மீது விசாரணை நடந்தது. ஓராண்டுக்கு அவருடைய ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. இதிலிருந்து நேரு - மேனன் - கவுல் கும்பலுக்கு மாற்றுக்கருத்தோ, எதிர்ப்போ தெரிவிப்பவர்கள் பழிவாங்கப்படுவார்கள் என்பதை அறிந்து மற்றவர்கள் ஊமைகளானார்கள் அல்லது ஆமாம் சாமிகளானார்கள். இருந்தபோதும் இராணுவத்தின் ஆதிக்கக்கும்பல் கனவு கண்டதுபோல முன்னேறவோ, படைப்பெருக்கமோ நடக்கவில்லை. லடாக்கில் ''லே'' வரை சாலை வசதிகூட இல்லை. ஆனால சீனாவின் தரப்பில் பல உட்சாலைகளும், போதிய படைவலிமையும் இருந்தது.

நேரு - கவுல் கும்பலுக்கு எதிரான ராணுவத் தலைமைத் தளபதி திம்மையா.



இப்படி இந்திய - சீன எல்லைத் தகராறு முற்றி, போரைநோக்கிப் போய்கொண்டிருந்த அதே சமயம் சீனாவானது பர்மா, நேபாளம் ஆகிய அண்டைநாடுகளுடனான எல்லைப் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொண்டது. சீனா - பர்மா எல்லையாக மக்மகோன் கோட்டை சீனா அங்கீகரித்து ஏற்றுக் கொண்டது. அதற்குக் காரணம் 1894, 1897, 1941 ஆகிய ஆண்டுகளில் பிரிட்டனுடனான ஒப்பந்தங்களில் மக்மகோன் கோட்டை சீனா - பர்மா எல்லையென சீனா ஒப்புக்கொண்டிருந்தது. எல்லை வரையறுக்க முடியாத நாம்வான் பிராந்தியத்தை பர்மாவுக்கு சீனா விட்டுக்கொடுத்து, அதற்கு பதிலாக பிமாவ் பகுதியைப் பெற்றது. இந்திய - சீன எல்லையாக மக்மகோன் கோட்டை' ஒருபோதும் சீன அரசு ஏற்றுக் கொண்டதில்லை. இருந்தபோதும் சீன -பர்மா ஒப்பந்தத்தைப் பின்பற்றி எல்லைத் தகராறைத் தீர்த்தக் கொள்ள முடியும் என்று சீன அரசு ஏடு எழுதியது. அதன் சாதகமான தன்மையைப் பார்க்க மறுத்த இந்திய அரசு, ''இந்திய சீன எல்லை குறித்துப் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை'' என்று ஒருதலைப்பட்சமாக தான் உரிமை பாராட்டுவதை ஏற்றுக் கொள்ளும்படி வாதாடியது.

அதன்பிறகு சீனா - பாகிஸ்தான் எல்லைப் பேச்சுவார்த்தைகள் துவங்கியபோது, காஷ்மீர் பிரச்சினை முன்னுக்கு வந்தது. காஷ்மீரில் பெரும்பான்மையான மக்கள் முஸ்லீம்களாக இருந்தபோதும் அதன் இந்து மகாராஜா இந்தியாவுடன் இணைப்பதாக முடிவெடுத்தார். காஷ்மீர் இனமக்களின் சுய நிர்ணய உரிமையை மதியாது இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீரைக் கூறுபோட்டுக் கொண்டன. நடுநிலையாளர் மேற்பார்வையின் கீழ் காஷ்மீர் இனமக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தி முடிவுசெய்ய வேண்டும் என்கிற ஐ.நா.சபைத் தீர்மானங்களை இரு நாடுகளும் ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டன. ஆனால் 1954க்குப் பிறகு ''காஷ்மீர் -இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி; அதன் மீது கருத்துக்கணிப்புக்கு இடமில்லை'' என்று இந்திய அரசு அடாவடித்தனமாக மறுத்துவிட்டதோடு கருத்துக்கணிப்பு -சுயநிர்ணய உரிமை கோரும் காஷ்மீர் இனத்தவரை ஒடுக்கிவந்தது. ஐ.நா.சபைத் தீர்மானத்தை பாகிஸ்தான் இன்னமும் ஏற்றுக் கொண்ட போதும், அதன் கட்டுப்பாட்டில் உள்ள ''ஆசாத் காஷ்மீரின்'' சீனாவுடனான எல்லைப் பிரச்சினை மீது பேச்சுவார்த்தைகள் தொடங்கியது. ''காஷ்மீர் முழுவதும் இந்தியாவுக்கே சொந்தம்; எனவே பாகிஸ்தானுக்கு சீனாவுடன் எல்லையே கிடையாது'' என்று இந்தியா கடுமையாக எதிர்த்தது. இருந்தபோதும் இரு நாடுகளுக்கிடையே தற்காலிகமாக எல்லையை வரையறுப்பதாகவும், காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா - பாகிஸ்தான் தகராறு தீரும்போது மறுபரிசீலனை செய்து மீண்டும் எல்லையை வரையறுக்கச் சம்மதிப்பதாகவும் சீனாவும் பாகிஸ்தானும் 1962 மேயில் ஒப்பந்தம் போட்டன.

படிப்பகம்

www.padippakam.com

பத்தாண்டுகளாக பாகிஸ்தானுடன் பகைமை பாராட்டி வந்தபோதும் எல்லைப் பிரச்சினையில் இந்திய நிலைப்பாட்டையே ஆதரிக்கும்படி பாகிஸ்தானை இந்தியா வலியுறுத்தியது. "இந்தப் பிரச்சினையில் பாகிஸ்தானை நட்பு முறையில் அணுகுகிறோம். ஏனெனில் எல்லை விவகாரத்தில் நாம் எடுக்கும் நடவடிக்கையோடு பொருந்தும் வகையிலேதான் பாகிஸ்தானின் நடவடிக்கையும் இருக்க வேண்டும்; அதற்கு முரணானதாக இருக்கக் கூடாது என்று கருதுகிறோம்" என்று நேரு நயவஞ்சகமாக பேசினார் (7.5.62 நாடாளுமன்ற உரை). அதாவது ஆஃப்கானில் இருந்து கார கோரம். கணவாய் வரையிலான எல்லை பழக்கவழக்கம், மரபு மற்றும் ஒப்பந்தங்களால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது; எல்லை விவகாரமே கிடையாது; பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை சீனாவிடம் பாகிஸ்தான் மறுத்துவிட வேண்டும் என்று வலியுறுத்தினார் நேரு.

அதற்கு மாறாக எல்லைகள் வரையறுக்கப் படவில்லை என்கிற சீன நிலைப்பாட்டை ஏற்று பேச்சுவாத்தைகள் நடத்தி, 1962 டிசம்பரில் அதிகாரபூர்வமாகக் கையொப்பமிட்டது, பாகிஸ்தான். பழைய வரைபடங்கள் அடிப்படையிலான பங்கு கோருவதை பாகிஸ்தான் விட்டுக்கொடுத்தது; சீனா தனது கட்டுப்பாட்டில் இருந்த 750 சதுரமைல் பிராந்தியத்தை விட்டுக்கொடுத்தது. 1899இல் சீனாவிடம் பிரிட்டிஷ்அரசு முன்வைத்த எல்லை வரையறைக்கு ஏறக்குறைய பாக் - சீன ஒப்பந்தம் பெருமளவுக்கு ஒத்திருந்தது. இந்தக் காலத்திலேயே ஆஃப்கான், நேபாளம் மற்றும் மங்கோலியாவுடனான எல்லைகளை வரையறுத்து சீனா ஒப்பந்தங்கள் போட்டது. வரைபடத்திலுள்ள சில சிக்கல்கள் காரணமாக ருஷ்யாவுடனான சீன எல்லை மட்டுமே வரையறுக்கப்படாமல் இருந்தது.

இந்திய - சீன எல்லை விவகாரத்தில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா என்று அறிந்துவர தனது பங்காளியும் வெளியுறவுத்துறைப் பொதுச் செயலாளருமான பி.கே.நேருவை பீகிங்குக்கு நேரு அனுப்பினார். "சீன நிலைப்பாட்டில் மாற்றமில்லை; பேச்சுவார்த்தை மூலம் எல்லைப்பிரச்சினையைத் தீர்க்கத் தயாராக உள்ளது" என்று செள என் லாயைச் சந்தித்த பி.கே.நேரு திரும்பிவந்து கூறினார்.

உடனே "சீனாவுக்கு விட்டுக்கொடுக்க நேரு முயல்கிறார்" என்கிற கூச்சல் இந்தியாவில் கிளம்பியது. "பேச்சு என்றால் சமரசப்பேச்சு வார்த்தைக்கானதல்ல; விளக்கமளிப்பதற்கானது" என்று வழக்கமான பாணியில் சவடாலடித்தார் நேரு (ஃபிலிக்ஸ் கிரீன் எழுதிய ஒரு அறியாமைத் திரை, பக்:233). 'மங்கோலியாவுக்குப் போயிருந்த வெளியுறவு செயலாளர் வசதியானவழி என்பதற்காகத்தான் பீகிங் போனார்;பேச்சு வார்த்தைக்காக அல்ல' என்று புளுகினார் நேரு. ஆக சீனாவுடன் போர் தவிர எல்லைப் பிரச்சினைக்கான தீர்வே கிடையாது என்கிற தற்கொலைப் பாதையில் தொடர்ந்து பயணம் செய்தது இந்தியா.

(தொடரும்)



# சிறைக் கைதிகளின் உரிமைக்கான போராட்டம்!

பரந்துபட்ட மக்களை அடக்கி ஒடுக்கி ஆளுவதற்கான சித்திரவதைக்கூடம்தான் சிறைச்சாலை. அங்கே அப்பாவி கைதிகளிலிருந்து அரசியல் கைதிகள் வரை அனைவரும் உரிமைகளற்ற அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். கைதிகளின் சட்டபூர்வ உரிமைகளுக்காகப் போராடினாலோ, அநீதிகளைத் தட்டிக்கேட்டாலோ அவர்கள் மிருகத்தனமாக அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். ஆனால் சார்லஸ் சோப்ராஜ் போன்ற சர்வ தேச கிரிமினல் குற்றவாளிகளுக்கு சிறைச்சாலைகள் உல்லாச சொர்க்கபுரியாக இருக்கிறது. சிறைத்துறை ஐ.ஜி.க்களும், கண்காணிப்பாளர்களும் கைதிகளுக்கு ஒதுக்கப்படும் அற்பநிதியைச் சுறையாடும் பகற் கொள்ளையர்களாக இருக்கிறார்கள்.

இந்நிலையில், கடலூர் மத்தியசிறையில் ஆயுள்தண்டனைக் கைதிகளின் அவசரகால விடுப்பு மறுக்கப்படுவதை எதிர்த்தும் சில அடிப்படை வசதிகளைக் கோரியும் கடந்த மார்ச் 6ந் தேதி முதலாக ஆயுள் தண்டனைக் கைதிகள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் துவக்கியுள்ளனர்.

1) அவசரகால விடுப்பை வழித்துணைக் காவலின்றி வழங்க வேண்டும். 2) கடலூர் மத்திய சிறையை 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பனிஷ்மெண்ட் **(Punishment)** சிறையென அறிவித்ததை ரத்து செய்து ஆயுள் தண்டனை சிறைவாசிகளை அவரவர்களின் தாய்சிறைக்கு திரும்ப அனுப்ப வேண்டும். 3) 10 ஆண்டுகள் தண்டனை கழித்த ஆயுள் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். 4) 18.12.1978க்குப் பிறகு ஆயுள்தண்டனை பெற்ற சிறைவாசிகளை 433A பிரிவை ரத்து செய்வதன் மூலமாக 14 ஆண்டு என்பதை 10 ஆண்டுகளாகக் குறைத்து முன்விடுதலைக்கு பரிசீலனை செய்யவேண்டும். 5) கைதிகளுக்கு வழங்கப்படுகின்ற உணவு சிறை அதிகாரிகளின் ஊழலுக்கு ஊற்றுக்கண்ணாக இருப்பதால் கடலூர் மத்தியசிறையில் மறுக்கப்பட்டுள்ள நரசிம்மன் கமிஷன் பரிந்துரையின்படி, கைதிகள் உணவை சிறை பஞ்சாயத்துக்குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அதை சர்வகட்சிக்குழு கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். 6) தண்டனைக் காவலர் முறையை ரத்து செய்ய வேண்டும். 7) சிறைக் காவலர்களுக்கு 8 மணிநேர வேலையும் ஒரு வேளை உணவும் வழங்கப்பட வேண்டும். 8) இந்திய அரசு நியமித்த முல்லா கமிஷன், தமிழக அரசு நியமித்த நரசிம்மன் கமிஷன் பரிந்துரைகளின்படி அவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். 9) தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அயல் மாநிலத்தில் தண்டனை பெற்று தமிழக சிறையில் தண்டனைக் கழித்துவரும்போது, தமிழக சிறையில் வழங்கப்படுகின்ற 'பரோல்' முதலான அனைத்து உரிமைகளையும் மாநில வேறுபாடின்றி அவர்களுக்கும் வழங்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை பல முறை அரசிடமும் அதிகாரிகளிடமும் வலியுறுத்தியும், இதுவரை நிறைவேற்றப்படாததால், புதிய அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்து அவற்றை நிறைவேற்றக் கோரி 30 ஆயுள்தண்டனைக் கைதிகள் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

சிறைவாசிகள் போராட்டம் ஓங்குக!

தகவல்: சிறைவாசிகள்
மத்திய சிறை, கடலூர்.


'புதிய ஜனநாயகம்' பற்றிய அறிக்கை
4வது பாரம் (8-ம் பிரிவுப்படி)


| | | | |
|---|---|---|---|
| 1 | வெளியிடும் இடம் | — | சென்னை |
| 2 | வெளியிடும் காலம் | — | மாதம் இருமுறை |
| 3 | அச்சிடுபவர் | — | எம்.கே.சாமி |
| | இந்தியரா? | — | ஆம |
| | முகவரி | — | பிரேம் பிரஸ் 107-ஏ பெரியார்பாதை (மேற்கு) சூளைமேடு, சென்னை-94 |
| 4 | வெளியிடுபவர் | — | எஸ் மதியழகன் |
| | இந்தியரா? | — | ஆம |
| | முகவரி | — | 21 பாலாஜிசிங்தெரு, சைதாப்பேட்டை சென்னை - 15 |
| 5 | ஆசிரியர் | — | எஸ் மதியழகன் |
| | முகவரி | — | 21 பாலாஜிசிங்தெரு, சைதாப்பேட்டை சென்னை - 15 |
| 6 | உரிமையாளர் | — | எஸ் மதியழகன் |
| | முகவரி | — | 21 பாலாஜிசிங்தெரு, சைதாப்பேட்டை சென்னை - 15 |

எஸ் மதியழகனாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்

(ஒப்பம் - எஸ் மதியழகன்)
வெளியிடுபவர்

1 3 1989


படிப்பகம்



# இதுதான் இன்றைய இந்தியா

தசை என்ற பகுதியே உடம்பில் இல்லாமல் வெறும் எலும்பும் தோலும் கொண்டு உயிர்வாழும் இந்த சிறுவர் - சிறுமியர் ஒரிசா மாநிலத்தின் பண்டா மலைவாழ்மக்களின் குழந்தைகள். சொந்த நாட்டுமக்கள் எப்படி உயிர் வாழ்கிறார்கள் என்ற விபரங்களைக் கூட காணமறுத்து வக்கிரவாழ்வில் மூழ்கித் திளைக்கும் காங்கிரசு கொலைபாதகர்கள் ஆட்சியில் உயிரோடு கொல்லப்படும் உழைக்கும் மக்களின் செல்வங்கள்! நாற்பதாண்டுகால 'சுதந்திர'த்தைப் பதவிசுகத்திலயே கழித்த காங்கிரசு பெருச்சாளிகள் இது நாள் வரையில் இம்மக்களை ஏறெடுத்து பார்த்ததுகூட இல்லை. உண்மைதான்! இம்மக்களின் வாழ்நிலை பற்றியான முதல் விபர ஆய்வு இப்போதுதான் நடத்தப்படுகிறது என்று வெட்கமில்லாமல் சொல்கிறது ஒரிசா மாநில காங்கிரசு அரசு. ஆய்வுசெய்யப்பட்ட விபரங்கள் அதிர்ச்சி தருகின்றன! அம்மலைவாழ் மக்களின் மொத்த குழந்தைகளுமே தொடர்ச்சியாக மலேரியா காய்ச்சலில் பாதிக்கப்பட்டு, கவனிப்பாரற்று சிறுவயதிலேயே பெருமளவில் இறந்து விடுகின்றனர். தப்பிப் பிழைத்திருக்கும் குழந்தைகள் இப்படி கால்சூம்பி வயிறுஊதி தேவாங்கு போல் காட்சியளிக்கின்றனர். இவ்வளவு தெரிந்தும் இன்னும் இக்குழந்தைகளுக்கு எந்தஒரு மருத்துவ உதவியும் செய்யவில்லை பிணந்தின்னி காங்கிரசு அரசு!

இதோ, கிடைத்தற்கரிய பொக்கிஷமான 100 புட்டி மனிதரத்தம் குப்பையாக வீசப்பட்டிருப்பதை பாருங்கள்.

தேவையான பாதுகாப்பு இடமில்லை என்று காரணம் கூறி மனிதஉயிர் காக்கும் 1000 புட்டி ரத்தத்தை சேமித்து வைத்த 8 ஆம் நாளில் குப்பையில் வீசிவிட்டது மே.வங்க மாநிலத்தின் ரத்தவங்கி. இன்னும் 1500 புட்டி மனிதரத்தத்தையும் இடமின்மையால் எறிந்து விடப்போகிறோம் என்று எந்தஒரு குற்ற உணர்வும் இல்லாமல் கூறுகிறது. பாதுகாப்புடன் சேமித்து வைக்கப்படும் மனித ரத்தத்தை அதிகபட்சம் 19 நாட்கள் வரை பயன்படுத்தலாம் என்கிறது மருத்துவ விஞ்ஞானம். அதற்கான நேரமிருந்தும், அச்சாதனங்களுக்கு சில லட்சம் ரூபாய்களே தேவையென தெரிந்திருந்தும் இதைப்பற்றி சிறிதும் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை போலிகளின் மே.வங்க அரசாங்கம். ஒருபுறம் இப்படி உயிர்காக்கும் ரத்தத்தை வீசிவிட்டு தினமும் உயிருக்காக போராடும் 50க்கும் மேற்பட்ட அபாயகட்ட நோயாளிகளுக்கும் ரத்தம் இல்லை என்று கையை விரிக்கிறது மே.வங்க ரத்தவங்கி. கல்கத்தா மாநிலத்தில் மட்டும் விபத்தில் சிக்கி 40 சதவிகிதம் பேர் தேவையான ரத்தம் இல்லாமல் உயிரிழக்கின்றனர் என்று தெரிந்திருந்தும் இப்பாதகச்செயலை செய்கிறது மே.வங்க அரசு. மறுபுறம், இந்திய திரைப்படவிழா என்றும் மதப்பண்டாரங்களின் நினைவுநாள் கொண்டாட்டங்கள் என்றும் பல கோடி ரூபாய்களை வாரியிறைக்கிறது.

போலிகளின் மே.வங்க ஆட்சியில் மட்டுமல்ல இந்தியா முழுமைக்கும் இதுதான் நிலைமை. சமீபத்தில் டெல்லியில் நடந்து முடிந்த மனிதவள மறுஉற்பத்தி ஆய்வு மையக் கூடம் இந்தியா முழுமையும் ஆய்வுசெய்து அதிர்ச்சி தரும் பல உண்மைகளை அறிவித்தது. பெரும்பாலான மருத்துவமனைகளில் அவசர முதலுதவிக்கு அத்தியாவசியமான பிராணவாயுகூட இல்லை என்றும், ஊசிமருந்துக் குழாய்களையும் சிறு அறுவை சிகிச்சை செய்யப்பயன்படும் உபகரணங்களையும் நீராவி முறையில் சுத்தம் செய்யக் கூட தேவையான சாதனங்கள் இல்லை என்கிறது. ஒருபுறம், ஆட்சியாளர்களின் காமவெறி கூத்துக்கும், பக்திரசனைக்கும், ஆடம்பர வாழ்விற்கும் மக்களின் வரிப்பணம் மண்ணாய் போகிறது. மறுபுறம் உழைக்கும் மக்கள் நடைபிணங்களாக உயிர்வாழும் கொடுமை! மனிதர்களை மனிதமிருகங்கள் ஆள்வதை இன்னும் எத்தனை நாள்தான் சகித்துக் கொண்டிருப்பது?

